# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No. 4 of 2004**
**ISBN 1173-7255**

*இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.*

*ஆசிரியர்: ஆர். பாலா*
**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www. biblelamp.org

*"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."*

*சி. எச். ஸ்பர்ஜன்*
1834-1892

தமிழ் மக்கள் மத்தியில் கிறிஸ்தவம் இன்று இருக்கின்ற நிலையைப் பார்த்து வருந்தாத வேதமறிந்த ஆத்துமா இருக்க முடியாது. வேதம் தெரியாது, சபை என்ற பெயரில் நடக்கும் சடங்குகளுக்கு பலியாய்ப் போனவர்களுக்கும், உணர்ச்சிகளுக்கு அடிமையாய்ப் போனவர்களுக்கும் இந்த வருத்தம் தெரியாது. சபை வரலாற்றில் ஒரு இருண்ட காலத்தைக் குறித்து வாசிக்கிறோம். சத்தியப் பஞ்சமும், வசன வரட்சியும் இருந்த காலமது. கர்த்தர் தம் மக்களைவிட்டு விலகிப்போனதுபோல் காணப் பட்ட காலமது. அத்தகையதொரு இருண்ட காலத்தில் தமிழ் கிறிஸ்தவம் இன்று இருந்துவருகிறது. எசேக் கியல் 34-ல் நாம் வாசிப்பதுபோல் சபைத் தலைவர் கள் மந்தையை மேய்க்காமல் தங்களை மேய்த்துக் கொண்டும், ஆடுகளை மோசம் செய்து குடும்ப ஊழி யம் நடத்தி சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் இருந்து வருகிற காலமிது. கத்தோலிக்க மதமும், அதற்கு அனுசரனையாக இருக்கும் பாரம்பரிய சபைகளும், பெந்தகொஸ்தே மாயமானும் கிறிஸ்தவ அரிதாரம் பூசி சமுதாயத்தை ஏய்த்து வருகிற காலமிது. இஸ்ரவேலில் இராஜா இல்லாததால் தனிஊழியம், சொந்த ஊழியம் என்று ஊழியத் தகுதி இல்லாதவர்கள் எல்லாம் கடை நடத்தி வரும் காலமிது. வாசிப்பதற்கு நல்ல பயனுள்ள நூல்கள் அருகிக் காணப்படும் காலமிது. சபை வரலாற்றில் 16-ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இருண்ட காலத்தைப் பிரதிபலித்து தமிழினத்தின் மத்தியில் கிறிஸ்தவம் இன்று இருந்து வருகிறது. பொதுக் கல்வி அறிவிலும், தொழில் நுட்பத்திலும், சமுதாய ஏணியிலும் உயரப் போய் என்ன பயன்? சாதியையும், சடங்கையும், மூடநம்பிக்கைகளையும், சிந்திக்க மறுக்கும் மனதையும் வளர்த்துக் கொண்டு ஆத்தும விருத்தியில் அடிமட்டத் தில் இருந்து வருகிறது தமிழ் கிறிஸ்தவம். "இரவிலே வாங்கினோம் சுதந்திரம், இன்னும் விடியவே இல்லை" என்று ஒரு தமிழ்க் கவிஞன் இந்திய நாட்டின் நிலை பற்றிப் பாடினான். தமிழ் கிறிஸ்தவத்திற்கு விடிவு காலம் எப்போது வரும்? என்று என்னால் ஆதங்கத் தோடு கேட்காமல் இருக்க முடியவில்லை. வேதபூர்வ மான சபைகளும், தம்மை வளர்க்காமல் மந்தையை நேசிக்கும் போதகர்களும், பிரசங்கத்திலும் வசனத் திலும் தீவிர ஆர்வம் காட்டும் ஆத்துமாக்களும் நம்மினத்தில் மட்டும் அருகிக் காணப்பட வேண்டுமா? என்று என்னால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடிய வில்லை. லூதரும், கல்வினும், எட்வர்ட்சும், ஸ்பர்ஜனும் நம்மினத்திலும் தோன்ற வழி ஏற்படாதா? என்று என்னால் ஏங்காமல் இருக்க முடியவில்லை. இந்த ஏக்கம் ஆனந்தத்தில் என்று போய் முடியும்?

# கொள்கைகளற்ற கிறிஸ்தவமா?

"இயேசு போதும், கொள்கை வேண்டாம்" என்பது தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படும் கருத்தாக இருக்கின்றது. இயேசு வேறு, கொள்கை வேறு என்று பிரித்துப் பார்ப்பதை சபைப் போதகர்களில் இருந்து சாதாரண கிறிஸ்தவர்கள் வரை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஒரு முறை ஒரு போதகர் சொன்னார், "இறையியல் கோட்பாடு இருபத்தைந்து வீதம் இருந்தால் போதும், எழுபத்தைந்து வீதம் நடைமுறைக்கு அவசியமான காரியங்களில் தான் போதனை தேவை" என்று. இறையியல் வேறு, நடைமுறைப் போதனை வேறு என்று பிரித்துப் பார்க்கும் இந்தப் போதகர் தமிழ் கிறிஸ்தவ போதகர்களை பிரதிபலிக்கின்ற ஒரு உதாரணம்தான்.

இறையியல் கொள்கைகளைக் கண்டு தமிழ் கிறிஸ்தவம் பயந்து ஓடுவதற்குக் காரணமென்ன? இறையியல் கொள்கைகளும், போதனைகளுமற்ற பிரசங்கங்கள் தமிழ் கிறிஸ்தவத்தை பல்லாண்டுகளாக அலைக்களித்து வருவதற்குக் காரணமென்ன? கொள்கைகளை நிராகரித்து இயேசுவுக்கும், கோட்பாடுகளுக்கும் சம்பந்தமேயில்லை என்று தமிழ் கிறிஸ்தவம் முடிவு கட்டியிருப்பதற்குக் காரணமென்ன? என்ற கேள்விகளை நம்மால் கேட்காமல் இருக்க முடியவில்லை. இதற்கு நான்கு முக்கிய காரணங்கள் இருப்பதாக எனக்குத் தெரிகிறது.

*(1)* பெந்தகொஸ்தே இயக்கம் உருவாவதற்கு முன்பு பாரம்பரிய சபைகள் (Traditional Churches) ரோமன் கத்தோலிக்க மதத்தைப்போல மாறி சத்தியத்தை விற்று சடங்குகளுக்கு இடம் கொடுத்ததால் ஆத்துமாக்கள் பிரசங்கப் பஞ்சத்தால் வாட ஆரம்பித்து சத்தியத்தை அறியமுடியாமல் சடங்குகளை சத்தியமாகக் கருதி வளரும் நிலை உருவானது. இதன் காரணமாக சீ. எஸ். ஐ, மெத்தடிஸ்டு, லூதரன், ஆங்கிலிக்கன் சபைகள் அனைத்தும் இன்றும் சடங்குகளை மட்டுமே பின்பற்றி சபை நடத்தி வருகின்றன. இச்சபைகளுக்குப் போகிறவர்களுக்கு சத்தியமென்றாலே என்னவென்று தெரியாது. இவர்கள் மத்தியில் சத்தியத்தைப் பிரசங்கிக்கிற போதகர்கள் விரல்விட்டு எண்ணுமளவுக்குக்கூட இல்லை. சடங்குகளைப் பின்பற்றி மக்களை இன்றும் இருட்டில் வைத்திருக்கின்றன இந்த சபைப்பிரிவுகள்.

(2) இரண்டாவதாக, கொள்கைகளைவிட்டு விலகியோடும் நிலையில் தமிழ் கிறிஸ்தவம் இருப்பதற்கு பெந்தகொஸ்தே இயக்கம் ஒரு முக்கிய காரணம். தனிமனித ஆத்மீக அனுபவத்திற்கு முதல் எதிரி கொள்கைகளே என்ற கோஷத்தோடு ஆரம்பமான பெந்தகொஸ்தே இயக்கம், பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய வேதம் போதிக்காத போதனைகளை உருவாக்கி ஆத்துமாக்கள் தங்களுடைய ஆத்மீக வளர்ச்சிக்கு நேரடியாக ஆவியை

*நாடிப்போக வேண்டும் என்று போதிக்க ஆரம்பித்ததால் வேதம் புறக் கணிக்கப்பட்டு வேதகொள்கைகள் நிராகரிக்கப்பட்டன. "சொந்த அனுப வமே சொர்க்கம்" என்று அலைய ஆரம்பித்த தமிழ் உள்ளங்கள் ஆவியின் சத்தியவேதம் என்று ஒன்றிருப்பதையே மறக்க ஆரம்பித்ததால் கொள்கை களற்ற போலிக் கிறிஸ்தவம் தமிழ் மக்கள் மத்தியில் தலைவிரித்தாட ஆரம்பித்தது.*

*(3) மூன்றாவது காரணமாக தமிழ் பேசும் மக்கள் வாழும் இடமெல்லாம் பல்கிப்பெருகி கிறிஸ்தவ உலகைக் கைக்குள் போட்டு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அநேக கிறிஸ்தவ ஸ்தாபனங்களையும் சேர்த்துக் கொள் ளலாம். இந்த ஸ்தாபனங்கள் தங்களை வளர்த்துக் கொள்வதற்கு கொள் கைகள் தடையாக இருக்கும் என்ற காரணத்தால் எல்லாப் போதனை களையும், சபைகளையும் அரவணைத்துப் போகும் போக்கைப் பின்பற்றி வேதம் சார்ந்த கொள்கைகளை வாழமுடியாதபடி செய்து வைத்திருக் கின்றன.*

*(4) நான்காவதாக, தமிழ் கிறிஸ்தவர்கள் மனதில் கொள்கைகள் கிறிஸ்த வர்களைப் பிரித்து வைக்கும் என்ற தவறான எண்ணம் ஊறிப்பதிந்திருக் கிறது. இந்தத் தப்பெண்ணத்தாலும், கிறிஸ்தவர்கள் ஒன்றாயிருக்க வேண் டும் என்பதற்காகவும் பெரும்பாலான தமிழ் கிறிஸ்தவர்கள் கொள்கை களில் ஆர்வம் காட்டாமல் இருந்து வருகிறார்கள். இப்படிக் கொள்கை களைப் புறக்கணித்ததால் போலிப் போதனைகள் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றன.*

## கொள்கை என்றால் என்ன?

*முதலில் கொள்கை* (Doctrine) *என்றால் என்ன என்பதை ஆராய்வது அவசியம். கொள்கை என்ற வார்த்தையை சித்தாந்தம், போதனை, கோட் பாடு என்ற பெயர்களிலும் அழைக்கலாம். ஏதாவதொன்றைப் பற்றிய வரையறுக்கப்பட்ட ஒரு முடிவே கொள்கை. "உலகம் உருண்டை வடிவ மானது" என்று கூறினால் நாம் உலகத்தைப் பற்றிய வரையறுக்கப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்கின்றோம் என்று அர்த்தம். அது உலகத்தைப் பற்றிய ஒரு கொள்கை. அந்த முடிவை நாம் தெளிவான சில காரணங் களின் அடிப்படையில் எடுக்கிறோம். உலகத்தைப் பற்றி இப்படி நாம் பல முடிவுகளுக்கு வந்து பல கொள்கைகளை வகுத்துக் கொண்டிருக் கிறோம். உலகம் பற்றிய இந்தக் கொள்கைகள் அவசியமில்லை என்று வாதாடுகிறவர்கள் உலகத்தில் இருக்க முடியாது.*

*எந்தக் காரியத்தைப் பற்றியும் மனிதன் வகுக்கும் கொள்கைகள் சரியான வையாக இருந்துவிடாது. தவறான கொள்கைகளும் உண்டு. "மனிதன் குரங்கில் இருந்து தோன்றினான்" என்றார் டார்வின். அது தவறான கொள்கை என்பதை நாம் சில முக்கிய ஆதாரங்களை வைத்து நிராகரிக் கிறோம். அதுவும் ஒரு கொள்கைதான் ஆனால், தவறான கொள்கை.*

*மனிதகுலம் இருக்குமிடமெல்லாம் அவர்கள் மத்தியில் கொள்கைகள் இருக்கின்றன. கொள்கைகளற்ற ஒரு சமுதாயத்தை நாம் பார்க்க முடியாது. காட்டு மனிதனான ஆதிவாசிகூட மொழி, கலை, சமூக வளர்ச்சிகளை அடையாத நிலையிலும் தனக்கென்று சில கொள்கைகளை வளர்த்துக்*

கொண்டிருக்கிறான். மனிதன் மனிதனாக வாழ கருத்துக்களும், கொள்கை களும் அவசியம். கொள்கைகள் அவசியமில்லை என்று கூறுவது கூட ஒரு கொள்கை என்பதை அறியாதவர்கள் இருக்கிறார்களா? நம்மைப் படைத்த கர்த்தர் நமக்கு சிந்திக்கும் மனதைத் தந்து, மொழியைத் தந்து தம்மைப் பற்றிய பல உண்மைகளை வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த உண்மைகளை அவர் இயற்கையின் வாயிலாகவும், எழுத்தில் நமக்களித் துள்ள வேதத்தில் இருந்தும் அறிந்து கொள்கிறோம். அப்படியாக கர்த்த ருடைய குணாதிசயம், தன்மை, செயற்பாடு, கட்டளைகள் என்பவை பற்றி நாம் அறிந்து கொள்ளும்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கிற உண்மை களே கொள்கைகள். இதனை 'இறையியல்' என்ற பெயரிலும் அழைக்க லாம் (Theology). அதாவது இறைவனைப் பற்றிய உண்மைகள் இறையியல் அல்லது இறையியல் கொள்கைகள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் பார்க்கிறபோது கொள்கைகள் வேண்டாம் என்று கூறுவது கர்த்தரைப் பற்றிய சத்தியங்கள் எனக்குத் தேவையில்லை என்று கூறுவதற்கு ஒப்பாகும். கர்த்தரைப் பற்றிய சத்தியங்களை நிராகரிப்பவர்கள் கர்த்தரைப் பற்றிய எந்த அறிவும் இல்லாதவர்களாக மட்டுமே இருக்க முடியும். அது இறுதியில் அவர்களுடைய ஆத்மீக வாழ்க்கைக்கு பெருந்தீங் காகவே போய் முடியும்.

## இயேசு மட்டும் போதுமா?

"கொள்கை வேண்டாம், இயேசு மட்டும் போதும்" என்ற வாதத்தை எடுத்துக் கொள்வோம். இது கேட்பதற்கு நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால், இதை ஆராய்ந்து பார்த்தால் பெரும் ஆபத்திருப்பதை புரிந்து கொள்ளலாம். இயேசு வேறு, இறையியல் கொள்கைகள் வேறா? இயேசு கிறிஸ்து இறையியல் கோட்பாடுகளை நிராகரித்தாரா? இறையியல் கொள்கைகளற்ற இயேசு கிறிஸ்துவை நாம் வேதத்தில் பார்க்கிறோமா? என்ற கேள்விகளுக்குப் பதிலளிப்பது அவசியம். இயேசு கிறிஸ்து இந்து மதத்தில் நாம் பார்ப்பது போல் வெறும் கல்லல்ல. அவர் ஜீவனுள்ள ஒரே தேவனின் குமாரன். அவருடைய தெய்வீகத்தையும், மானுடத்தையும் பற்றி நாம் வேதத்தில் வாசிக்கிறோம். அவர் கர்த்தர். அவருடைய குணா திசயங்கள், வல்லமை, பரிசுத்தம், போதனைகளைப் பற்றி வேதம் விளக்கு கிறது. அப்படியிருக்க இயேசுவை அவருடைய குணாதிசயங்களிலிருந்தும், போதனைகளிலிருந்தும் எப்படிப் பிரித்துப் பார்க்க முடியும். அப்படிப் பிரித்துப் பார்ப்பது அவரை ஜீவனற்ற தேவனாக, வெறும் கல்லாக்க முயல்வதற்கு ஒப்பானதாகும். இயேசு கிறிஸ்துவை அவரைப் பற்றிய போத னைகளிலிருந்து பிரிக்க முடியாது. இயேசு வேறு, அவருடைய போதனை கள் வேறு அல்ல. இயேசுவைப் பற்றிய அறிவில் நாம் வளர வேண்டுமா னால் அவரைப் பற்றி வேதம் தரும் போதனைகளில் இருந்து மட்டுமே அறிந்து கொள்ள முடியும். வேறுவிதங்களில் அவரை அறிந்து கொள்ள முடியாது. இயேசுவே தன்னுடைய வார்த்தையில் தம்மைப் பற்றி விளக்கி யிருக்கிறார். இயேசு கிறிஸ்துவை அவருடைய வார்த்தையில் இருந்து பிரிக்க முடியாது. அவருக்கு 'வார்த்தை' என்ற பெயரும் இருக்கிறது (யோவான் 1).

"கொள்கை வேண்டாம், இயேசு மட்டும் போதும்" என்ற குரல் எழுவ தற்கு காரணம் இன்று தமிழர் மத்தியில் கிறிஸ்தவம் என்ற பெயரில்

காணப்படும் கூட்டம் வேதத்தின் அருமை தெரியாமல் அதைப் புறக் கணித்திருப்பதுதான். வேதப் பிரசங்கத்தை இல்லாமலாக்கி சடங்குகள் நிறைந்து வழியும் சபைகளாக பாரம்பரிய சபைப்பிரிவுகள் இருந்து வருகின்றன. இயேசு கிறிஸ்துவின் பெயர் அந்த சபைப்பிரிவுகளில் பயன் படுத்தப்பட்டு வந்தபோதும், கிறிஸ்துவின் சத்தத்தை கேட்கமுடியாதபடி வேதம் அங்கே மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. வேதத்தின் பொதுவான போதனைகளைக்கூட அறியாமல் ஆராதனை என்ற பெயரில் அங்கெல் லாம் மக்கள் கூடி வெறும் சடங்குகளைப் பின்பற்றி வருகிறார்கள். அங் கிருக்கும் போதகர்களுக்கு வேத அறிவில்லை, வேத நம்பிக்கையுமில்லை. அரசரடி இறையியல் கல்லூரி போன்ற இடங்களில் பட்டங்களைப் பெற் றுக்கொண்டு போதகப்பணிபுரிய வந்திருக்கும் பலருக்கு கர்த்தரைப் பற்றிய வேத அறிவோ பயமோ இருப்பதில்லை. தங்கள் சொந்த வாழ்க்கையில் மறுபிறப்படைந்து இயேசுவை அறியாமல் இருப்பவர்களால் அவரைப் பற்றி ஆத்துமாக்களுக்கு எப்படி விளக்க முடியும்? இயேசு கிறிஸ்துவும் அவருடைய வழிபாடும் வெறும் சடங்காக சபைகளில் காணப்படுகிற போது சத்தியம் அங்கே இல்லாமல் போய் விடுகிறது.

பாரம்பரிய சபைகள் அல்லாத சபைப்பிரிவுகளான சகோதரத்துவ சபை களிலும், பாப்திஸ்து சபைகளிலும் வேதம் பயன்படுத்தப்படுகிறபோதும் பெரும்பாலான போதகர்களும், மூப்பர்களும் அதில் போதுமான அறி வைக் கொண்டிராமலிருப்பதால் வேதத்தில் இருந்து பிரசங்கிக்கப்படும் பிரசங்கங்களும், போதனைகளும் சத்தில்லாமல் இருக்கின்றன. அவற் றில் போதனைகள் இல்லை, ஏனெனில், போதனைகளைக் கொடுக்குமள வுக்கு பிரசங்கிக்கிறவர்களுக்கு வேதஞானமில்லை. வேதஞானமில்லாத தால் வேதக்கோட்பாடுகளே அவசியமில்லை என்று அவர்கள் நிராகரித்து விடுகிறார்கள். பத்தாம் வகுப்பு கூடப்படித்துப் பாஸ் பண்ணாத நூற்றுக் கணக்கான போதகர்களை இவர்கள் மத்தியில் பார்க்கலாம். சிந்திக்க மனமிருந்தபோதும், சிந்திக்கும் ஆற்றலில்லாமல் தங்களை சமுதாயத்தில் உயர்த்திக்கொள்ள உதவும் ஏணியாக கிறிஸ்தவ ஊழியத்தைப் பயன் படுத்தி காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஊழியம் செய்யும் ஆத்துமாக்களுக்கு வேதம் போதிக்கும் மெய்யான இயேசு கிறிஸ் துவைப் பற்றிய போதனைகளை அறிந்துகொள்ள முடிவதில்லை. அவர் களும் போதனைகளும், கொள்கைகளும் ஆத்தும விருத்திக்கு உதவாது என்ற எண்ணத்தோடு காலத்தை ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சகோதரத்துவ சபைகள் இறையியல் கல்லூரிகளை நிராகரிக்கின்றன. ஒருவிதத்தில் அது பாராட்டப்பட வேண்டிய காரியம்தான். ஏனெனில் இந்திய இறையியல் கல்லூரிகளில் அதிகமானவை இறைவன் இல்லை என்பதற்கு விளக்கம் கொடுக்கவே பிறந்திருக்கின்றன. ஆனால், இதற்காக இறையியல் அறிவே தேவை இல்லை என்று இவர்கள் முடிவு கட்டி யிருப்பது ஆபத்தானது. வேத அறிவை வேறுவழிகளில பெற்றுக்கொள்ள இவர்கள் முயல்வதில்லை. இறையியல் படிப்பதே பேராபத்து என்ற முடி வுக்கு இவர்கள் வந்திருப்பதுபோல் தெரிகிறது. இக்காரணங்களால் வேத போதனைகளால் அலங்கரிக்கப்படாத ஒரு இயேசு கிறிஸ்துவை இந்த சபைப்பிரிவுகளில் பார்க்க முடிகிறது. இயேசு கிறிஸ்துவின் இறையா ண்மை, தெய்வீகம், மனிதத்துவம், அவருடைய சிலுவைப் பலியின்

மேன்மை, அது யாருக்காக நிறைவேற்றப்பட்டது? அவருடைய இராஜ்யத்தின் அருமை பெருமைகள், அவர் தம்முடைய திருச்சபையில் செய்யும் கிரியைகள் ஆகியவை பற்றியும் இன்னும் எத்தனையோ வேதபோதனைகளையும் இவர்கள் பிரசங்கிக்கும் இயேசுவில் ஆத்துமாக்களால் பார்க்க முடிவதில்லை. கத்தோலிக்க மதம் போதிக்கும் இயேசுவுக்கும், கிறிஸ்தவம் போதிக்கும் இயேசுவுக்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாடுகூட இவர்களுக்குத் தெரிவதில்லை. இவர்களுடைய இயேசு கிறிஸ்து வேத போதனைகளோடு சம்பந்தமில்லாதவராக இருக்கிறார். வேதபோதனைகளில் இருந்து பிரித்துக் காட்டப்படும் இயேசு கர்த்தருடைய ஒரே குமாரனாக ஒருபோதும் இருக்க முடியாது.

## அனுபவம் போதும், கொள்கைகள் வேண்டாம்

பெந்தகொஸ்தே இயக்கங்கள் அனுபவத்தை மட்டும் அடிப்படையாக வைத்து காலத்தைப் போக்கி வருகின்றன. தனி மனித அனுபவம் இவர்கள் மத்தியில் ஹிட்லரைப் போல ஆட்சி செய்கிறது. வேத போதனைகளைப் பற்றி இவர்கள் எள்ளளவும் கவலைப்படுவதில்லை. வேதம் வெளிப்படையாக இவர்களால் இன்று புறக்கணிக்கப்படுகிறது. தங்களுடைய சொந்த அனுபவத்தை நியாயப்படுத்திக் கொள்வதற்காக மட்டுமே இவர்கள் வேதத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சுய அனுபவத்தை மட்டுமே மையமாகக் கொண்டு இயங்கும் பெந்தகொஸ்தே இயக்கம் வேத போதனைகளுக்கும், கொள்கைகளுக்கும் இடம் கொடாதிருப்பதில் ஆச்சரியமில்லை. அவ்வாறு இடம் கொடுத்தால் அந்த இயக்கம் இல்லாமல் போய்விடும்.

பெந்தகொஸ்தே இயக்கம் வேதம் போதிக்காத இயேசு கிறிஸ்துவை பிரசங்கிக்கிறது. அதைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ‘அனுபவம்’ என்ற மாயமானின் வலையில் சிக்கி அலைந்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் நான் தென்னிந்தியாவுக்குப் போயிருந்தபோது தினகரனின் மகன் பால் தினகரனின் ஒரு பிரசங்கத்தை டெலிவிஷனில் கேட்க நேர்ந்தது. தன்னுடைய சொந்த அனுபவத்தை விளக்கி கர்த்தரை நம்பும்படி அவர் பேசினார். தான் டாக்டர் பட்டம் பெற பரீட்சை எழுதியபோது பரிசுத்த ஆவியைத் தன் பக்கத்தில் வந்து இருந்து பரீட்சை எழுத உதவுமாறு பால் தினகரன் கேட்டாராம். அந்த வேண்டுகோளை ஏற்று அவருக்குப் பக்கத்தில் இருந்த நாற்காலியில் பரிசுத்த ஆவி வந்து அமர்ந்து பால் தினகரனின் பரீட்சைத் தாளில் இருந்த கேள்விகளுக்கு எல்லாம் பதில் தந்து பரீட்சையில் பாஸ் பண்ண வைத்தாராம். இதுவே பால் தினகரனின் பிரசங்கத்தின் சாரம். கர்த்தரை நம்புகிற அனைவரும் இந்தமுறையில் பரீட்சையில் பாஸ் செய்ய பரிசுத்த ஆவி உதவுவார் என்று பால் தினகரன் அன்று கூறக்கேட்டேன். இது சரியாகப்படவில்லையே. உழைக்காதவனுக்கு ஊதியம் இல்லை என்றும், சோம்பேறிக்கு சோறில்லை என்றும் தன்னுடைய வார்த்தையில் சொல்லியிருக்கும் கர்த்தர் இப்படி பரீட்சை எழுதுகிறபோது பக்கத்தில் இருந்து கேள்விகளுக்கு பதில் சொல்லி யாரையும் பாஸ் பண்ண வைக்க மாட்டாரே, அது காப்பி அடிப்பதற்கு சமம் அல்லவா? என்று சிந்திக்கின்ற தமிழ் நெஞ்சத்தை எங்காவது பார்க்க முடிகிறதா? பால் தினகரனைப் பற்றித் தப்பாக பேசுகிறாரே என்று துடி துடித்துப் போகின்ற இதயங்கள்

*தான் அதிகம். பால் தினகரன் இப்படிப் பேசக் காரணம் என்ன? சொந்த அனுபவம் ஹிட்லரைப் போல பெந்தகொஸ்தே இயக்கத்தில் ஆட்சி செய்வதால்தான். வேதத்தை வைத்து எவர் சொல்வதையும் ஆராய அவர்கள் இடம் கொடுப்பதில்லை. வேதத்தில் நாம் பார்க்க முடியாத ஒரு இயேசுவைக் காட்டி இவர்கள் ஆத்துமாக்களை ஏமாற்றி வருகிறார்கள்.*

## கொள்கைகள் ஏன் அவசியம்?

*இதுவரை கொள்கைகளைப் புறக்கணித்து, கிறிஸ்தவத்தின் பெயரில் செயல்பட்டுவருகிறவர்களின் குறைபாடுகளைப் பார்த்தோம். தவறான எண்ணத்தால் கொள்கைகள் கூடாது என்று வேதபோதனைகளை மூட்டை கட்டிவைத்துவிட்டு இயேசுவுக்காக ஒரு கூட்டத்தை உருவாக்க முனைந்திருப்பவர்கள் மத்தியில், வேதம் போதிக்கும் இயேசு கிறிஸ்துவை விளக்கிச் சொல்லி அவருடைய போதனைகள் அனைத்தையும் விசுவாசித்து பிரசங்கிக்கவும், போதிக்கவும் முற்பட்டுவருகிற நாம், கொள்கைகளின் அவசியத்தைப் பற்றி உங்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டிய கடமைப்பாட்டையும் கொண்டிருக்கிறோம்.*

### 1. கர்த்தர் வேதத்தை நமக்குத் தந்திருக்கும் முறை கொள்கைகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

*கர்த்தர் தம்மைப் பற்றிய சத்தியங்களை நமக்கு எழுத்தில் தந்திருக்கிறார். மோசேக்கு அவர் அவற்றை இரண்டு பலகைகளில் எழுதிக் கொடுத்ததை நினைவுகூறுவது நல்லது. அதற்குப் பிறகு தன்னுடைய சித்தம் அனைத்தையும் அவர் எழுத்தில் தொகுத்து வேதமாக வழங்கியிருக்கிறார். அவர் தம்முடைய சித்தத்தை எழுத்தில் தந்த காரணம் நாம் அவற்றைப் படித்து ஆராய்ந்து கர்த்தரைப் பற்றிய அறிவிலும், கீழ்ப்படிவிலும் உயர வேண்டும் என்பதற்காகத்தான். இன்னுமொரு காரணமும் உண்டு. கர்த்தர் நம்மை சிந்திக்கிற மனிதர்களாகப் படைத்திருப்பதால் நாம் அடிக்கடி கர்த்தரைப் பற்றிய சத்தியங்களை சிந்தித்து ஆராய்ந்து அவற்றிற்குக் கீழ்ப்படிந்து அவர் வழியில் போகிறவர்களாக இருக்கவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். எழுத்தில் கர்த்தர் தந்திருக்கும் போதனைகளை நாம் தெளிவாக அறிந்துகொள்ளாமல் அவருக்குக் கீழ்ப்படிய முடியாது. கொள்கைகள், அதாவது அவர் வெளிப்படுத்தியுள்ள போதனைகள் தேவையில்லை என்போமானால் கர்த்தரைப் பற்றிய அறிவில் நாம் வளர முடியாது. அவரைப் பற்றிய அறிவில்லாமல் அவருடைய சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற முடியாது. எந்தளவுக்கு வேதத்தில் உள்ள போதனைகளை நாம் தெளிவாக அறிந்துகொள்கிறோமோ அந்தளவுக்கு நாம் கர்த்தரைப் பற்றிய அறிவில் வளரமுடியும். வெறும் கல்லை வணங்குகிறவர்களுக்கும், அனுபவத்தை நாடி சிந்திக்க மறுக்கிறவர்களுக்கும்தான் வேதமும் அதன் கோட்பாடுகளும் அவசியமாயிருக்காது.*

*அத்தோடு, வேதம் முழுவதிலும் கொள்கைகள் நிரம்பி வழிகின்றன. யாத்திராகமம் 20, பத்துக் கட்டளையாகிய கொள்கையை விளக்குகிறது. லேவியராகமம் முழுவதும் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் கடைபிடிக்க வேண்டியிருந்த ஆராதனைக் கொள்கைகளை விளக்குகின்றன, புதிய ஏற்பாட்டை எடுத்துக் கொண்டாலும் இதே நிலைதான். மலைப் பிரசங்*

*கத்தில் (மத்தேயு 5–7) இயேசு கிறிஸ்துவின் பிரசங்கம் முழுவதிலும் கொள்கைகள் நிரம்பி வழிகின்றன. அதைப் பிரசங்கித்த இயேசு கொள்கைகள் வேண்டாமென்றா சொல்லியிருக்கிறார்? பவுலின் நிருபங்களிலும் இதே நிலைதான். ரோமருக்கு பவுல் எழுதிய நிருபத்தின் முதல் பதினொரு அதிகாரங்களும் நீதிமானாக்குதலைப் பற்றி விளக்குகின்றன. இந்தக் கொள்கையை தூக்கி எறிந்துவிட்டு நாம் நம்மை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ள முடியுமா? எத்தனை சபைப்போதகர்களுக்கு இன்று இந்தப் போதனைகள் தெரியாமலிருக்கின்றன. எபேசியர் முதலாம் அதிகாரம் இரட்சிப்பின் பலாபலன்களாகிய கொள்கைகளை வரிசைக் கிரமமாகத் தருகின்றது. அவை நமக்கு அவசியமில்லை என்றால் கர்த்தர் தன் வார்த்தையில் அவற்றைத் தந்திருப்பாரா? அவை அவசியம். இரட்சிப்பின் நிச்சயத்துவத்தை நாம் கொண்டிருக்க அவை அவசியம். கலாத்தியர் நிருபத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கும் கொள்கைகள்தான். அந்த நிருபமும் நீதிமானாக்குதலைப் பற்றியும், சடங்குகளினால் இரட்சிப்பு கிடைக்காது என்பதையும் ஆணித்தரமாக விளக்குகின்றன. இந்தக் கொள்கைகள் அவசியமில்லையா? இவை தெரியாமல் வாழ்கிறவன் கிறிஸ்தவனாக இருக்க முடியுமா? யாக்கோபுவின் நிருபமும் கொள்கைகளைத்தான் கொண்டிருக்கின்றன. கிரியைகளைக் கொண்டிராத விசுவாசம் செத்த விசுவாசம் என்கிறார் யாக்கோபு. இந்தக்கொள்கை இன்று தேவையில்லையா? கொள்கைகளின் அவசியத்தை உணர்த்த இன்னும் எத்தனையோ உதாரணங்களை நான் காட்டமுடியும். கர்த்தர் தம்முடைய வேதம் முழுவதிலும் நாம் அறிந்து பின்பற்ற வேண்டிய கொள்கைகளைத் தந்திருக்கிறார். அவற்றை நாம் அலட்சியப்படுத்தவோ, நிராகரிக்கவோ முடியாது, கூடாது.*

### 2. விசுவாசிகளின் ஆத்மீக வளர்ச்சிக்கு கொள்கைகள் அவசியம்.

*கர்த்தர் எழுத்தில் தந்திருக்கும், அவரைப் பற்றிய சத்தியங்கள் விசுவாசிகளின் ஆத்மீக வாழ்க்கைக்கு அவசியம். ஒன்றுவிடாமல் அத்தனையும் அவசியம். சிலர், இயேசு எவர்களுக்காக மரித்தார் என்ற கோட்பாடு நமக்குத் தேவையில்லை என்பார்கள். அது தவறான முடிவு. இயேசு கிறிஸ்து தன்னுடைய மக்களுக்காக மட்டுமே சிலுவையில் மரித்தார் என்ற சத்தியம் விசுவாசிகளுக்கு இரட்சிப்பின் நிச்சயத்துவத்தை அளிக்கிறதாயிருக்கிறது. இழந்துபோக முடியாத இரட்சிப்பை இயேசு அளித்திருக்கிறார் என்று அவர்களால் ஆனந்தப்பட முடிகிறது. இதை எப்படி அவசியமற்றதாகக் கருத முடியும்? வேறு சிலர் வேதம் போதிக்கும் தெரிந்துகொள்ளுதலாகிய கொள்கையைப் பற்றிக் கேள்விப்பட்டதுமே ஏதோ கேட்கக்கூடாததைக் கேட்டுவிட்டதுபோல் காதை மூடிக்கொள்ளுவார்கள். ஆனால், வேதம் பக்கம் பக்கமாக அந்தச் சத்தியத்தை வலியுறுத்துகிறது. கர்த்தரின் தெரிந்துகொள்ளுதலாகிய சத்தியம் அவருடைய வல்லமையையும், நீதியையும், இறையாண்மையையும், பரிசுத்தத்தையும் வெளிப்படுத்துகிறது. இதை அறிந்துகொண்டிருப்பவர்கள் கர்த்தர் எத்தனை பெரியவர், மகிமையுள்ளவர் என்று எண்ணி அவரில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருப்பார்கள். வேதத்தை வாசித்து ஆத்மீக அறிவை வளர்த்துக்கொள்வதற்கு சோம்பேரித்தனமுள்ளவர்களுக்கு இது புரியாது. அவர்கள் தங்களுடைய மனதில் வளர்த்துக் கொண்டிருக்கும் இயேசுவைப் பற்றிய எண்ணங்கள் உலகப்பிரகாரமானதாகவும், உயிரற்றதாகவும்தான் இருக்கும்.*

*விசுவாசிகளின் ஆத்மீக வளர்ச்சிக்கு வேதபோதனைகள் (கொள்கைகள்) எப்படி உதவுகின்றன என்பதற்கு இன்னுமொரு உதாரணத்தையும் தருகிறேன். கர்த்தர் நீதியானவர் என்று வேதம் போதிக்கின்றது. அவரில் எந்த அநீதியும் இல்லையென்றும், அவர் அநீதியை செய்யாதவர் என்றும் வேதத்தில் வாசிக்கிறோம். இது கர்த்தரின் நீதியைப் பற்றிய வேதக் கோட்பாடு. இதை நாம் வேதத்தின் பல பகுதிகளையும் வாசித்தே அறிந்து கொள்கிறோம். இதை மீண்டும் மீண்டும் வாசித்து தியானிக்கும்போது நாம் நீதியான கர்த்தரைப் பற்றிய அறிவில் வளர்கிறோம். அது மட்டுமல்ல, நாம் வாழ்க்கையில் ஏதாவதொரு தவறை கவனக்குறைவால் செய்து விடுகிறபோது, பயந்து அலறாமல் நீதியின் தேவன் அதற்காக நம்மைக் கொன்றுவிடமாட்டாரென்பதை உணர்ந்து அவரிடத்தில் மன்னிப்புக் கேட்க முடிகிறது. கர்த்தரின் நீதியைப் பற்றிய அறிவே இல்லாதவர்கள் வாழ்க்கையில் பயத்தோடு தொடர்ந்து வாழ்ந்து ஆத்மவிருத்தியடையாது இருந்துவிட நேரிடுகிறது. இந்த ஆபத்தை கர்த்தரைப் பற்றிய வேதக் கொள்கைகளைப் படித்து அறிந்து கொள்கிறபோது நம்மால் தவிர்த்துக் கொள்ள முடிகிறது. பரிசுத்தத்தில் வளரவும் முடிகிறது. நம்முடைய ஆத்மீக வாழ்க்கையில் சகல பகுதிகளிலும் வளர வேதம் போதிக்கும் அத்தனை கோட்பாடுகளும், போதனைகளும் தவறாது அவசியம்.*

*வேதம் கர்த்தரைப் பற்றிய அறிவில் நாம் வளர வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. கர்த்தரைப் பற்றிய அறிவில் வளருகிறபோதுதான் அவரோடு நமக்கிருக்கும் ஐக்கியம் பெலப்படுகிறது. இறை அறிவு குறைகிற போது கர்த்தரோடு நமக்கிருக்கும் உறவும் குறையும். கர்த்தருடைய அருமை பெருமைகளை தெரிந்துகொள்ளும்போது நாம் தெளிவான சிந்தனை களோடு அவரை வழிபட முடிகிறது. வெறும் கல்லை சிவனாகவும், பிள்ளையாராகவும் பார்த்து அறிவற்ற வழிபாட்டை நடத்துகிற புறஜாதி யாரைப் போல வாழும்படி நாம் அழைக்கப்படவில்லை. ஜீவனுள்ள தேவனை நாம் அறிவுபூர்வமாக வழிபடும்படியாக அழைக்கப்பட்டிருக் கிறோம். கண்களை மூடி ஜெபத்தில் வருகிறபோதும், சபையில் ஆராதிக் கின்றபோதும் நமது மனதில் கர்த்தரைப் பற்றிய வேதபூர்வமான எண்ணங் கள் காணப்பட வேண்டும். ஜெபம் முழுவதும் அவரைப் பற்றிய சரியான கருத்துக்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இதனால்தான் இயேசு நாம் ஆவியோடும், உண்மையோடும் (சத்தியத்தோடும்) கர்த்தரை வழிபட வேண்டுமென்றார். வேதபோதனைகளை (கொள்கைகள்) அறிந்து கொள் ளாமல் நாம் எப்படி கர்த்தரைக் கர்த்தராக எண்ணி வழிபட முடியும்?*

*வேதம் கர்த்தரின் இறையாண்மை, அவருடைய பரிசுத்தம், நீதித்துவம், மகிமை, இராஜ்யம், இரட்சிப்பை அவர் நிறைவேற்றிய வழிமுறை, திரித்துவ அங்கத்தவர்களின் தன்மை, வரலாற்றில் மீட்பை அவர் நிறைவேற்றிய விதம், ஆவியானவரின் கிரியை, விசுவாசியின் வாழ்க்கை முறை, சுவிசேஷ ஊழியம் நடக்க வேண்டிய விதம், திருச்சபை, அதன் ஒழுங்குமுறை என்று கர்த்தரைப் பற்றியும் அவருடைய செயல் முறைகள் பற்றியும், நாம் வாழ வேண்டிய முறைகள் பற்றியும் கணக்கில்லாத சத்தியங்களை நாம் அறிந்து கொள்ளும்படி அள்ளித் தருகிறது. நாம் கர்த்தரை அவரு டைய சித்தத்தின்படி அன்போடு வழிபடவும், அவருக்குக் கீழ்ப்படிந்து*

நடக்கவும் இந்தப் போதனைகள் நமக்கு அவசியம். இவற்றைத் தெரிந்து கொள்ளாமல் விசுவாசி அவருக்குக் கீழ்ப்படிய வழியே இல்லை. இந்த சத்தியங்களைத் தான் கொள்கைகள் அல்லது கோட்பாடுகள் என்ற பெயரில் அழைக்கிறோம். இவற்றை முறைப்படுத்தி வரிசைக்கிரமமாக படிக்க வேண்டியதும், ஆராய்ந்து சிந்திக்க வேண்டியதும் கலப்பை பிடிக்கிறவர்களில் இருந்து கல்லூரி விரிவுரையாளர்கள்வரை அனைத்து விசுவாசிகளுடையதுமான கடமை. கல்வி அறிவில்லாதவனுக்கு கல்லுச்சாமி, ஞானமுள்ளவனுக்கு ஞானமார்க்கமென்று இந்து மதம் ஏற்படுத்தி வைத்திருப்பது போல் கிறிஸ்தவத்தில் நாம் பார்க்க முடியாது. எல்லோருக்கும் ஒரே கர்த்தர், ஒரே வேதம் மட்டுமே. கல்வி அறிவில்லாதவனும், கற்ற பண்டிதனும் அந்த வேத அறிவைப் பயன்படுத்தியே கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவரை அறிகிற அறிவிலும், கிருபையிலும் வளர வேண்டும்.

**3. போலிப்போதனைகளில் இருந்து நம்மைக் காத்துக் கொண்டு கர்த்தரைப் பற்றிய அறிவில் வளர கொள்கைகள் அவசியம்.**

இயேசு மட்டும் போதும் என்ற தவறான எண்ணத்தில் கொள்கைகளை வெறுக்கிறவர்கள் சத்தியத்தில் எப்போதும் தெளிவில்லாதவர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்கு போலிப்போதனைகளை இனங்கண்டு கொள்ளும் பக்குவம் இருக்காது. பவுல்போதிப்பது வேதத்தில் இருக்கிறதா என்பதை பெரோயா பட்டணத்தார் ஆராய்ந்து பார்த்தார்கள். எந்த ஆவியையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. பேதுரு விசுவாசிகளான புறஜாதி மக்களோடு உணவருந்த மறுத்தபோது பவுல் அவருடைய முகத்தைப் பார்த்து எல்லோருக்கும் முன்பாக கண்டித்ததற்குக் காரணம் சத்தியத்தில் பவுலுக்கு தெளிவிருந்ததுதான். இயேசு மட்டும் போதும் என்று கொள்கைகளை பவுல் அலட்சியப்படுத்தி இருந்தால் பேதுரு செய்த தவறைப் பவுல் அலட்சியப்படுத்தியிருப்பார்.

“எந்தவொரு சத்தியத்தையும் தெளிவாக விளக்கவேண்டுமானால் அந்தச் சத்தியத்தை அசத்தியங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதன் மூலம் மட்டுமே அதைச் செய்ய முடியும்” என்று அமெரிக்க இறையியல் அறிஞரான கிரேசம் மேச்சன் (Gresham Machen) கூறியிருக்கிறார். அது சத்தியமான வார்த்தை. வாழைப்பழத்தை முழுசாக ருசித்து அனுபவிக்க ஆசைப்படுகிறவர்கள் முதலில் அதன் தோலை உரித்து எறியவேண்டும். தோலோடு பழத்தை சாப்பிட முடியாது. பழத்தின் ருசியை உணரத் தோல் தடையாயிருக்கிறது. அதேபோல் அசத்தியங்களை இனங்கண்டு விலக்கி வைக்கிறபோது சத்தியம் பிரகாசமடைகிறது. கொள்கைகள் அவசியமில்லை என்று கூறி வேதசத்தியங்களை ஆராய்ந்து தொகுத்துப் படிக்க அஞ்சுகிறவர்களால் அசத்தியத்தை இனங்கண்டுகொள்ள முடியாது. எல்லாம் சத்தியம்தான் என்ற நம்பிக்கையில் இருண்ட பாதையில் தான் அவர்களுடைய வாழ்க்கை போய்க்கொண்டிருக்கும். போலிப் போதனைகளில் இருந்து நம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் வேதக் கோட்பாடுகளை நாம் ஆராய்ந்து படித்து அவற்றில் தெளிவு அடைவது அவசியம். சத்தியங்களைத் தெளிவாக அறிந்து கொண்டு அவற்றைப் பின்பற்றும்போது போலிப்போதனைகள் நம்மை அணுக முடியாது. அவை சூரியனைக் கண்ட பனிபோல ஓடிவிடும்.

**4. திருச்சபை சத்தியத்தில் உறுதியாக வளரவும், சத்தியமல்லாதவற்றை எதிர்த்து நிற்கவும், வழிதவறிப் போகாமல் இருக்கவும் கொள்கைகள் அவசியம்.**

*சத்தியத்தை விசுவாசிக்கின்ற சபைகள் மட்டுமே தேவனுடைய சபைகளாக இருக்க முடியும். அச்சபைகளால் மட்டுமே அசத்தியத்தை இனங் கண்டு அதனை எதிர்த்து நிற்க முடியும். வழிதவறிப்போகாமல் இருக்க முடியும். சமீபத்தில் என்னை சந்தித்த ஒரு போதகர் தனக்கு முன்பு சபையில் இருந்த போதகர் பரிசுத்தமாக்குதலைப் பற்றிய கோட்பாடுகளை வேதபூர்வமாக போதிக்கக் தவறியதால் சபை மக்கள் அதுபற்றிய சத்தியம் தெரியாமலும், பரிசுத்தமாக வாழ முடியாமலும் குழம்பிப் போய் நிற்கிறார் கள் என்று முறையிட்டு என்னிடம் உதவி கேட்டார். சத்தியத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளுகிறபோதே திருச்சபை மக்கள் பரிசுத்தமாக இருப்பதற்கு வழி கிடைக்கின்றது. சத்தியங்களைத் தெளிவாக தொகுத்து வைப்பதைத்தான் கொள்கைகள் என்று அழைக்கிறோம். அத்தகைய சத்தியத் தொகுப்புதான் 1689 விசுவாச அறிக்கையும், வினாவிடைப் போத னையும். இவை நமக்கு வேத அறிவை மட்டும் கொடுப்பதில்லை. அந்த அறிவைப் பயன்படுத்தி நாம் பக்திவிருத்தியுடன் வாழ வழிகாட்டுகின்றன. சபை சத்தியத்தில் தொடர்ந்திருக்க வகைசெய்கின்றன. தவறானதும், போலித்தனமானதுமான போதனைகள் சபையில் நுழைந்துவிடக்கூடிய ஆபத்தில் இருந்து தப்புவதற்கு உதவுகின்றன. போலிப்போதனைகள் புதிது புதிதாகத் தோன்றி சபையைப் பயமுறுத்துகிறபோது யூதா 3-ல் எழுதி யிருக்கிறபடி அவற்றை எதிர்த்துப் போராடவும் உதவுகின்றன.*

*அதேவேளை, வேதக்கொள்கைகளை அறிந்து அவற்றில் வளர்ந்திராத சபைகளுடையதும், சபையாரினதும் நிலையை எண்ணிப் பாருங்கள் அந்தோ பரிதாபம்! சத்தியத்தை அறியாது, அசத்தியங்களை இனங்கண்டு கொள்ள முடியாது, போலிப்போதனைகளை சத்தியமாக எண்ணிக் கண் ணிருந்தும் குருடர்களாக அறியாமையில் வியாதியஸ்தர்கள் போல் வாழ்ந்து வருவார்கள். தனக்கு நோயிருக்கிறது என்பதே அறியாமல் நோயோடு வாழ்ந்து வருகிறவனைப்போல துர்ப்பாக்கியமானவன் இருக்க முடியுமா? கொள்கைகள் வேண்டாம் என்று அலறுகிறவர்கள் இப்படித் தான் வாழ்ந்து வருகிறார்கள். தமிழ் மக்கள் மத்தியில் இந்த வகையில்தான் இன்று கிறிஸ்தவத்தின் நிலை இருக்கிறது. சபை வரலாற்றில் சீர்திருத் தவாத காலத்திற்கு முன்பு எந்த நிலை இருந்ததோ அந்த நிலையில்தான் தமிழ் மக்கள் மத்தியில் கிறிஸ்தவம் இருக்கின்றது. அன்று வேதத்தை எல்லோரும் வாசிக்க முடியாதபடி கத்தோலிக்க மதம் அதை மறைத்து வைத்திருந்தது. இன்று வேதம் நம் சொந்த மொழியில் இருந்தபோதும் அனுபவத்தை மட்டும் நாடி நிற்கும் கூட்டம் ஆத்துமாக்கள் அதை அறிந்து கொள்ளமுடியாதபடி அவர்களுடைய கண்களைக் கட்டி, இருதயத்தைப் பசப்பு வார்த்தைகளால் ஆண்டு வருகின்றது. கொள்கைப்பற்றுள்ள சபை கள் தமிழ் மக்கள் மத்தியில் உருவாகி வளராதவரை போலிக் கூட்டங்கள் தமிழினத்தை தொடர்ந்து சூறையாடுவதைத் தடுக்க முடியாது.*

**அட்டையில்: நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரில் உள்ள ஸ்கை டவர் (Sky Tower)**

# செழிப்பாசை காட்டி மயக்கும் செழிப்பு உபதேசம்

இன்று தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடுகளில் எல்லாம் கிறிஸ்தவர்கள் மத்தியில் சூடுபிடித்து நிற்கும் ஒரு போதனைக்குப் பெயர் தான் 'செழிப்பு உபதேசம்'. இதனை ஆங்கிலத்தில் Prosperity Theology என்று அழைக்கிறார்கள். இதுவரை இதுபற்றி அதிகம் ஆராய்ந்து அறிந்திராதவர்களுக்கு முதலில் இதை சுருக்கமாக விளக்குவது அவசியம். அடிப்படையில் இந்தப் போதனை சொல்வதெல்லாம், விசுவாசிகளுக்கு வாழ்க்கையில் எப்பொழுதும் ஆசீர்வாதம் பெருகும், அதிகரிக்கும் என்பதுதான். அத்தோடு நிறுத்திக்கொள்ளாமல், விசுவாசிகளுக்கு வாழ்க்கையில் துன்பங்களுக்கே இடமில்லை, பணம் பெருகும், தொழில் சிறக்கும், நன்மைகள் ஆறாகப் புரண்டோடும் என்று இந்தப் போதனையை அளிக்கிறவர்கள் சொல்லி வருகிறார்கள்.

இவர்கள் இந்தப் போதனைக்கு வேதத்தை ஆதாரம் காட்டாமலில்லை. ஏசாயா 53ல் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் குறிப்பிடும் தீர்க்கதரிசி, "அவருடைய தழும்புகளால் நாம் குணப்பட்டோம்" என்று சொல்லுகிற வசனத்தை இவர்கள் தங்கள் போதனைக்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். இதற்கு இவர்கள் கொடுக்கும் விளக்கம், இயேசு கிறிஸ்து கல்வாரியில் தன்னைப் பலியாகக் கொடுத்ததன் மூலம் நம்மை ஒட்டு மொத்தமாகக் குணப்படுத்தியிருக்கிறார். பாவத்திலிருந்தும், வாழ்க்கைத் துன்பங்களிலிருந்தும், சகலவிதமான பிரச்சனைகளிலிருந்தும் நமக்கு ஏற்கனவே விடுதலை வாங்கித் தந்திருக்கிறார். ஆகவே, இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் இனி இந்த உலகத்தில் துன்பப்படுவதற்கு வழியே இல்லை. கிறிஸ்துவின் இரத்தப்பலி சகல நன்மைகளையும் பெற்றுத் தந்திருக்கிறது என்கிறார்கள் இவர்கள். இந்த வசனம் உண்மையில் அப்படியான விளக்கத்தைத் தரவில்லை. இந்த உலகத்தில் நிரந்தரமான உடல் சுகத்தையும், பணப் பொருள் நிறைவையும் இந்த வசனம் வாக்குறுதியாகத் தரவில்லை.

செழிப்பு உபதேசத்தைக் கொடுக்கிறவர்கள், கிறிஸ்து ஏற்கனவே நாம் அனுபவிக்கும்படி சகல நன்மைகளையும் தமது இரத்தப்பலியின் மூலம் நிறைவேற்றியிருப்பதால் நாம் வாழ்க்கையில் எந்தத் துன்பத்தை எதிர் கொண்டாலும் உடனடியாக கிறிஸ்து சொன்னவற்றை நினைவுகொண்டு அவற்றை முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் துன்பங்கள் பனிபோல் விலகிவிடும் என்கிறார்கள். அத்தோடு, வாழ்க்கையில் ஏதாவது நன்மை நிகழ வேண்டும் என்றால் கிறிஸ்துவின் வாக்குத்தத்த வசனங்களை நினைவுபடுத்திக்கொண்டு அவற்றை மீண்டும் மீண்டும் சொல்லி முழு மனத்தோடு விசுவாசித்தால் காரியம் கைகூடும் என்பது இவர்களுடைய போதனை. ஆகவே, ஒரு காரியம் நடப்பது என்பது நாம் எந்தளவுக்கு நம்பிக்கையோடு விசுவாசிக்கிறோம் என்பதிலேயே தங்கியிருக்கிறது

என்பது இவர்களுடைய போதனை. உதாரணத்திற்கு பரீட்சையில் பாஸ் பண்ண வேண்டும் என்றால் வேதத்தைப் புரட்டி அதிலுள்ள வாக்குத்தத்த வசனத்தை வாசித்து அதை நாம் உறுதியாக நம்புவோமானால் காரியம் கைகூடும் என்கிறார்கள் இவர்கள். ஏதாவது நடக்காமல் போனால் அதற்குக் காரணம் நமது விசுவாசக்குறைவு என்கிறார்கள் செழிப்பு உபதேச இறையியல் பிரசங்கிகள். இதற்காக இவர்கள் வேதத்தில் பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாடுவரையுள்ள அத்தனை நூல்களிலுமுள்ள வாக்குத்தத்த வசனங்களைப் பொறுக்கி எடுத்து அவற்றை அடிக்கடி தமது பிரசங்கங்களில் பயன்படுத்தி வருகிறார்கள். இவர்களுடைய பிரசங்கங்களிலும், தியானங்களிலும் ஆசீர்வாதம், அற்புதம் என்ற இரு வார்த்தைகளையும் கேட்காமலிருக்க முடியாது. இந்த வகையில் செழிப்பு உபதேச இறையியல் பிஸினஸ் செய்து வருகிறவர்களில் தமிழகத்தில் முன்னணியில் இருப்பவர் தினகரனும் அவருடைய மகனுமான பால் தினகரனும். இவர்களைப் போலவே மோகன் சீ. லாசரஸ், எசேக்கியா பிரான்சிஸ், சாம் ஜெபத்துரை என்று ஒரு பெரிய பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. இவர்களைத் தவிர சமீபத்தில் தமிழகத்தில் சேலத்தில் உதித்துள்ள குட்டிச்சாமி பரணீதரனைப் போல இவர்களுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருக்கும் பல குட்டிச்சாமிகளின் வரிசையும் உண்டு. ஆக, தமிழ் கிறிஸ்தவர்கள் வாழ்கிற இடமெல்லாம் இன்றைக்கு செழிப்பு உபதேச இறையியல் 'அம்மா'வைப் போல இவர்கள் மூலம் ஆட்சி செய்து வருகிறது.

இந்த செழிப்பு உபதேசம் எப்படி தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரபலமானது என்பதை ஆராய்வது அவசியம். தினகரனோ மற்றவர்களோ இதை சுயமாகக் கண்டுபிடிக்கவில்லை. அவர்களுக்கு மட்டும் இந்தப் போதனை விசேடமாக கர்த்தரால் கொடுக்கப்படவில்லை. அவர்கள் இதை மேலை நாட்டு பெந்தகொஸ்தே பிரசங்கிகளிடம் இருந்து கடன் வாங்கிக் கொண்டார்கள். அப்படிப் பெற்றுக்கொண்டதை தமிழ் மக்கள் மத்தியில் பரப்பி தங்களை வளர்த்துக் கொண்டார்கள்.

## மேலை நாடுகளில் ஆரம்பித்த செழிப்பு உபதேசம்

மேலை நாடுகளில் இந்த செழிப்பு உபதேசம் எப்படித் தோன்றியது என்று இனி ஆராய்வோம். செழிப்பு உபதேசம் உண்மையில் வேறு சில போதனைகளோடு தொடர்புடையது. பெந்தகொஸ்தே இயக்கத்தில் தோன்றிய Positive Confession மற்றும் வார்த்தை-விசுவாச போதனை Word-Faith teaching (Faith movement) ஆகிய போதனைகளின் ஒரு பகுதிதான் இந்த செழிப்பு உபதேசம். இந்தப் போதனைகளின் 'தாத்தா'வாகக் கருதப்படுகிறவர் கென்னத் ஹெகின் (Kenneth Hegin). கென்னத் ஹெகின் தன்னுடைய நூலான 'கர்த்தரோடு உன்னுடைய டிக்கெட்டை எப்படி எழுதுவது' (How to write your own ticket with God) என்ற நூலின் மூலம் தன்னுடைய போதனையை பிரபலமாக்கினார். இந்த நூலின் ஆரம்ப அதிகாரத்தில் ஹெகின் கர்த்தரை சந்தித்த அனுபவத்தை விளக்குகிறார். பத்மோசில் இருந்த யோவானைப்போல தான் ஆவியில் இருந்தபோது கர்ததர் மூன்று அடி தூரம் தள்ளி நின்று தனக்கு தரிசனம் கொடுத்ததாகக் கூறுகிறார். அப்படித் தரிசனமான

கர்த்தர் கென்னத் ஹெகினிடம் ஒரு பேப்பரையும், பென்சிலையும் எடுத்து தான் சொல்லப் போவதை எழுதிக் கொள்ளும்படி சொன்னாராம். கென்னத் ஹெகின் அதை எழுதிக்கொள்ளத் தயாரானவுடன் கர்த்தர் 1, 2, 3, 4 என்று வரிசைக்கிரமமாக நான்கு விஷயங்களை எழுதிக் கொள்ளும்படிக் கட்டளையிட்டாராம். அதற்குப் பிறகு அவர், "இந்த நான்கு காரியங்களையும் எவராயிருந்தாலும், அவர்கள் எங்கிருந்தாலும் சரி முறைப்படி செய்வார்களானால் அவர்களுக்கு எது தேவையோ அவற்றை நான் நிச்சயமாகக் கொடுப்பேன்" என்று கர்த்தர் சொன்னாராம். இதைச் செய்பவர்களுடைய வாழ்க்கையில் பணம் பெருகும், தொழில் சிறக்கும், நோய் இருக்காது, தொல்லைகளுக்கே இடமில்லை என்று கர்த்தர் சொன்னதாக கென்னத் ஹெகின் எழுதுகிறார். அந்த நான்கு காரியங்களும் என்ன?

1. சொல்லு (Say it) – சொல்லுபவர் எதைச் சொன்னாலும் அது நடக்கும்.
2. அதைச் செய் (Do it) – நடக்கப் போவது நமது செய்கையைப் பொறுத்திருக்கிறது.
3. பெற்றுக்கொள் (Receive it) – நமது விசுவாசமே எதையும் நாம் அடையச் செய்கிறது. உன் விசுவாசத்தால் பரலோகத்தைப் பிடி.
4. மற்றவர்களுக்கு சொல்லு (Tell it so others may belive) – அடுத்தவர்கள் பலனடைய இதை அவர்களுக்கும் சொல்லு.

கென்னத் ஹெகினுடைய இந்தப் போதனையை இன்னொரு செழிப்பு உபதேச போதனையாளரான கென்னத் கோப்லன்ட் (Kenneth Copeland) பின்வருமாறு விளக்குகிறார்: "இது எப்படியென்றால் நீங்கள் விரும்புகிறதை, அது பொருளாகவோ பணமாகவோ இருந்தாலும், முதலில் உங்களுடைய மனதில் அதை உருவமாகப் பார்க்கப் பழக வேண்டும் (Seeing or visualizing whatever you need, whether physical or financial). இரண்டாவதாக, கர்த்தருடைய வார்த்தையின்பேரில் அதை உங்களுடையதாகக் கருத வேண்டும். மூன்றாவதாக, அது நிகழ்ந்துவிட்டதாகப் பேச வேண்டும்." இதுவே கோப்லன்டின் போதனை. இதையே போல் யொங்கி சோ (Paul Yonggi Cho - இப்போது இவர் தன் பெயரை டேவிட் என்று மாற்றிக் கொண்டிருக்கிறார்), 'கருத்தரிக்கும் விதிமுறை' என்ற பெயரில் அழைத்து, பின்வருமாறு விளக்குகிறார்: "முதலில் ஒரு தெளிவான இலக்கை வகுத்துக் கொள்ளுங்கள். அடுத்ததாக அதை உங்கள் மனதில் படமாகப் பார்க்கப் பழகுங்கள். பின்பு அது நிகழும்படி கருத்தரிக்கச் செய்யுங்கள். அடுத்து, ஜீவனைக் கொடுக்கும் வார்த்தையைப் பயன்படுத்தி அது நடைமுறையில் நிகழும்படிச் செய்யுங்கள்" என்கிறார். (யொங்கி சோவின் போதனைகளை விமர்சிக்கும் 'போல் யொங்கி சோவும் நான்காம் பரிமாணமும்' என்ற தலைப்பில் நாம் வெளியிட்டுள்ள நூலை வாசியுங்கள்).

இந்த செழிப்பு உபதேசப் போதகர்களாக இதுவரை நாம் பெயர் குறிப்பிட்டுள்ளவர்களைத் தவிர பெனி ஹின் (Benny Hinn), மெரிலின் ஹிக்கி (Merilyn Hickey), பிரெட்டிரிக் கே. சீ. பிரைஸ் (Fredrick K. C.

Price), ஜொன் அவன்சீனி (John Avanzini), சார்ள்ஸ் கெப்ஸ் (Charles Capps), ஜெரி செவலே (Jerry Savelle), மொரிஸ் செரூலோ (Morris Cerullo), போல் கிரௌச் (Paul Crouch), ஜேன் கிரௌச் (Jane Crouch) ஆகியோரையும் குறிப்பிடலாம்.

இந்தப் போதனையின்படி விசுவாசத்தின் மூலம் நாம் வாழ்க்கையில் எதையும் அடைந்துவிட முடியும். அது பணமாகவோ, பொருளாகவோ உடல் நலமாகவோ அல்லது வாழ்க்கையில் பல வெற்றிகளாகக்கூட இருக்கலாம். இதையெல்லாம் அடையக்கூடிய வல்லமை வார்த்தையின் மூலமாகவே வெளிப்படுகின்றது. அதாவது, நாம் விசுவாச வார்த்தையை சொல்லுகிற போது அதிலிருந்து வல்லமை வெளிப்பட்டு நாம் விரும்புகிற காரியம் உடனடியாக நடைபெறுகிறது. இதைத்தான் கென்னத் ஹெகினினுடைய நூல் விளக்குகிறது. சமீபத்தில் என்னோடு பேசிய ஒரு போதகர் தனக்குத் தெரிந்த ஒரு மனிதர் தன்னிடம் சொன்னதை விளக்கினார். அந்த நபர் இந்தப் போதகரைப் பார்த்து சொன்னாராம், “பாஸ்டர், இன்னும் ஒரு வருடத்தில் பாருங்கள் நான் பென்ஸ் காரில் போய்க் கொண்டிருப்பேன். அதற்கு அடுத்த வருடம் கோடீஸ்வரனாகப் போகிறேன்” என்று. இந்த நபர் செழிப்பு உபதேசத்தை எங்கோ கேட்ட பிறகு இப்படி உளர ஆரம்பித்திருக்கிறாராம்.

செழிப்பு உபதேசங்களை அளிப்பவர்கள் தங்களுடைய போதனைக்கு அடிப்படையாக கர்த்தர் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மேற்கோள் காட்டுகிறார்கள். செழிப்பு உபதேசகர்களில் ஒருவரான ரொபட் டில்டன் சொல்லுகிறார், “நம்முடைய பங்கைச் செய்வதாக நாம் கர்த்தருக்கு வாக்குறுதிகளை அளித்து, அவருடைய வார்த்தையின் அடிப்படையில் அவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் அவரிடம் சொல்ல வேண்டும். ஆம்! அவர் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி அவருடைய பங்கு என்ன என்பதை நாம் அவருக்கு வற்புறுத்தி சொல்ல முடியும்.” (Robert Tilton, *God’s Miracle Plan for Man, pg 36*). கென்னத் கோப்லன்ட் சொல்லுகிறார், “ஒரு விசுவாசி என்ற அடிப்படையில் இயேசுவின் நாமத்தில் கட்டளைகளையிட உங்களுக்கு உரிமை உண்டு. ஒவ்வொரு முறையும் நீங்கள் அவருடைய வார்த்தையில் நிற்கும்போது, கர்த்தருக்கு நீங்கள் கட்டளையிடுகிறீர்கள். அவருடைய வார்த்தையை நீங்கள் பயன்படுத்துவதால் அதை உங்களால் செய்ய முடிகிறது.” (Kenneth Copeland, *Our Covenant With God, pg 32*). தொடர்ந்து கோப்லன்ட் சொல்லுகிறார், “கர்த்தர் ஆபிரகாமுடன் ஏற்படுத் திக் கொண்ட உடன்படிக்கையில் ஆபிரகாமைவிட கர்த்தர் கீழான இடத் திலேயே இருக்கிறார். அந்த உடன்படிக்கையில் ஆபிரகாமே உயர்ந்த இடத்தை வகிக்கிறார்.” (Kenneth Copeland, *Legal and Vital Aspects of Redemption*, Audio message).

*The Cross and the Switch Blade* என்ற நூலை எழுதியவரும் ஆரம்பத்தில் அசெம்பிளி ஆவ் கோட் சபையில் இருந்தவருமான டேவிட் வில்கர்சன் (David Wilkerson) செழிப்பு உபதேசத்தின் போலித்தனத்தை இப்போது விளாசித்தள்ள ஆரம்பித்திருக்கிறார். இது பெந்தகொஸ்தே இயக்கத்தைச்

சேர்ந்த பலருக்குக்கூட இந்தப் போதனையின் போலித்தனம் புரிய ஆரம்பித்திருக்கிறது என்பதற்கு நல்ல உதாரணம். Times Square Church -ல் தான் அளித்த ஒரு பிரசங்கத்தில் இந்தப் போதனையை விமர்சிக்கும் வில்கர்சன் சொல்லுகிறார்: "இந்தப் போதனையை அளிப்பவர்கள் போலித் தீர்க்கதரிசிகள். இவர்களுடைய போதனையில் சுவிசேஷத்திற்கே இடமில்லை. இவர்கள் ஊழியத்தில் இல்லாமல் உலக காரியங்களில் ஈடுபட்டிருப்பார்களானால் இந்த நேரம் ஜெயிலில்தான் இருப்பார்கள்." இந்தளவுக்கு டேவிட் வில்கர்சன் இவர்களை விளாசுவதற்குக் காரண மென்ன? அவரே சொல்லுகிறார் கேளுங்கள்: "நான் சமீபத்தில் கென்னத் கோப்லன்டினுடைய ஒரு வீடியோ செய்தியைப் பார்த்தேன். அதில் கொப்லன்ட் சொல்லுகிறார், 'எனக்கு 1800 சதுர மீட்டரில் நிலம் இருக் கிறது. அதில் சாலமோனே பார்த்து வியக்கும் வகையில் ஒரு மாளிகை கட்டப் போகிறேன். என்னுடைய நாயின் விலை 15000/- அமெரிக்க டாலர்கள். என்னுடைய நகரத்தில் இருப்பவர்கள் என் வீட்டுக்கு வந்து என்னுடைய ரோல்ஸ் ரோய்ஸ் காரைப் பார்க்கிறார்கள்.' வில்கர்சன் கேட்கிறார் "இதைப் போய் யாராவது சுவிசேஷ செய்தியாகக் கருது வார்களா? இது கிறிஸ்தவன் பேசுகின்ற பேச்சா?" என்று. இதே கூட்டத் தில் இன்னொரு பேச்சாளர் சொன்னாராம், "நீங்கள் பணத்தில் புரளும் வரை உங்களை பரிசுத்த ஆவியானவர் ஆசீர்வதிக்கமாட்டார். பணச் செழிப்பு உங்கள் வாழ்க்கையில் இல்லாதவரை அவர் உங்களில் செயல் பட முடியாது." "கர்த்தர் ஒரு புதிய காரியத்தை செய்கிறார் என்று சொல்லி இந்த மனிதர்கள் பேசுகிற, செய்கின்ற காரியங்களைப் பார்த்து உலகம் சிரிக்கிறது" என்கிறார் டேவிட் வில்கர்சன்.

## செழிப்பு உபதேசக் கோட்பாடுகள்

செழிப்பு உபதேசப் போதனையாளர்களான கென்னத் ஹெகின், கென் னத் கோப்லன்ட் ஆகியோரின் நூல்கள், பிரசங்கங்களில் இருந்து தொகுக் கப்பட்ட அவர்களுடைய இறையியல் கோட்பாடுகளை உங்கள் முன் வைத்திருக்கிறேன். இவற்றை வாசித்து சிந்தித்து ஆராய்ந்து பார்த்து எந்தள வுக்கு இந்த செழிப்பு உபதேசம் ஆபத்தானது, கிறிஸ்தவத்திற்கு எதிரானது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். சிந்திக்கத் தெரியாதவர்களாக, சிந்திக்க முடியாதவர்களாக தமிழர்கள் இருக்கும் ஒரே காரணத்தைப் பயன்படுத்தி தமிழகத்திலும், தமிழகத்திற்கு வெளியில் ஸ்ரீ லங்கா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும், தமிழர் வாழும் மேலை நாடுகளிலும் அனேக செழி ப்பு உபதேசப் போதனையாளர்கள் பெந்தகொஸ்தே/கெரிஸ்மெட்டிக் இயக்கத்தில் எழும்பியிருக்கிறார்கள். இவர்களுடைய பசப்பு வார்த்தை களில் இருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்தவ ஊழியர் களை விமர்சிக்கக் கூடாது என்ற தீங்கான போலித்தனமான நம்பிக் கையை உள்ளத்தில் வளர்த்துக் கொண்டு உங்களையும் உங்கள் குடும்பத் தாரையும் பேரழிவுக்கு உட்படுத்தாதீர்கள். உங்களுடைய ஆத்மீக வாழ்க் கையை சரியாக வாழவும், அதைப் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பை யும் கர்த்தர் உங்களிடத்திலேயே தந்திருக்கிறார். அதற்கு நீங்கள் கணக்குக் கொடுக்க வேண்டிய நாள் வரும். அந்நாளில் கர்த்தருக்கு தகுந்த பதில ளிக்க வேண்டிய கடமை உங்களைச் சார்ந்தது. இனி செழிப்பு உபதேசி

*களின் இறையியல் கோட்பாடுகளை ஆராய்வோம்.*

## வெறும் மனிதனான கடவுள்

*இவர்கள் கர்த்தரை மனிதனுடைய நிலைக்கு கொண்டு வந்திருக் கிறார்கள். கென்னத் கோப்லன்ட் சொல்லுகிறார், "கர்த்தர் 6 அடி 3 அங்குல உயரமும் 200 இறாத்தல் எடையும் உடையவராகத்தான் இருப் பார். ஆதாமுக்குப் பக்கத்தில் அவரை நிறுத்தி வைத்தால் இருவரும் ஒரே மாதிரியாகத்தான் தோன்றுவார்கள். ஆதாமின் மறு உருவமே இயேசு கிறிஸ்து. ஆதாமுக்கு பக்கத்தில் இயேசுவை நிறுத்திவைத்தால் இருவரும் ஒரேமாதிரியாகத்தான் இருப்பார்கள்."* (*Christianity in Crisis*). *இயேசு தனக்கு காட்சி தந்ததாகவும், அப்போது, "மனிதர்கள் என்னை சிலுவை யில் அறைந்து என்னைக் கடவுள் என்று சொன்னார்கள். ஆனால், நான் ஒருபோதும் அப்படிச் சொல்லவில்லை. நான் கடவுளோடு சேர்ந்து நடந்தேன். அவர் என்னில் இருக்கிறார் என்று மட்டும்தான் சொன்னேன்" என்று சொன்னதாக கோப்லன்ட் செல்லுகிறார்.* (*Christianity in Crisis*).

*அனேக செழிப்பு உபதேசகர்கள் திரித்துவப்போதனையை நம்புவ தில்லை. அவர்கள் மூன்று வெவ்வேறு கடவுள்கள் இருப்பதாக விளக்கங் கொடுக்கிறார்கள். அத்தோடு கர்த்தரை அவர்கள் ஜீவனுள்ள தேவனாகப் பார்க்காது ஒரு சக்தியாக* (Force) *விளக்குகிறார்கள். உலக மண்டலங் களை சில விதிகளே* (Laws) *உருவாக்கி பாதுகாப்பதாகவும், அந்த விதி களுக்கு கர்த்தரும் கட்டுப்பட்டவர் என்பது இவர்களுடைய போதனை. கர்த்தர் இந்த உலகத்தை பராமரிக்கும் பொறுப்பை மனிதனிடம் ஒப்படைத்திருப்பதாகவும், தன்னுடைய பார்ட்னரான மனிதனுடைய துணையின்றி அவரால் உலகத்தில் ஒன்றுமே செய்யமுடியாது என்றும் விளக்குகிறார்கள். வேதம் கர்த்தர் இறையாண்மை உள்ளவர், எல்லாம் வல்லவர், அவருக்கு மேல் ஒருவரும் இல்லை என்று போதிக்க இந்த செழிப்பு உபதேச போலித்தீர்க்கதரிசிகள் கர்த்தரை மனிதனுடைய நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தான் நினைத்த நேரத்திலும், தான் அழைக்கும் நேரத்திலும் கர்த்தரைத் தனக்குப் பக்கத்தில் வந்திருக்கச் செய்யமுடிவதாக தினகரனும், பரிசுத்த ஆவியைத் தனக்குப் பக்கத்தில் வந்திருக்கச் செய்து தான் பரீட்சை எழுத உதவி செய்யவைத்ததாக பால் தினகரனும் பேசுவதற்குக் காரணம் அவர்கள் கர்த்தரைப் பற்றிய வேதவிரோதமான எண்ணங்களைக் கொண்டிருப்பதால்தான். தங்களுடைய 'விசுவாசத்தால்' கர்த்தரை வற்புறுத்தி எதையும் செய்ய வைக்க முடியும் என்று செழிப்பு உபதேசப் போதனையளிப்பவர்கள் சொல்லுவதற்குக் காரணம் புறஜாதியினர் கடவுளைப் பற்றிக் கொண்டு ள்ள எண்ணங்களை இவர்கள் பின்பற்றுவதால்தான்.*

## தெய்வீக மயமான மனிதன்

*யோவான் 10:31–39; 2 பேதுரு 1:4 போன்ற வேதப்பகுதிகளைப் பயன் படுத்தி மனிதனைப்பற்றிய வேதவிரோதமான போதனைகளை அளிக் கிறார்கள் செழிப்பு உபதேசப் போதனையாளர்கள். அதாவது, மனிதரை அவர்கள் 'குட்டிக் கடவுள்களாகப்' பார்க்கிறார்கள். கோப்லன்ட் சொல்லு கிறார், "பேதுரு நாம் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக்கப்பட்*

டிருக்கிறோம் என்கிறார். நாம், கடவுளர்களா? ஆம்! நாம் ஒருவிதத்தில் கடவுளர்கள்தான்." (*Christianity in Crisis*). பெனி ஹின் கூறுவதை வாசியுங்கள், "கடவுள் பரலோகத்தில் இருந்து இறங்கி வந்து, மனிதனாகத் தோற்றமெடுத்து, மனிதனை ஒரு சிறு கடவுளாக மாற்றிவிட்டு மறுபடியும் பரலோகத்திற்கே போய்விட்டார்." (*Christianity in Crisis*). ஏர்ல் போல்க் (Earl Paulk) என்பவர் எழுதுகிறார், "நாம் கடவுள் என்பதை உணர்ந்து, கடவுளைப் போல நடக்க ஆரம்பிக்கும்வரை தேவ இராஜ்யத்தை நம்மால் அனுபவிக்க முடியாது." (*Satan Unmasked*).

செழிப்பு உபதேசப் போதனையாளர்கள் இன்று நமக்கு ஊக்கந்தரும் செய்தி என்று சொல்லி நாம் தெய்வீகத் தன்மை அடைந்திருப்பதாக நம்பச் சொல்லுகிறார்கள். கடவுள் மனிதனைக் கடவுளாகவே இந்த உலகத்தில் படைத்ததாகவும் பாவத்தால் அவன் சாத்தானுடைய தன்மையை அடைந்திருப்பதாகவும், மறுபிறப்பை அடையும்போது அவன் மறுபடியும் கடவுளாக மாறிவிடுவதாகவும் இவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, மறுபிறப்படைந்த மனிதன் கடவுளாக இருப்பதால் அவனால் கடவுளைப்போல வல்லமையுடையவனாய் இந்த உலகத்தில் செயல்பட முடியும் என்கிறார்கள் செழிப்பு உபதேசகர்கள். இதனால்தான் இவர்கள், நாம் நமது 'விசுவாசத்தை' அதிகரித்துக்கொண்டால் வாழ்க்கையில் தேவையான எதையும் சுலபமாக அடைய முடியும், அவற்றைத் தரும்படிக் கர்த்தரைக் கட்டாயப்படுத்த முடியும் என்று விளக்குகிறார்கள். மனிதன் தெய்வீகத் தன்மையைப் பெற்றிருப்பதால் அவன் எதிர்பார்ப்பதை தெய்வீகத் தன்மையுடைய மனிதனுடைய பாட்னரான கடவுளால் கொடுக்காமல் இருக்க முடியாது என்பது இவர்களுடைய போதனை.

வேதம் போதிக்கும் மனிதனைப் பற்றிய அத்தனை விளக்கங்களுக்கும் எதிரானது செழிப்பு உபதேசிகளின் மனிதனைப் பற்றிய போதனைகள். கர்த்தரின் கிருபையால் பாவத்தில் இருந்து விடுபட்டு மறுபிறப்படையும் மனிதன் தெய்வமாகிவிடுவதில்லை. அவன் மனிதனாக, கர்த்தரின் பிள்ளையாக இருந்து பாவத்தோடு தொடர்ந்து போராட வேண்டியவனாக இருக்கிறான். பரிசுத்தத்தில் வளர வேண்டியவனாக இருக்கிறான். இதையெல்லாம் செழிப்பு உபதேசிகள் முற்றாக நிராகரிக்கிறார்கள். மறுபிறப்பு அடையும்போது மனிதன் பாவமில்லாதவனாக மாறிவிடுவதாகப் பொய் சொல்லி ஆத்துமாக்களை வஞ்சிக்கிறார்கள்.

### நரகத்தில் கிறிஸ்து

செழிப்பு உபதேசம் செய்பவர்கள் இயேசு கிறிஸ்துவையும் விட்டு வைக்கவில்லை. அவருடைய கல்வாரி மரணத்தையும் அதன் தாற்பரியத்தையும் இறைபோதனை என்ற பெயரில் அலங்கோலப்படுத்துகிறார்கள். கென்னத் ஹெகின் சொல்லுகிறார், "இயேசு கிறிஸ்துவின் சரீர மரணம் மனிதனின் பாவத்தைப் போக்காது" என்று (Hagin, *The Name of Jesus*, p. 29). கிறிஸ்துவின் ஆத்மீக மரணமே பாவிகளுக்கு நிவாரணம் பெற்றுத் தருகிறதாம். "சாத்தானுடைய தன்மையைக் கொண்டிருப்பதே ஆத்மீக மரணம் என்பது. அதைத்தான் இயேசு சிலுவையில் கொண்டிருந்தார்" என்கிறார் கென்னத் ஹெகின். இயேசு கிறிஸ்து சிலுவையில்

தன்னுடைய தெய்வீகத்தை இழந்து சாத்தானுடைய தன்மையை அடைந் தாராம். அதன் பின் அவர் நரகத்தில் தன்னுடைய மக்களின் பாவம் நீங்க நரக வேதனையைத் தாங்கி சாத்தானுக்கு பரிகாரப்பலி செலுத்தினா ராம். (ஆகவே, இயேசு சிலுவையில் எந்தப் பலியையும் செலுத்தவில்லை என்பது இவர்களுடைய போதனை.) நரகத்தில் கிறிஸ்து குட்டிச் சாத்தான் களினால் நரக துன்பத்தை அனுபவித்தார் என்றும் அதுவே அவருடைய சிலுவைப் பலி என்றும் இவர்கள் விளக்கமளிக்கிறார்கள். தன்னுடைய மக்கள் மறுபிறவி எடுப்பதற்காக இயேசு நரகத்தில் மறுபிறவி எடுத்தார் என்றும் கூறுகிறார்கள் செழிப்பு உபதேசகர்கள் (*Christianity in Crisis*). இதெல்லாம் வேதம் கிறிஸ்துவின் கல்வாரி மரணத்தைப் பற்றி விளக்கும் போதனைகளுக்கெல்லாம் முற்றிலும் முரணானவை. கிறிஸ்து கல்வாரியில் தமது மக்கள் தங்களுடைய பாவத்திலிருந்து விடுதலை அடைவதற்குத் தேவையான அனைத்தையும் செய்து முடித்துவிட்டார். அவருடைய சரீரப்பலி அதற்கு அவசியமாயிருந்தது. அவர் நரகத்திற்குப் போகவில்லை. நமது பாவத்தைத் தன்மேல் சுமந்து கர்த்தருடைய கட்டளைகளைத் தன்னில் நிறைவேற்றினார். அவருடைய சிலுவைப்பாடுகள் நமது பாவம் அவர் மீது வந்திறங்கியதையும், அதனால் கிறிஸ்து ஆத்மா, சரீரம் ஆகிய இரண்டிலும் அனுபவித்த வேதனைகளை விளக்குகின்றன. அது இந்த உலகத்தில் நிகழ்ந்ததே தவிர இதற்கு வெளியில் அல்ல. வேதப் புரட்டர் களான செழிப்பு உபதேசகர்கள் தங்களுடைய போலிப்போதனையை வலுப்படுத்திக் கொள்ள கிறிஸ்துவையும் விட்டுவைக்கவில்லை.

### ஜெபமல்ல ‘பொசிட்டிவ் கன்பெஷன்’ (Positive Confession)

செழிப்பு உபதேசிகள், கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் காணப்படும் சில வலிமையான சக்திகளை வெளிக்கொணர்ந்து சில ஆத்மீக விதிகள் நிறை வேறும்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இந்த ஆத்மீக விதிகளை வார்த்தையின் மூலம் நிறைவேற்றலாம் என்கிறார்கள் இவர்கள். ஆகவே, வார்த்தையைத் தொடர்ந்து நினைவு கூர்ந்து மனப்பாடமாக்கி திரும்பத் திரும்பச் சொன்னால் நினைப்பது நடக்கும் என்பது இவர்களு டைய போதனை. நான் எழுதிக் கேட்காமலேயே எனக்கு அனுப்பப் படும் ஒரு சிறு ஏடு ‘நூறு கிராம ஊழியம்’. அதன் ஆரம்பப் பக்கங்களில் சில வாக்குத்தத்த வேத வார்த்தைகள் தரப்பட்டிருக்கும். அதை வாசிப்ப வர்கள் அந்த வசனங்களைத் தொடர்ந்து சொன்னால் அவர்கள் வாழ்க் கையில் பணத்தொல்லை, நோய்த்தொல்லை, பிசாசுத் தொல்லை என்று சகல தொல்லைகளும் இல்லாமல் போய்விடும் என்று எழுதப்பட்டிருக் கும். ஒவ்வொரு இதழிலும் இதே கதைதான். இது செழிப்பு உபதேசத்தைப் பின்பற்றும் ஒரு தமிழ்நாட்டு அரைவேட்காட்டு ஊழியம். ஆனால், இதில் பெரிய ஆச்சரியம் என்னவென்றால் இப்படி மற்றவர்களுடைய தொல்லைகள் நீங்க வசன வார்த்தைகளை அள்ளித் தெளித்து அவற்றைச் சொல்லிப்பார்த்து தங்களுடைய தேவைகளைப் போக்கிக் கொள்ளும்படி உபதேசிக்கும் இந்த ‘ஏட்டாசிரியர்’, எனக்கு வேகமான கம்பியூட்டர் தேவை, டிஜிட்டல் கெமரா தேவை, ஜிரோக்ஸ் மெசின் தேவை, மகேந் திரா வேன் தேவை என்று பட்டியல் போட்டு இந்தத் தேவைகள் நிறை வேற உதவி செய்யுங்கள், ஜெபியுங்கள் என்று எழுதுவது ஏன் என்று

*புரியவில்லை. தானும் சில வசனங்களைத் திரும்பத் திரும்ப சொல்லிப் பார்த்து இதெல்லாம் கிடைக்கும்படிச் செய்வதில் அவருக்கு நம்பிக்கை இல்லையோ? மற்றவர்களுக்கு செழிப்பு உபதேசம் தன்னுடைய தேவை களுக்கு பணப் பிச்சை, பொருள் பிச்சை!*

*போல் (இப்போது டேவிட்) யொங்கி சோவும் இதேமாதிரிதான் வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லி நம்முடைய தேவைகளை மனதில் உருவமாகப் பதித்து அவை கிடைத்துவிட்டது என்று நம்பும்படிப் போதிக்கிறார். செழிப்பு உபதேசிகள் இயேசு நம்மிடம் எதிர்பார்க்கும் ஜெபத்தை உதறித் தள்ளிவிட்டு கோயில் அர்ச்சகரைப் போல வார்த்தை மந்திரம் சொல்லும்படி நம்மை வற்புறுத்துகிறார்கள். இயேசு கிறிஸ்து நாம் ஜெபிக்க வேண்டும் என்று சொன்னபோது, நம்முடைய தேவை களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதைச் செய்யும்படிச் சொல்ல வில்லை. கர்த்தர் இறையாண்மையுள்ளவர், சகலத்தையும் ஆளுகிறவர், நம்மைப் படைத்தவர் என்ற உணர்வோடும் தாழ்மையோடும் சகலத்துக் கும் அவரில் நாம் தங்கியிருக்க வேண்டும் என்பதற்காக நாம் ஜெபிக்க வேண்டும் என்றார். ஜெபத்தின் மூலம் நாம் கர்த்தரோடு ஐக்கியத்தில் வருகிறோம். வெறும் சட்டி பானையையும், சோற்றையும் பெற்றுக்கொள்வ தற்காக கொடுக்கப்பட்டதல்ல ஜெபம். ஜெபம் செய்து நாம் கேட்பதைக் கொடுக்கும்படி கர்த்தரை ஒருநாளும் வற்புறுத்த முடியாது. அவர் நமக்குக் கட்டுப்பட்டவரல்ல. ஜெபத்தின் மூலம் நமது நிலையை அவருக்கு நாம் நிச்சயம் சொல்ல வேண்டும். நமக்கு எது நன்மை தருமோ அதை மட்டுமே கர்த்தர் நமக்கு எப்போதும் செய்வார். சகலத்தையும் படைத்தவருக்கே தமது பிள்ளைகளுக்கு எது நன்மையானது என்பதும், எதை எப்போது கொடுக்க வேண்டும் என்பதும் தெரியும். கர்த்தர் சிலவேளைகளில் நமது தேவைகளை நிறைவேற்றாமலிருப்பதும் நமது நன்மைக்கே. நமது தேவைகள் நிறைவேறவில்லை என்பதால் நமது ஜெபத்தில் குறைபாடு என்று அர்த்தமல்ல. நாம் சரியாக ஜெபித்திருந்தும், விசுவாசத்தோடு ஜெபித்திருந்தும் எல்லாம் தெரிந்த கர்த்தர் தனக்கு மட்டுமே தெரிந்த காரணத்தால் நாம் கேட்பதை நிறைவேற்றாமலும் இருப்பார். அந்த நிலையிலும் நமக்கு நன்மையையே செய்யும் கர்த்தர் எல்லாவற்றையும் நாம் நன்மையடையும் பொருட்டு கொண்டு நடத்துபவராக இருக்கிறார் என்ற எண்ணத்தோடு நாம் தொடர்ந்து அவரில் தங்கியிருப்பதற்குப் பெயர்தான் ஜெபம். ஜெபம் என்றால் என்னவென்றே தெரியாமல் செழிப்பு உபதேசகர்களும் அவர்களுடைய கத்துக் குட்டிகளும் இன்று ஜெபம் என்ற பெயரில் 'சூ! மந்திரக்காளி' சொல்லிக் கொண்டிருக் கிறார்கள்.*

### பாவமும், நோய் நொடியும்

*செழிப்பு உபதேசமளிப்பவர்கள் விசுவாசிகள் எந்தவிதத்திலும் இந்த உலகத்தில் குறைவில்லாதவர்கள் என்று போதிக்கிறார்கள். அவர்களில் பாவத்தின் எச்சம்* (Remaining sin) *இருப்பதையே நிராகரிக்கிறார்கள். அவர்கள் பாவத்தோடு போராட வேண்டியவர்களாக இந்த உபதேசம் போதிப்பதில்லை. அத்தோடு விசுவாசிகள் வாழ்க்கையில் குறைபாட்*

*டோடு இருக்கக் கூடாது என்பது இவர்களுடைய போதனை. செழிப்பு உபதேசகரான ரொபட் டில்டன்* (Robert Tilton) *சொல்லுகிறார், 'கர்த்தர் செழிப்பைத் தருவதாக வாக்களித்திருக்கும்போது நாம் வறுமையில் இருப்பது பாவம். கர்த்தர் நமக்குத் தரப்போவதாக வாக்களித்திருப்பவற்றோடு எண்ணிப் பார்க்கும்போது புதுக்காரும், புது வீடும் சர்வ சாதாரணம்.'* (*Charismatic Chaos*, p. 285). *'10 டாலரைக் கொடுத்து 1000ஐப் பெற்றுக் கொள்ளுங்கள். 1000ஐக் கொடுத்து 10000ஐப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒரு வீட்டைக் கொடுத்து நூறு வீடுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். மாற்கு 10:30 இதைத்தான் சொல்லுகிறது' என்கிறார் கோப்லன்டின் மனைவி குளோரியா கோப்லன்ட். எப்படி இருக்கிறது இவர்களுடைய வருமான வளர்ச்சிக் கணக்கு? இவர்கள் 3 யோவான் 2ல், 'நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்' என்று யோவான் சொன்னதை செழிப்பு உபதேசத்திற்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். இங்கு யோவான் அந்த எண்ணத்தையே கொண்டிருக்கவில்லை. உன் வாழ்வில் நடப்பது எல்லாம் நன்மையாக இருக்கட்டும் என்ற கருத்தில் நாம் கூட வழமையாக விசுவாசிகளைப் பார்த்து சொல்வதுபோல்தான் யோவான் சொல்லியிருக்கிறாரே தவிர 'சுகமாயிரு' என்ற அந்த வார்த்தையில் பொருளாதார, செழிப்புக்கோ, உடல்நல செழிப்புக்கோ இடமேயில்லை.*


*வாழ்க்கையில் நோய்க்கும் இடமில்லை என்கிறார்கள் இவர்கள். "இயேசு 2000 வருடங்களுக்கு முன்பாகவே உங்களைக் குணமாக்கிவிட்டார். இப்போது அவர் உங்களைக் குணமாக்கப் போவதில்லை. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசத்தின் மூலம் உங்கள் சுகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுதான்" என்கிறார் பெனி ஹின்* (*Rise and Be Healed*, p. 44). *பெனி ஹின் இதற்கு ஏசாயா 53 ல் தீர்க்கதரிசி சொல்லுகிற வசனத்தைப் பயன்படுத்துகிறார். ஆனால், அந்த வசனம் இந்த உலகத்தில் நமக்கு நிரந்தர உடல் சுகத்தையும், பொருளாதார வசதியையும் வாக்களிக்கவில்லை. அந்த வசனத்துக்கு அப்படி விளக்கம் கொடுப்பது அடிமுட்டாள்தனம். எங்கள் வீட்டில் நாங்கள் சுகவீனத்தை அனுமதிப்பதேயில்லை என்று சொல்லுகிற பிரெட் பிரைஸின் மனைவிக்கு கென்சர் வியாதி. தனக்கு தலைவலியோ, ஜுரமோ 60 வருடங்களாக வந்ததில்லை என்று சொல்லுகிற கென்னத் ஹெகினுக்கு வைத்தியசாலைக்கு கொண்டு போகுமளவுக்கு நான்கு தடவைகள் இருதய வலி வந்தது. ஓரல் ரொபட்சின் இருதய வியாதியைக் குணப்படுத்திவிட்டதாக போல் கிரௌச்* TBN Broadcast *ல் சொல்லி சில மணி நேரங்களுக்குள்ளாக ரொபட்சுக்கு மறுபடியும் இருதய வலி வந்துவிட்டது. இதற்கெல்லாம் விளக்கம் கேட்கப் போனால் இதெல்லாம் பிசாசின் வேலை என்று திரித்துப் பேசிவிடுவார்கள். வாழ்க்கையில் நோய் என்பது சாத்தானின் வேலை என்றும் அதை வார்த்தையால் இல்லாமலாக்கிவிட வேண்டும் என்று போதிக்கிறார்கள் செழிப்பு உபதேசகர்கள். இவர்கள் பிணி தீர்க்கும் ஊழியத்தில் பெருமளவுக்கு ஈடுபடுவதற்கு இதுதான் காரணம். ஆனால், நம் வாழ்க்கையில் நோய் ஏற்படுவதற்கு சாத்தான் நேரடிக் காரணமென்று வேதம் எங்குமே போதிக்கவில்லை. பாவம் இருக்கும் உலகத்தில் மனிதனுக்கு*

*தலைவலியும், இருதய வலியும் வந்தே தீரும். பரலோகத்திலேயே இதெல் லாம் இருக்காது. உடல் சுகத்துக்கு பெரு முக்கியத்துவம் அளிக்கும் செழி ப்பு உபதேசகர்கள் ஆத்மீக விடுதலைக்கு எந்த வழியையும் காண்பிப்ப தில்லை. அவர்களுடைய போதனைகளில் சுவிசேஷத்திற்கு எந்த இடமு மில்லை.*

*கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டுள்ள சுவிசேஷத்தை அவருடைய வார்த்தையின்படி பிரசங்கிக்க மறுத்து மனித சிந்தனையில் உருவான வேதவிரோதக் கோட்பாடுகளை செழிப்பு உபதேசகர்கள் கிறிஸ்துவின் பெயரில் போதித்து வருகிறார்கள். இதை நம்பி வட்டிக்குப் பெருங்கடன் வாங்கி ஒரு சபைக் கட்டிடத்தைக் கட்டி வாங்கிய தொகையையும் வட்டி யையும் கட்ட முடியாமல் வாழ்க்கையைப் பாழடித்துக் கொண்ட ஒரு ஊழியனைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி அநியாயமாக பொய்யை நம்பி தங்களுடைய இருதயத்தைப் பாழடித்துக் கொள்கிற வர்கள் தமிழர் மத்தியில் அதிகம். பரிசுத்தமான ஆத்மீக வாழ்க்கை என் பது பணத்துக்காகவும், பொருளுக்காகவும் வாழும் வாழ்க்கை அல்ல. தொல்லைகளுக்கு மத்தியிலும் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் வாழ்க்கை அது. நண்பர்களே! இந்த செழிப்புப் பிசாசின் வலையில் இருந்து தப்புங் கள். இதிலிருந்து உங்களுக்கு விடுதலை கிடைத்திருந்தால் மற்றவர்களும் மனந்திரும்ப உதவுங்கள். இந்த உலகத்தில் பணத்திலும், நோயில்லா வாழ்க்கையிலும் புரள நினைப்பது வெறுங்கனவு. இரட்சகராம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து பரலோகம் போகும் வழியைப் பார்க்க பாவி களுக்கு சுவிசேஷத்தை சொல்லுவதே இன்று நமது பெருங்கடமை.*


## பாஸ்டர் ஆர். பாலாவின்
## அருளுரைகள்

**இப்போது ஒலிநாடாக்களில் (Audio Cassette) கிடைக்கும்**



1. **கர்த்தரின் பார்வையில் நோவா - 1**
2. **கர்த்தரின் பார்வையில் நோவா - 2**
3. **கர்த்தரின் பார்வையில் திருச்சபை**
4. **வாலிபர்களே ஜாக்கிரதை!**
5. **கர்த்தரின் தண்டனை**
6. **பத்துக் கட்டளைகளின் முக்கியத்துவம் - 1 - 2**

**விலை: (இந்திய) ரூபாய் 25/- (தபால் செலவு தனி) எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:**

**சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்**
**22 டீ. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 04**

# டிஸ்பென்சேஷனலிசம் தோற்றமும், வளர்ச்சியும் (4)

டிஸ்பென்சேஷனலிசம் தோன்றி வளர்ந்த வரலாற்றை விபரமாக இதுவரை கடந்த இதழ்களில் பார்த்து வந்திருக்கிறோம். டிஸ் பென்சேஷனலிசத்தின் போதனைகளை மாற்றி அமைக்கும் முயற்சியில் இன்று ஒரு பிரிவு அதற்குள்ளேயே உருவாயிருக்கிறது. இவர்கள் நியோ-டிஸ்பென்சேஷனலிஸ்டுகள் என்று அழைக்கப் படுகிறார்கள். இவர்கள் இதுவரை பொதுவாக இருந்த (Classical) டிஸ் பென்சேஷனலிசப் போதனைகளில் இருந்து தம்மை வேறுபடுத்திக் காட் டும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். இவர்கள் சார்ள்ஸ் ரைரி (Charles Ryrie, ஜே. வைட் பென்டிகொஸ்ட் (J. Dwight Pentecost), ஜோன் எவ். வெல்வூட் (John F. Walwoord) ஆகியோரே. டிஸ்பென்சேஷனலிசத்தின் மோசமான பிரிவினராகக் கருதப்படுகிறவர்கள் அல்ட்ராடிஸ்பென் சேஷனலிஸ்டுகள் (Ultradispensationalism). இதனை புலிங்கரிசம் (Bullingerism) என்றும் அழைப்பார்கள். புலிங்கர், இஸ்ரவேலையும் சபையையும் ஜே. என். டார்பியைவிட அதிகமாக வேறுபடுத்திப் பார்த் தார். புலிங்கருடைய எழுத்துக்களே அல்ட்ராடிஸ்பென்சேஷனலிசத்திற்கு வழிவகுத்தன. இது டிஸ்பென்சேஷனலிசப் பிரிவுகளிலேயே ஆபத்தானது.

இது தவிர கடுமைப் போக்கு டிஸ்பென்சேஷனலிசம் ('Hardline' dispensationalism) என்ற ஒரு பிரிவும் இருக்கிறது. ஜோன் மெக்காத்தர் (John McArthur Jr.) நியோ-டிஸ்பென்சேஷனலிசப் பிரிவைச் சேர்ந்தவர். இவர் கடுமைப் போக்கு டின்பென்சேஷனலிஸ்டுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பி, தங்களுடைய சிலுவையை சுமந்து கிறிஸ்துவுக்குப் பின்னால் போகாதவர்கள் இரட்சிப்பை அடையாதவர்கள் என்று ஆணித்தரமாக தன்னுடைய *Gospel According to Jesus* என்ற நூலில் எழுதி டிஸ்பென் சேஷனலிஸ்டுகள் மத்தியில் ஒரு பெருங்குண்டைத் தூக்கிப் போட்டார். இதனால் இவருக்கு அமெரிக்காவில் டிஸ்பென்சேஷனலிஸ்டுகளிடம் இருந்து பெரும் எதிர்ப்பு உருவானது. ஜோன் மெக்காத்தர் இதற்காக டிஸ்பென்சேஷனல் கோட்பாடுகளை முழுவதுமாகக் கைவிட்டு விட வில்லை. அவர் சீர்திருத்தப் போதனையான 'கர்த்தரின் உடன்படிக் கையை' (God's Covenant) இன்னும் கசப்புடனேயே பார்க்கிறார். இரட்சி ப்பைக் குறித்த சத்தியங்களில் அவர் இப்போது வேதபூர்வமான நம்பிக் கைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் இரட்சிப்பைப் பற்றிய போதனை ஒன்றே என்பதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். சபைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் மெக்காத்தர் இறுதிக்கால சம்பவங்களில் தொடர்ந்தும் டிஸ்பென்சேஷன லிசப் போதனைகளையே விசுவாசிக்கிறார். மெக்காத்தர் தொடர்ந்தும் வேதம் காட்டுகிற வழியிலேயே போவாரானால் அவருடைய ஏனைய

இறையியல் கொள்கைகளிலும் மாற்றம் ஏற்பட வழியுண்டு.

டிஸ்பென்சேஷனலிஸ்டுகள் மத்தியில் பல வேறுபாடுகள் இருப்பதால் எல்லோரையும் ஒரே பிரிவுக்குள் போட்டுவிட முடியாது. அத்தோடு ஒருவர் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்று அடையாளம் கண்டு பிடிப் பதும் எளிதல்ல. இருந்தாலும் நாம் இதுவரை பார்த்து வந்த வரலாற்று உண்மைகள் டிஸ்பென்சேஷனலிஸ்டுகள் யார்? அவர்களுடைய போத னைகள் யாவை? என்பதை நமக்கு ஓரளவுக்கு புரிய வைத்திருக்கும் என்று நம்புகிறேன்.

இனி இதற்கும் வேதபூர்வமான சீர்திருத்தப் போதனைகளுக்கும் (Biblical Reformed teaching) இடையில் உள்ள வேறுபாட்டைப் பார்த்துவிட்டு இந்த ஆக்கத்தை முடிப்பது அவசியமாகிறது. டிஸ்பென்சேஷனலிசமும், சீர்திருத்தப் போதனைகளும் சேர்ந்து வாழ்வது என்பது முடியாத காரியம். டிஸ்பென்சேஷனலிசம் இரட்சிப்பில் ஆரம்பித்து, ஆத்துமா பரிசுத்த வாழ்க்கையை வாழும் விதம், திருச்சபையின் பங்கு, கர்த்தரின் இரண் டாம் வருகை, இந்த உலகில் தேவ இராஜ்யம் என்று எல்லாக் கோட்பாடு களிலும் சீர்திருத்தக் கோட்பாடுகளோடு முரண்படுகின்றது. ஒரு விஷயத்தில் மட்டும் இரண்டும் ஒத்துப்போகின்றன. அதாவது, வேதம் மனித சிந்தனையில் தோன்றியதல்ல என்றும், அதற்கு மனித சிந்தனை யின் அடிப்படையில் விளக்கம் தர முடியாது என்பதிலும் லிபரலிசத்திற்கு எதிராக டிஸ்பென்சேஷனலிசமும், சீர்திருத்த கிறிஸ்தவமும் இணைந்து நிற்கின்றன. இதனால் இரு பிரிவுகளும் வேதத்திற்கு மதிப்புத் தர மறுக்கும் பெந்தகொஸ்தே/கெரிஸ்மெடிக் இயக்கத்துக்கு எதிரிடையாகவும் இருக் கின்றன. இந்த ஒற்றுமை இத்தோடு மட்டும் நின்று விடுகின்றது.

தமிழர் வாழும் நாடுகளில் சகோதரத்துவ சபைகள் பெரும்பாலும் டிஸ்பென்சேஷனலிசக் கொள்கைப் பிடிப்புள்ளவனவாக இருக்கின்றன. இவர்களில் பெரும்பாலானோர் டிஸ்பென்சேஷனலிசப் போதனைகளை முழுமையாக அறிந்திராதவர்கள். யாரோ அறிமுகப்படுத்தியதை தொடர் ந்து பின்பற்றி வருகிறார்களே தவிர தாம் விசுவாசிப்பதை ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அனேகருக்கு இல்லை. இவர்கள் ஸ்கோபீல்டு வேதக் குறிப்புகளை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் சுவிசேஷம் சொல்லுவதில் அதிக ஆர்வம் காட்டி திருச்சபை அமைப்பில் எந்தக் கவனமும் செலுத்தாமல் இருந்துவருவதற்கு டிஸ்பென்சேஷனலிசமே பெருங்காரணமாக இருக்கின்றது.

இவர்களைத் தவிர தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் பெரும்பாலான கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் டிஸ்பென்சேஷனலிசக் கோட்பாட்டைப் பின்பற்றுவனவாக இருக்கின்றன. இவர்களும் திருச்சபையைக் காலில் போட்டு மிதித்து வருகிறார்கள். அதற்குக் காரணம் டிஸ்பென்சேஷன லிசமே. சபைக்கு இன்று வேலையில்லை என்கிறது டிஸ்பென்சேஷன லிசம். அந்தப் பொய்யை வேதவாக்காக எண்ணிவருகிறார்கள் கிறிஸ்தவ ஸ்தாபனத்தார்.

டிஸ்பென்சேஷனலிசத்திற்கும் சீர்திருத்தப் போதனைகளுக்கும் இடை யில் இருக்கும் வேறுபாட்டை அடுத்த பக்கத்தில் வாசிக்கலாம்.

| *டிஸ்பென்சேஷனலிசம்* | *சீர்திருத்தப் போதனை* |
| --- | --- |
| 1. வேதம் முழுவதும் எழுத்துபூர்வமாக மட்டுமே விளக்கப்பட வேண்டும். | 1. வேதம் முழுவதும் அதன் இலக்கண, இலக்கிய, வரலாற்று அடிப்படையில் விளக்கப்பட வேண்டும். |
| 2. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இருவகையிலான இரட்சிப்புக்கான வழிகள். | 2. பழைய, புதிய ஏற்பாடுகளில் இரட்சிப்புக்கான வழி ஒரேவிதத்தில் மட்டுமே காணப்படுகின்றது. |
| 3. பழைய ஏற்பாட்டில் திருச்சபை இல்லை. | 3. பழைய ஏற்பாட்டில் திருச்சபையைக் காணலாம். |
| 4. பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் திருச்சபையில் அங்கத்தவர்களாக இல்லை. பரலோகத்திலும் இல்லை. | 4. பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் பரலோகத்தில் உள்ளனர். திருச்சபை அங்கத்தவர்களாகவும் இருக்கின்றனர். |
| 5. இஸ்ரவேலும், திருச்சபையும் ஒன்றோடொன்று தொடர்பில்லாதவை. | 5. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்கு மத்தியில் நாம் திருச்சபையைப் பார்க்கிறோம். |
| 6. புதிய ஏற்பாடு சபைக் காலமல்ல. அது கிருபையின் காலம், புறஜாதியினர் மத்தியில் சுவிசேஷ அறிவிப்புக்கான காலம் மட்டுமே. இது தேவ இராஜ்யத்தின் காலமல்ல. | 6. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து அப்போஸ்தலரை அடித்தளமாகக் கொண்டு சபையை நிறுவி வளர்க்கிறார். அனைவர் மத்தியிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு சபைகள் அமைக்கப்பட வேண்டும். இது தேவ இராஜ்ஜியம் நிகழும் காலம். |
| 7. இறுதிக் காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கிறிஸ்துவின் வருகை. | 7. இறுதிக் காலத்தில் கிறிஸ்து ஒரு முறை மட்டுமே வருவார். |
| 8. இறுதிக் காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நியாயத்தீர்ப்புகள். | 8. இறுதிக் காலத்தில் ஒரே ஒருமுறை மட்டுமே நியாயத்தீர்ப்பு. |
| 9. இறுதிக் காலத்தில் கிறிஸ்து யூதர்களைக் கொண்டு சபையையும் தன் இராஜ்யத்தையும் நிறுவ வருவார். | 9. இறுதிக் காலத்தில் கிறிஸ்து சபையைத் தன்னோடு எடுத்துக் கொண்டு போக வருவார். |

மேலே நாம் தந்துள்ள அட்டவனை டிஸ்பென்சேஷனலிசத்தின் பொதுவான போதனைகளை சீர்திருத்தவாத போதனைகளோடு ஒப்பிடுகின்றது. டிஸ்பென்சேஷனலிஸ்டுகளில் ஒரு பகுதியினர் (நியோ-டிஸ்பென்சேஷனலிசம்) இன்று இவற்றில் 2, 3, 4, 5, 6 ஆகியவற்றில் ஒருவிதத்தில் சீர்திருத்தப் போதனைகளோடு ஒத்துப் போகின்றனர். டார்பி, ஸ்கோபீல்டினுடைய போதனைகளின்படி நியாயப் பிரமாணத்திற்கும் (Law of God) விசுவாசிக்கும் எந்தவிதத்தொடர்பும் இல்லை. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனமும் இஸ்ரவேலுக்கு மட்டுமே தொடர்புடையதாக அவர்கள் விளக்கினார்கள். டிஸ்பென்சேஷனலிஸ்டுகளில் ஒரு பகுதியினர் இன்று இப்போதனைகளில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு தீர்க்கதரிசனங்களில் சபைக்குத் தொடர்புள்ள போதனைகளும் இருப்பதாகக் கருதுகின்றனர். இது வரவேற்புக்குரிய நல்ல மாற்றம். இது தொடர்ந்தால் நல்லதே.

# உன் வாலிப வயதில் கர்த்தரை நினை!

ஏலிசாவை ஏளனம் செய்ததற்காக 42 வாலிபர்களை (தமிழ் வேதத் தில் சிறு பிள்ளைகள் என்றிருக்கிறது. அவர்கள் சிறு பிள்ளைகள் அல்ல.) இரு பெரும் பெண்கரடிகள் கொன்று போட்டன என்று 2 இராஜாக்கள் 2: 23, 24-ல் வாசிக்கிறோம். கருணையுள்ள கர்த்தர் இதை ஏன் அனுமதித்தார்? பெற்ற வயிறுகள் பிள்ளைப் பாசத்தால் கத றும்படி இந்தக் காரியம் ஏன் நிகழ்ந்தது? இதற்கு பெற்றவர்களும் கொடூர மாக இறந்துபோன வாலிபர்களுமே பொறுப்பு. வாலிப வயதில் கர்த்த ரால் கொடுக்கப்பட்டுள்ள வசதிகளைப் பயன்படுத்தி நல்ல வழிகளில் போகாமல், படிப்பதிலும், ஆத்மீகக் காரியங்களிலும் கவனத்தை செலுத்தா மல் காலேஜ் பெண்களிடம் கைவரிசை காட்டுவது, மாலையில் சக வாலிபர்களுடன் கூடி வீண் அரட்டை அடிப்பது, சபையையும், போதகர் களையும் அலட்சியப்படுத்துவது என்று வாழ்ந்து வந்த அந்த வாலிபர்கள் அன்றைக்கு எலிசா யார் என்று தெரிந்தே அவனை அவமதித்தார்கள். அவர்கள் கூட்டமாகக் கூடி எலிசாவை சுற்றி வந்து ஏளனம் செய்தார்கள். எலிசா தீர்க்கதரிசி இந்த உலகத்தில் கர்த்தருக்குப் பிரதிநிதியாக இருந்தான். அவனிடமே கர்த்தருடைய வார்த்தை இருந்தது. அவன் கர்த்தரின் வழிகளில் போகும்படி இஸ்ரவேலரை நிர்ப்பந்தித்தான். அதெல்லாம் நன்றாகத் தெரிந்திருந்த அந்த வாலிபர்கள், கர்த்தரையும் அவருடைய வழிகளையும் வெறுத்து, ஊர் வம்பிலும், அரட்டை அடிப்ப திலும் காலத்தை செலுத்தி உலக இச்சைக்கு உட்பட்டு எலிசாவை துச்ச மாக எண்ணி வலுச்சண்டைக்கு இழுத்து வம்பு செய்தார்கள்.

இவர்களைப் பெற்றெடுத்த வயிறுகள் எப்படிப்பட்டவை? யெரொபெ யாம் பெத்தேலிலும், தாணிலும் நிறுவிய கன்றுகளை வணங்கி, பாகால் களைப் பின்பற்றிய ஆகாபின் வழிகளில் போய் கர்த்தருடைய கட்டளை களுக்கு தங்களுடைய வாழ்க்கையில் முற்றுப்புள்ளி வைத்த வயிறுகள். அவர்கள் பெற்றெடுத்த செல்வங்களும் “அப்பன் வழி என் வழி” என்று கர்த்தரை நிராகரித்து பாவவழிகளைப் பிறந்த நாளிலிருந்தே பின்பற்றிய வர்கள். கர்த்தரைப் புறக்கணித்த அவர்களுடைய பெற்றோர்கள் என்றுமே நல்லபுத்தி சொல்லி அவர்களை வளர்க்கவில்லை. ஆத்தும விருத்திக்கான எந்த வழிகளையும் காட்டவில்லை. பெற்றோர்களினால் ஊற்றப்பட்ட பாவப் பாலைக்குடித்து வளர்ந்து வாலிபத் திமிரில் இருதயத்தில் தேவபயம் எதுவுமின்றி அவர்கள் எலிசாவை அன்று நிந்தித்தது கர்த்த ரையே நிந்தித்ததற்கு சமமானது. இருதயம் கெட்டு கர்த்தரை ஏளனப் படுத்தியவர்களை தேவகோபம் சுட்டெரிக்கத்தான் செய்யும். அதுதான் அன்று நடந்தது. பெற்றோர்களும், வாலிபர்களும் இதை உணர்ந்து இந்தக் கிருபையின் காலத்தில் ஆத்மவிருத்திக்கான காரியங்களில் தீவிரமாக ஈடுபடுங்கள். பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளை தேவனுடைய வழிக ளில் நடத்துங்கள். தேவகோபத்திற்கு இன்றே தப்பிக் கொள்ளுங்கள்.

# கிறிஸ்துவின் பாடுகள்

## ஒரு சில கண்டனக் குரல்களுக்கான பதில்

மெல் கிப்சனுடைய ‘கிறிஸ்துவின் பாடுகள்’ படத்தை வேத போதனைகளின் அடிப்படையில் கடந்த இதழில் விமர்சனம் செய்திருந்தோம். அதைக் கைப்பிரதியாக பல ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் வெளியிட்டு பல நகரங்களில் விநியோகித்தோம். மெல் கிப்சன் கிறிஸ்துவை அறியாதவர். அவர் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். படமும் அந்த மதத்தை மகிமைப்படுத்தி அதனுடைய போதனைகளின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டிருந்தது என்பதை, அதாவது மெல் கிப்சனே தன்னுடைய பேட்டிகளில் விபரித்திருந்தையும் சுட்டிக் காட்டியிருந்தோம். இந்தப் படம் கிறிஸ்தவ சுவிசேஷத்தை விளக்குவதற்கு உதவாது என்றும், இதைப் பார்த்து பாவி மனந்திரும்ப வழி இல்லை என்றும் எழுதியிருந்தோம். அந்த விமர்சனம் பல இடங்களிலும் பலவிதமான வரவேற்பைப் பெற்றது. “கத்தோலிக்க மதத்தைப் பற்றிய உண்மைகளை வெளியிட்டு எங்களுடைய கண்களைத் திறந்ததற்காக நன்றி” என்று எழுதியவர்கள் பலர். அவர்களுடைய கண்கள் திறக்க இந்த ஆக்கம் உதவியிருப்பதற்காக கர்த்தருக்கு நன்றி. அதேநேரம் சுவிசேஷம் சொல்லுவதற்குக் கிடைத்திருக்கும் அருமையான சந்தர்ப்பத்தை இப்படிக் குறைகூறி எழுதுவதா? என்று ஆத்திரப்பட்டிருக்கிறார்கள் ஒரு சிலர். எப்படியாவது கிறிஸ்துவை அறியாதவன் மூலமாகவும் கிறிஸ்துவைப் பற்றி பாவிகள் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்ததே என்று சொன்னவர்களும் உண்டு. முக்கியமாக படம், காட்சி என்று கண்களுக்கு விருந்தளித்து சுவிசேஷத்தை சொல்வதை நாம் கண்டித்திருப்பது சிலருக்கு பிடிக்காமலும் போயிருக்கிறது. இருந்தாலும் இதையெல்லாம் நாம் எதிர்பார்த்ததுதான். எந்தளவுக்கு ரோமன் கத்தோலிக்க மதத்தின் ஆட்சி தமிழ் கிறிஸ்தவர்களின் மத்தியில் இருக்கிறது என்பதை இந்தவிதமான எதிர்மறையான ‘வரவேற்புகள்’ எங்களுக்கு தெளிவாக வெளிப்படுத்தின. அது எங்களுக்கு எந்த ஆச்சரியத்தையும் தரவில்லை.

தமிழகத்தில் நாம் இந்தக் கைப்பிரதியை வெளியிட்ட உடனேயே மெல் கிப்சனின் படத்தைப் பார்ப்பதை ஆதரித்து ஓரிரு கைப்பிரதிகளும் வெளிவந்திருந்தன. படத்தை ஆதரித்து எங்களுக்கு தனிப்பட்ட முறையில் இரண்டு விமர்சனக் கடிதங்கள் வந்தன. ஒன்றை எழுதியவர் என்ன காரணத்தாலோ தன்னுடைய பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. இரண்டாவது கடிதத்தில் கொடுக்கப்பட்டிருந்த விளக்கங்களில் குறிப்பிடும்படியான எந்தவிதமான புதிய அம்சங்களும் இருக்கவில்லை. அத்தோடு மெல் கிப்சனின் படத்தில் கத்தோலிக்க போதனை இல்லை என்பதை நிரூபிக்க உருப்படியான எந்த விளக்கத்தையும் எவரும் முன்வைக்கவில்லை. படத்தில் இருக்கும் கத்தோலிக்க அம்சங்கள் இவர்

களுடைய கண்களில் படாமல் போனதற்கான காரணம் நமக்குத் தெரியாததல்ல. கத்தோலிக்க மதம் என்றால் என்னவென்று தெரியாமல் அதைக் கிறிஸ்தவத்தின் ஒருபகுதியாகப் பார்த்துப் பழகிப்போனவர்களுக்கு அந்த மதத்தின் வேதவிரோதப் போதனைகளை எப்படி இனங்கண்டு கொள்ள முடியும்? என் கைக்கு வந்த விமர்சனங்களில் பொதுவான மூன்று முக்கிய குற்றச்சாட்டுக்களை பார்க்க முடிந்தது. அவற்றிற்கு பதிலளிப்பது அவசியம்.

**(1) மெல் கிப்சனின் படம் கத்தோலிக்க மதத்தைப் பரப்பவில்லை. உண்மையில் அதில் கத்தோலிக்க போதனையே இல்லை. அதை எப்படிக் குறைகூற முடியும்?**

இப்படி எழுதப்பட்டிருந்தது ஒரு விமர்சனத்தில். ஆனால், படத்தை ஆதரித்த எல்லோருமே இப்படித்தான் சொன்னார்கள். பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு விட்டது என்று அர்த்தமல்ல. உலகத் தரம் வாய்ந்த செய்தி ஊடகங்களான சீ. என். என்னுக்கும், டைம்ஸ் பத்திரிகைக்கும் பேட்டியளித்து மெல் கிப்சனே தான் ஒரு கத்தோலிக்கர் என்றும், தனது மத நம்பிக்கைகளையே படத்தில் விளக்கியிருக்கிறேன் என்றும், வேதத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படத்தைத் தான் எடுக்கவில்லை என்றும், கத்தோலிக்க குருமார் குழு படத்தை எடுத்த தனக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள் என்றும் வெளிப்படையாக உலகமறிய சொன்ன பிறகும், இது கத்தோலிக்க படமே இல்லை என்று இவர்கள் சாதிப்பது முழுப்பூசணிக்காயை சோற்றில் வைத்து மறைப்பது போலிருக்கிறது. படத்தைத் தயாரித்த மெல் கிப்சனின் வார்த்தைகள் போதும் படத்தைப் பற்றி அறிந்துகொள்ள. திரைப்பட மோகத்தால், அதுவும் இயேசு படம் வந்திருக்கிறதே என்ற தீவிரமான குருட்டார்வத்தால் சிந்திக்கவே மறுத்து இவர்கள் பேசுவதால் படம் கத்தோலிக்க படமில்லாமல் போய்விடாது. எதையும் சிந்தித்து ஆராய முடியாதளவுக்கு தமிழ் கிறிஸ்தவர்கள் இருக்கும்வரை தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு என்றுமே தலைகுனிவுதான்.

இந்தப் படத்தில் கத்தோலிக்க மார்ஸ் பற்றிய போதனையே இல்லை என்று ஒருவர் எழுதியிருந்தார். அந்த முடிவுக்கு அவர் எப்படி வந்தார் என்பது தெரியவில்லை. மார்ஸில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைக் குடிப்பதாக கத்தோலிக்க மதம் கூறுகிறது. மார்ஸ் நிகழும்போதெல்லாம் கிறிஸ்து பலியிடப்படுகிறார். இது கத்தோலிக்க மதத்தின் உயிர்நாடிப் போதனை. இதனால்தான் கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, அதை மட்டும் படத்தில் இரத்தம் சொட்டச் சொட்ட தத்ரூபமாகக் காட்டியிருக்கிறார்கள். படத்தைப் பார்ப்பவர்கள் மனதில் அதைப் பதிய வைப்பதே படத்தின் முக்கிய நோக்கம். அதைத்தானே கத்தோலிக்கர்கள் மார்ஸில் பங்குபெறும்போதெல்லாம் நினைத்துப் பார்க்கும்படி அந்த மதம் எதிர்பார்க்கிறது. கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளை கத்தோலிக்க மதம் அணுகுகின்ற முறையில் இருந்து முற்றாக வேறுபட்டது கிறிஸ்தவ வேதம் அதுபற்றித் தருகின்ற போதனை. இதுகூட கிறிஸ்தவர்கள்

*என்று தம்மை அழைத்துக் கொள்ளுகிற பலருக்குத் தெரியாமலிருப்பது வருந்தவேண்டிய விஷயமே.*

**(2) கடவுளை அறியாத மனிதனைக்கொண்டு சுவிசேஷம் சொல்ல ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதை ஏன் குறைகூற வேண்டும்?**

*மெல் கிப்சன் விசுவாசி அல்ல என்று இவர்கள் ஒப்புக்கொண்டாலும் அவரை வைத்து கர்த்தரே இயேசு படம் எடுக்க வழி ஏற்படுத்தி இருக்கிறார் என்று இவர்கள் தப்புக்கணக்குப் போடுகிறார்கள். இதற்கு சாக்குப்போக்கும் சொல்லும் ஒருவர் பீலேயாமின் கழுதையைக் கூட தன் காரியத்துக்கு கர்த்தர் பயன்படுத்திக் கொள்ளவில்லையா? என்று கேட்கிறார். உண்மைதான். பீலேயாமின் கழுதை விவகாரம் ஒருதடவை தான் நடந்தது. அது விதிவிலக்கே தவிர வழமையாக நடக்கும் விதிமுறை அல்ல. சுவிசேஷம் எப்படி, யாரால், எந்தவகையில் சொல்லப்பட வேண்டும் என்றெல்லாம் கர்த்தர் தன் வார்த்தையில் எழுதிக் கட்டளையாகத் தராமலிருந்திருந்தால் நாம் கழுதை உதாரணங்களைக் காட்டி வாதாட வழி இருக்கிறது. ஆனால், கர்த்தர் மத்தேயு 28-ல் சுவிசேஷம் சொல்லும் படிக் கட்டளையிட்டபோது அவர் அதை அவிசுவாசிகளுக்கு கொடுக்க வில்லை. அதை அன்று அவருடைய அப்போஸ்தலர்களும் இன்று திருச் சபையும் செய்ய வேண்டிய பணியாக இருக்கின்றது. 1 கொரிந்தியரில் பவுல், தான் சிறையிலிருந்தபோது தவறான எண்ணத்தோடு சுவிசேஷம் சொன்ன சில விசுவாசிகளைக் குறித்துப் பேசும்போது அதற்காக தான் ஆனந்தப்படுவதாக சொல்கிறார். இதற்குக் காரணம் சொன்னவர்கள் விசுவாசிகளாக இருந்ததும், அவர்கள் சொன்னது மெய்யான சுவிசேஷமாகவும் இருந்ததுதான். அவர்களுடைய நோக்கம் மட்டுமே தவறாக இருந்தது. இந்த உதாரணம் மெல் கிப்சனுக்குப் பொருந்தாது. மெல் கிப்சன் விசுவாசியே அல்ல. மெல் கிப்சன் சொன்னதும் சுவிசேஷமே அல்ல. சுவிசேஷத்தை அறிவிக்க இந்தப் படத்தை எடுத்திருப்பதாக மெல் கிப்சன் ஒரு தடவையாவது சொன்னதும் கிடையாது.*

*அவிசுவாசிகளை வைத்து சுவிசேஷம் சொல்ல வேண்டிய அளவுக்கு கர்த்தரின் ஊழியம் அத்தனை மோசமாகப் போய்விடவில்லை. இறை ஆண்மையுள்ள கர்த்தர் மெல் கிப்சன் போன்ற கத்தோலிக்க அவிசுவாசிகளில் தன்னுடைய சுவிசேஷப் பணிக்காகத் தங்கியிருக்கவில்லை. அத்தோடு, கண்கள் குருடாய்ப்போய் பாவத்தில் சாத்தானுக்குப் பணி செய்து கொண்டிருக்கும் பாவிகளுக்கு சுவிசேஷம் சொல்லும் எண்ணமே ஒருபோதும் ஏற்படாது என்பது இவர்களுக்கு ஏனோ புரியவில்லை. பாவிகள் கர்த்தரையும் அவருடைய வழிகளையும் எதிர்ப்பார்களே தவிர அவற்றை ஆதரித்துப் பேசமாட்டார்கள். பாவத்தின் கோரத்தை அறியாத இருதயங்களே பாவிகளுக்காகப் பரிந்து பேசுவதாக இருக்கும்.*

**(3) சுவிசேஷம் சொல்லுவதற்கு இந்த நவீன யுகத்தில் திரைப்படம் மிகவும் அவசியம்.**

*நமது விமர்சனத்தில் எத்தனையோ அதிமுக்கியமான இறையியல் விளக்கங்களை நாம் தந்து அதன் அடிப்படையில் படம் ஏன் கிறிஸ்துவை*

*மகிமைப்படுத்தவில்லை என்று விளக்கியிருந்தோம். இவர்கள் அவற்றை சிறிதும் வாசித்து சிந்தித்துப் பார்க்காமல் படம் காட்டி சுவிசேஷம் சொல்லுவதை நியாயப்படுத்தப் புறப்பட்டிருப்பது சிறுபிள்ளைத்தனமான செயலாகவே எனக்குத் தோன்றுகிறது. கடலில் ஓடம் கவிழுகிறதே என்று கவலைப்படாமல் தான் பிடித்த மீன் தண்ணீரோடு போய் விட்டதே என்று வருத்தப்பட்டானாம் ஓடக்காரன். அதுபோல் இந்தப் படத்தின் மூலம் கத்தோலிக்க மதப்பிரச்சாரம் நடப்பதை புரிந்து கொள்ள முடியாமல், விஷத்தை விஷமாகப் பார்க்கத் தெரியாமல் சுவிசேஷம் சொல்ல இது உதவுமே என்று கவலைப்படுவது சிறுபிள்ளைத்தனமே.*

*படம் எப்படி இருந்தாலும், ரோமன் கத்தோலிக்கரும், புறஜாதியாரும் இயேசுவை விசுவாசிக்க இதன் மூலம் வாய்ப்புக் கிடைத்திருக்கிறதே என்கிறார் இவர்களில் ஒருவர். அது வெறும் அசட்டு நம்பிக்கையாகத் தான் எனக்குப் படுகிறது. ஆராய்ந்து சொல்லப்படுகிற கருத்தாக அது இல்லை. திட்டமிட்டு எடுக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்தமான ஒரு கத்தோலிக்கப் படம் எந்தவகையில் சுவிசேஷத்தைக்கூறி கிறிஸ்துவை மகிமைப் படுத்தப் போகிறது என்பது எனக்குப் புரியவில்லை. கோடிக்கணக்கான பணத்தை வாரியிரைத்திருப்பதாலும், புகழ்பெற்ற ஒரு நடிகர் அதைத் தயாரித்திருப்பதாலும், கண்களைக் கவரும் வகையில் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி காட்சிகளை எடுத்திருப்பதாலும், நூற்றுக் கணக்கான நாடுகளில் ஒரே நேரத்தில் காட்டப்படுவதாலும் மட்டும் இறையியல் குளருபடியுள்ளதும், இரண்டாம் கட்டளையை முழுமுற்றாக நிராகரிக்கின்றதும், கத்தோலிக்கவாடை வீசுவதுமான ஒரு படத்தை பரிசுத்த ஆவியானவர் பாவிகளுக்கு இரட்சிப்பை அளிக்கப் பயன்படுத்து வார் என்று எதிர்பார்ப்பது தேவநிந்தனை செய்வதற்கு ஒப்பானதாகும்.*

*இருந்தாலும் திரைப்படம் காட்டுவதற்காக இவர்கள் ஏன் இப்படிக் குதிக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெளிவாகப் புரிகிறது. எந்தளவுக்கு தமிழகத்தில் பிரசங்கம் அடுப்பங்கறை ஓரத்திற்குத் தள்ளப்பட்டு அதைத் தவிர்ந்த ஏனைய செய்திப்பரவல் முறைகள் தேவ செய்தியை விளக்கப் பயன்படுத்தப்படுகின்றன என்பதற்கு இந்தவித நியாயப்படுத்தல்களே சான்றுகளாக இருக்கின்றன. பிரசங்கத்தைக் கர்த்தர் எதற்காகக் கொடுத் திருக்கிறார் என்பதையும், அதன் வல்லமையையும், மகிமையையும் அறிந் திருக்கிறவர்கள் படம் காட்டுவதை நியாயப்படுத்திப் பேசத் துளியளவும் எண்ணமாட்டார்கள். தெளிவான வேதக்கோட்பாடுகளை அறியாமலும், பிரசங்கத்தை வேதபூர்வமாகத் தயாரித்து ஆவியின் பலத்தோடு எப்படிப் பிரசங்கிப்பது என்ற நலிவு சுளிவுகள் தெரியாமலும் இருப்பவர்களுக்கு படம் காட்டுவதைவிட வேறு கதியில்லைதான். மலடிக்கு எங்கே தெரியும் பிள்ளையின் வருத்தம்.*

*இயேசுவின் காலத்தில் தேவைப்பட்டதுபோல் இந்த நவீன யுகத்தில் பிரசங்கத்தை நம்பியிராமல் திரைப்படத்தை நாடவேண்டும் என்று யார் சொன்னது? திரைப்படம் இல்லாத குறையாலா இயேசுவும், பவுலும், பேதுருவும் பிரசங்கத்தை நம்பியிருந்தார்கள்? வெறும் வார்த்தையால் உலகத்தைப் படைத்த தேவ குமாரனுக்கு தன் காலத்தில் திரைப்படத்தை*

*உருவாக்கியிருக்க முடியாதா? அவருடைய காலத்தில் இருந்த எந்தக் கலைகளையும்கூட அவரும், அப்போஸ்தலர்களும் சுவிசேஷம் சொல்லவும், சத்தியத்தை விளக்கவும் பயன்படுத்திக்கொள்ளவில்லையே. நாட்டியம், நடனம், நாடகம், தெருக்கூத்து போன்றவை அவர்களுடைய காலத்தில் இல்லாமல் இருக்கவில்லை. இருந்தபோதும் அவர்கள் பிரசங்கத்தையே நம்பினார்கள், அதையே பயன்படுத்தினார்கள். பிரசங்கத்தை நம்பாது, அதைச் செய்யும் திறமையில்லாது, அதைச் செய்வதற்கு எந்த வழிவகைகளையும் நாடாது வேறுவழிகளில் ஊழியம் செய்யப் பலர் புறப்பட்டிருப்பதால்தான் தமிழர் வாழும் நாடுகளிலெல்லாம் பிரசங்க ஆசீர்வாதத்தை அறியாமல் கிறிஸ்தவம் ஆவியின் வலிமையற்று தலை குனிந்து நிற்கிறது.*

*கடைசியாக ஒன்றை மட்டும் கூறிமுடிக்க விரும்புகிறேன். கர்த்தர் நம்மை மனிதர்களாகப் படைத்து சிந்திக்க மூளையைக் கொடுத்து, பேசவும், கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ளவும் மொழியைக் கொடுத்திருக்கிறார். பாவிகளாகிய நாம் அவரை விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள அவர் எழுத்தையும், பேச்சையுமே பயன்படுத்தியிருக்கிறார். தமது சித்தத்தை முழுமையாக எழுதி வார்த்தையாக நமக்குத் தந்திருக்கிறார். அந்த வார்த்தையை நாம் பிரசங்கிக்கும்படியாகக் கட்டளையுமிட்டிருக்கிறார் (ரோமர் 10). ஏன் தெரியுமா? பாவத்தில் இருந்து விடுதலை அடையவும், நித்திய ஜீவனை அடையவும் மனிதன் முதலில் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான். பரிசுத்த ஆவியானவர் கர்த்தரின் வார்த்தைகளைப் பயன்படுத்தி மனிதனை சிந்திக்க வைத்து அவனுடைய பாவத்தை உணர்த்தி இரட்சிப்பை அவன் நாடி அடையும்படிச் செய்கிறார். நித்திய ஜீவனைப் அடைவதற்கு மனிதனுடைய மனம் செய்யவேண்டிய பணிகளைக் கண்கள் செய்ய முடியாது. வார்த்தையைக் கேட்டு சிந்திப்பதற்கு மனிதனுக்கு காதும் மனமும் அவசியம். கண்களல்ல. கண்கள் இல்லாத ஒருவன் காதுகளும், மனமும் இருந்து அவற்றைப் பயன்படுத்தி நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், காது கேட்காமலும், சிந்திக்கும் பக்குவம் இல்லாத அளவுக்கு மூளை இல்லாத ஒருவன் வெறும் கண்களை மட்டும் வைத்துக் கொண்டு பரலோகம் போக முடியாது. கண்கள் அவை எத்தனைக் கூர்மை உள்ளவையாக இருந்தபோதும் இரட்சிப்புக்குரிய செயல்களுக்கு பயன்படாது. காட்சிகள் அதிக நேரம் நீடிக்காது. ஒரு காட்சியை வைத்து மனதால் சிந்திக்க முடியாது. காட்சிகளின் பணி கருத்துக்களை விளக்குவது அல்ல, கண்களுக்கு விருந்து அளிப்பதுதான். ஆனால், மனம் காதால் கேட்ட கருத்துக்களை தொடர்ந்து சிந்திக்கும். அவற்றை அசைபோடும். கேட்ட, சிந்தித்த கருத்துக்களின் அடிப்படையில் ஒரு தீர்மானத்திற்கு வரும். அதனால்தான் படத்தைவிட பிரசங்கம் அவசியம். வாசிப்பதற்கு வார்த்தைகள் அவசியம். கேட்பதற்கு காதுகள் அவசியம். சிந்திப்பதற்கு மனம் அவசியம். இவை தெரியாமலா நம்மைப் படைத்த கர்த்தர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று கட்டளையிட்டு, பிரசங்கிக்கிறவனுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் (ரோமர் 10:15) என்று எழுதி வைத்திருக்கிறார்.*

# போலி ஆவணங்களும், ரோம சபைக் குழப்பங்களும்

சபை வரலாற்றின் அனைத்து அத்தியாயங்களிலும் வியப்பூட்டுவதாக இருப்பது ரோமின் போப்புகள் தயாரித்த போலி ஆவணங்களும், போலிக் கட்டளைகள் பற்றிய உண்மைகளும், கொன்ஸ்டன்டைன் அளித்ததாகக் கருதப்படும் நன்கொடையும். ரோமப் போப்புகள் தங்களுடைய பதவிக்காலத்தில் அனேக அதிகாரபூர்வமான கட்டளைகளையும், தீர்ப்புகளையும் வழங்கி இருக்கிறார்கள். அவற்றை ஆவணங்களாக (Decretals) சபை காத்து வந்தது. 850-ம் ஆண்டளவில் முன்னைய போப்புகளின் கட்டளைகள் என்ற பெயரில் அனேக போலிக் கட்டளைகளும், ஆவணங்களும் பிராங்கிஸ் பிரிவைச் சேர்ந்தவர்களால் விநியோகிக்கப்பட்டன. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இசிடோர் செவலே (Isidore Seville) என்ற பிரபலமான எழுத்தாளருக்கு இது சொந்தமானது என்ற தகவலும் உலவ ஆரம்பித்தது. ஆனால், போப்புக்களின் மெய்யான ஆவணங்கள் என்று கருதப்படுபவை சிரிசியசினுடைய (Siricius 384-398) காலத்தைச் சேர்ந்தவை. இந்தப் போலி ஆவணங்களில் அடங்கியிருந்த கட்டளைகளும், கடிதங்களும் முதலாம் நூற்றாண்டில் இருந்த போப்பால் எழுதப்பட்டவை என்ற அறிவிப்போடு விநியோகிக்கப்பட்டன. இந்தப் போலி ஆவணங்களைத் தயாரித்தவன் நல்ல படிப்பறிவுள்ளவனாகவும், இந்தக் காரியத்தில் கைதேர்ந்தவனாகவும் இருந்திருக்கிறான்.

இந்த ஆவணங்கள் விநியோகிக்கப்பட்டதற்கான காரணத்தை ஊகிப்பது இலகுவானது. நாட்டிலும், திருச்சபையிலும் போப்பின் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளுவதற்காகவும், வேதபோதனைகளுக்கெல்லாம் முரணான குருமார்களின் அமைப்பை நியாயப்படுத்திக் கொள்வதற்குமே இந்த போலி ஆவணங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்த மாதிரியான போலி ஆவணங்களையும், போலித் தகவல்களையும் வைத்தே ரோம சபை தனது இடத்தை வலிமையாக நிலைநாட்டிக் கொண்டு வளர்ந்தது. பதினைந்தாம் நூற்றாண்டு மறுமலர்ச்சிக் காலத்தில் அறிஞர்களும், வரலாற்று அறிஞர்களும் இந்த ஆவணங்களெல்லாம் போலியானவை என்று உணர்ந்தபோதும் ரோமசபை இவற்றை நடைமுறையில் பயன்படுத்துவதை எந்தவிதத்திலும் நிறுத்திக் கொள்ளவில்லை.

## கொன்ஸ்டன்டைனின் நன்கொடை

இன்னுமொரு போலி ஆவணத்தில் 324-ம் ஆண்டில் போப் சில்வஸ்டர் கொன்ஸ்டன்டைனுக்கு திருமுழுக்கு அளித்ததாகவும் அதற்கு அன்பளிப்பாக கொன்ஸ்டன்டைன் போப்புக்கு லெட்டரன் மாளிகையையும் (Lateran Palace), மேற்கு இத்தாலி நாடு உட்பட இராஜ்யத்தின் அத்தனைப் பகுதிகளையும், ரோமப் பேரரசின் ஏனைய பகுதிகளையும் அளித்ததாகத்

தெரிவிக்கிறது. ரோம சபையால் பரப்பப்பட்ட இந்தப் பொய்ச் செய்தியை உணர்வதற்கு அதிக நேரமெடுக்காது. ஏனெனில், கொன்ஸ்டன்டைன் ஆரியன் பிசப்பான இசூபியஸ் நிக்கொமீடியாவிடமிருந்து (Eusebius Nicomedia) திருமுழுக்கு பெற்றாரே தவிர சில்வஸ்டரிடமிருந்தல்ல. அதுவும் 337-லேயே திருமுழுக்கு பெற்றுக் கொண்டார். 324-ல் அல்ல. இந்தப் பொய்யை ரோம சபை பரப்பியதற்கு ஒரு முக்கிய காரணமுண்டு. பெப்பின், சார்ளிமன் ஆகிய அரசர்கள் காலத்தில் வழங்கப்பட்ட நாடாளும் அதிகாரத்தை இன்னும் 500 ஆண்டுகளுக்கு முன் தள்ளிக் காட்டுவதற்காகவே இதை ரோம சபை செய்தது. கொன்ஸ்டன்டைனோ அல்லது அவருக்குப் பின்வந்த எந்தப் பேரரசரோ மேற்கில் நாடாளும் அதிகாரத்தை ரோமப் போப்புக்குக் கொடுக்கக் கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை. இந்தப் பொய்க் கதை உருவாவதற்கு எந்தப் போப்பும் நேரடியாக உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அதை அவர்கள் நம்பி தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். காலம் செல்லச் செல்ல கட்டுக்கடங்காத அதிகாரங்கள் தங்களுக்கிருப்பதாக ரோம சபை சொல்லுவதற்கு இது வழிவகுத்தது. இந்த அதிகாரங்களுக்கு உரிமை கொண்டாடிய முதல் போப் முதலாம் நிக்கோலஸ் (Nicholas I, 858-867) ஆகும். நிக்கோலஸ் ஆணவத்தோடு, 'போப் முடிவு செய்ததை அனைவரும் பின்பற்ற வேண்டும்' என்று கொக்கரித்தார். இதைச் செயல்படுத்தும்படியாக பேரரசன் 2ம் லோத்தேயர் (II Lothair) விவாகரத்து செய்த தன்னுடைய மனைவியை மீண்டும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டார். அத்தோடு பேரரசனுடைய தீய நோக்கங்களுக்கு துணைபோன இரண்டு ஆர்ச் பிசப்புக்களையும் பதவி நீக்கம் செய்தார்.

## ரோம சபையில் குழப்பம்

நிக்கோலஸுக்கு பின்பு வந்த இரு போப்புகளான ஹேடிரியனும் (Hadrian II), எட்டாம் யோவானும் (John VIII, 872-882) அரசியலில் தலையிடும் உரிமை தங்களுக்கு இருப்பதாகவும், பேரரசனை நீக்கும் அதிகாரமும் கூட தங்களுக்கிருப்பதாகக் கூறிக்கொண்டனர். ஆனால், பேரரசனை நீக்கும் முயற்சி 882-ல் இரத்தக்களரியில் போய் முடிந்தது. அதற்குப் பிறகு போப்புகள் தொடர்ந்து அரசியலில் தேவையில்லாமல் தலையிட்டதால் ரோம சபையில் குறிப்பிட்ட காலத்துக்கு பெருங்குழப்பம் நிலவியது. அநேக போப்புகள் இதனால் இருந்த இடம் தெரியாமல் போனார்கள். பேரரசன் சார்ளிமனுக்கு பின்பு அரச பதவி ஏற்றவர்களும் தகுதியற்றவர்களாக இருந்ததால் மரியாதை இழந்து போயினர். கடைசிப் பேரரசனாக இருந்தவன் கரோலிங்கியன் குடும்பத்தில் (Carolingian house) இருந்து வந்த சார்ள்ஸ் (Charles the Fat) ஆகும். இவன் 887ல் பதவியை இழந்தான். சார்ளிமன் நிறுவிய பெரும் பேரரசு இந்த முறையில் ஒரு முடிவுக்கு வந்தது.

ஒரு சரியான ஆட்சி இல்லாத இந்தக் காலத்தில் நோர்ஸ் கடற் கொள்ளையர்கள் (Norse pirates) ஐரோப்பாவை மறுபடியும் காட்டுமிராண்டித்தனத்திற்குள் தள்ளப் பார்த்தனர். அவர்கள் ஜெர்மனியின் கடற் பிரதேசங்களைத் தாக்கித் துறைமுகங்களை அழித்து ரைன் சமவெளிப் பிரதேசம்

முழுவதையும் வாளுக்கும், தீக்கும் இரையாக்கினார்கள். அவர்கள் இறுதியில் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டு நோர்மண்டியில் குடியேறினார்கள். அங்கிருந்து 1066-ல் இங்கிலாந்தைக் கைப்பற்றினார்கள். அதேவேளை இஸ்லாமியப் படை 9-ம் நூற்றாண்டில் ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பாவிற்கு வந்து சிசிலியையும் தென் இத்தாலியையும் கைப்பற்றித் தாம் போன இடமெல்லாம் பெருமோசத்தை விளைவித்தது. அதேவேளை ஹங்கேரியன் மெகியர்கள் கிழக்குப் பிரதேசத்தில் இருந்து ஐரோப்பாவைப் பயமுறுத்தினர். இவையெல்லாம் அரசியலிலும், மக்களின் சமய வாழ்க்கையிலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தின. இதைப் பற்றிக் குறிப்பிடும் சேவ் (Schaff) எனும் வரலாற்றாசிரியர் பின்வருமாறு கூறுகிறார்: 'இக்காலத்தில் பெயர் கிறிஸ்தவ உலகில் அரசர்களும், அவருக்குக் கீழிருந்தவர்களும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு மக்களைத் துன்புறுத்தி தங்களுக்குப் பிடித்தவர்களை பிசப்புக்களாக நியமித்து அதனால் கிடைக்கும் பணத்தைச் சுருட்டிக் கொண்டனர். மெட்ரொபொலிட்டன்கள் பிசப்புக்களைத் துன்புறுத்த, பிசப்புக்கள், மதகுருமார்களைத் துன்புறுத்த, அவர்கள் மக்களைத் துன்புறுத்தினர். கொள்ளைக்கூட்டங்கள் குழுக்களாக நாடு முழுவதும் நடமாடினார்கள்.'

சார்ள்ஸ் 887-ல் பதவி இழந்தபின்பு இத்தாலிய பெரிய மனிதர்கள் வலிமையுள்ளவர்களாக மாறி அதிகாரத்தைக் கைப்பற்ற தங்களுக்குள் போராடினர். இந்தப் போராட்டத்தில் சபை பெரிதும் பாதிப்புக்குள்ளாயிற்று. சேவ் (Schaff) சொல்லுகிறார், 'இந்தக் காலத்தில் போப்புக்கள் பண ஆசை மிகுந்து, கொலை செய்யவும் தயங்காதவர்களாக சாத்தானின் குகைகளைப் போல சபையை நடத்தினார்கள். அடுத்தடுத்து வந்த போப்புக்களில் அநேகர் தங்களுடைய வாழ்க்கையை சிறையில் அனுபவித்தனர் அல்லது கொலை செய்யப்பட்டனர்.'

இந்தக் காலத்தில் ஒழுக்கத்தில் மோசமான மூன்று பெண்கள் போப்புக்களாக இருந்தனர். மூப்பரான தியோடோராவும் (Theodora) அவளுடைய இரண்டு பெண்களான மரோசியாவும் (Marozia), தியோடோராவுமே (Theodora) இவர்கள். இவர்கள் ஒழுக்கமற்ற முறையில் தங்களுக்குப் பிறந்தவர்களை போப்புக்களாக்கினார்கள். மிகவும் அழகாக இருந்த இந்தப் பெண்கள் தங்களுடைய அழகாலும், ஒழுக்கக் கேட்டாலும் போப்புக்களோடு போட்ட கூத்துக்களை வார்த்தையில் விவரிக்க முடியாது. பரோனியஸ் (Baronius), லுயிட்பிராந்து (Luitprand) போன்ற முக்கிய ரோமன் கத்தோலிக்க வரலாற்று அறிஞர்கள்கூட எந்தவிதமான ஆத்திரமோ, உளப் பாதிப்போ இல்லாமல் இவற்றை விவரித்து தங்களுடைய வரலாற்று நூல்களில் எழுதியிருக்கிறார்கள். அதே நேரம் பழங்கருத்தான ரோமப் பேரரசுக் கனவும் பலரை இன்னும் பிடித்திருந்தது. அதைப் புதுப்பிக்கும் சகல முயற்சிகளும் தோல்வியிலேயே போய் முடிந்தன.

பதினொராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ரோமப் போப்புப்பதவிக்கு எல்லாமே கேட்டிலேயே போய் முடிந்தது. 1044-1046 வரை தகுதியில்லாத மூன்று பேர் தங்களைப் போப்பாக அறிவித்துக் கொண்டிருந்தனர். ஒரு போப்பை நியமித்து ரோம சபையைக் காக்கும்படி பேரரசன் மூன்றாம்

ஹென்றி கேட்டுக்கொள்ளப்பட்டான். இந்த நேரத்தில் போப்புக்களின் அதிகாரத்தைப் புதுப்பிக்கும் ஒரு குழு ரோமில் உருவானது. இக்குழுவில் முக்கிய பங்கு வகித்தவன் இளந்துறவியான ஹைடில்பிராண்டு (Hildebrand). இவன் போப்புக்களை நியமிக்கும் அதிகாரம் கார்டினல் களின் கையிலேயே இருக்க வேண்டும் என்று 1059-ல் ஏற்படுத்தப்பட்ட விதியை வலியுறுத்தி பேரரசன் அதில் தலையிட இடமளிக்காமல் செய் யப் பார்த்தான். ஹைடில்பிராண்டு வெகுவிரைவிலேயே சக்திமிக்க வனாக உயர்ந்து பல போப்புக்களை நியமிக்குமளவுக்கு செல்வாக்கு அடைந்தான். இவன் எதற்கும் சளைக்காதவனாகவும், கொடுமைக்கார னாகவும், தனது காரியங்களை சாதிக்கப் படைகளையும் பயன்படுத்தத் தவறாதவனாக இருந்தான்.

## ஐரோப்பாவில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சி (800-1075)

ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் அந்ஸ்கார் (Ansgar) டென் மார்க்கிற்கும், நோர்வேக்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றான். ஆனால், பதினோராம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை ஸ்கண்டி நேவியா முழுவதும் கிறிஸ்தவம் பரவியிருக்கவில்லை. ராஸ்டிஸ் (Rastiz) 846-ல் மொரேவியாவில் தனக்குக் கீழிருந்த பகுதியின் மக்களனைவரும் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளும்வரை அவர்களைக் கொன்று குவித் தான். பதினான்கு பொகீமிய இளவரசர்கள் 848-ல் திருமுழுக்கு பெற்றுக் கொண்டார்கள். ஆனால், ஜெர்மானியர்களிடமிருந்து கிறிஸ்தவம் அறி முகப்படுத்தப்பட்டதால் மக்கள் தொடர்ந்து அதனை தீவிரமாக எதிர்த் தார்கள். பல்கேரிய அரசனான போரிஸ் 860-ல், ராஸ்டிஸினுடைய வழி யைப் பின்பற்றி தன்நாட்டு மக்களைக் கொன்று குவித்தான். 968-ல் போலந்து பெயரளவில் கிறிஸ்தவ நாடானது. 973-ல் இருந்து மெகியர்கள் (Magyars) தம் நாட்டுக்கு பயணிகளாக வந்தவர்களின் ஊழியத்தால் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். 988-ல் அரசன் விலாடிமீரின் வேண்டுகோளின்படி கிரேக்க ஓர்தடொக்ஸ் சபையால் அனுப்பி வைக்கப் பட்ட கொன்ஸ்தாந்திநோபிளின் மூலம் இரஷ்யர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார்கள். கிரேக்க ஓர்தடொக்ஸ் சபையின் ஊழியத்தின் ஒரு பெரும் வெற்றி இரஷ்யர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டது. உலகின் ஏனைய பகுதிகள் இஸ்லாமியரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான போது இரஷ்யா அதற்குத் தப்பியது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறு திப் பகுதியில் ஐரோப்பாவில் பின்லாந்து, லெப்லாந்து ஆகிய நாடுகளைத் தவிர ஏனைய பகுதிகளனைத்தும் பெயர் கிறிஸ்தவத்தின் ஆளுகைக்குள் வந்தன.

நாம் விவரித்துக் கொண்டிருப்பது இந்தவகையில் பரவிய பெயர்க் கிறிஸ்தவத்தைத்தான் என்பதை வாசகர்கள் புரிந்துகொள்வது அவசியம். இயேசு போதித்து அவருடைய அப்போஸ்தலர்களால் நிறுவப்பட்ட மெய்க் கிறிஸ்தவம் இருந்த இடம் தெரியாமல் போகுமளவுக்கு வேத அடிப்படையிலில்லாமல் மனித சிந்தையில் உருவான பெயர் கிறிஸ்த வமே இந்த வகையில் வாளாலும், இரத்தத்தாலும் விஸ்தரித்தது. இதுவே ரோமன் கத்தோலிக்க மதமாக முழு உருவெடுத்தது.

# சபையா, சாத்தானின் குகையா?

தமிழ் கிறிஸ்தவ சபைகள் இன்று சபை அமைப்பை அலட்சியப் படுத்தி நடந்து வருகின்றன. பாரம்பரிய சபைகள் (Traditional Churches) சடங்குக்கும் பாரம்பரியத்திற்கும் பலியாகி ரோமன் கத்தோலிக்க மதத்தைப்போல குருமார்களை வைத்துக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய சபை அமைப்பு முறையை வேதத்தில் பார்க்க முடியாது. பாரம்பரிய சபைகளுக்கு வெளியில் இருக்கும் பிரிவுகள் தனியாக இயங்கி வரும் சபைகள். இவற்றில் பாப்திஸ்து, சகோதரத்துவ சபைகள், பெந்தகொஸ்தே/கெரிஸ்மெட்டிக் சபைகளை உள்ளடக்கலாம். பெந்தகொஸ்தே/கெரிஸ்மெட்டிக் சபைகளில் பெரும்பாலானவை வேதத்தைக் குழிதோன்டிப் புதைத்து நெடுங்காலமாகி விட்டது. சபை அமைப்பு என்றால் கிலோ என்ன விலை? என்று கேட்கும் அளவுக்கு அவர்களுடைய நிலைமை இன்று. அவர்களில் பலர் தங்களை அப்போஸ்தலர்களாகவும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். முதலாம் நூற்றாண்டில் இருக்க வேண்டியவர்கள், 20 நூற்றாண்டுகள் கடந்து போய் விட்டது கூட தெரியாமல் ஊழியம் செய்து வருகிறார்கள். இப்பட்டியலில் எஞ்சியிருக்கும் பிரிவுகள் பாப்திஸ்துகளும், சகோதரத்துவ சபைகளும்தான்.

சகோதரத்துவ சபைகள் தங்களை சபைகள் என்று அழைத்துக் கொண்டாலும் டிஸ்பென்சேஷனலிசத்தின் பாதிப்பால் சபை அமைப்பைப் பற்றிக் கவலைப்படாமல் சுவிசேஷம் சொல்லுவது மட்டுமே தங்கள் பணி என்று இருந்து வருகின்றன. இவர்களில் ஒரு சிலர் மட்டுமே சபையின் அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள். இவர்கள் சபைகளை அமைத்தாலும் அவற்றில் சபை அமைப்பைத் துளியும் பார்க்க முடியாது.

பாப்திஸ்து சபைகள் மத்தியில் பல பிரிவுகள் இருக்கின்றன. முழுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதால் மட்டுமே நாம் பாப்திஸ்துகள் என்ற ஒரே எண்ணத்தைக் கொண்டு இயங்குகின்றவைதான் எண்ணிக்கையில் அதிகம். அதற்குமேல் போய் வேத சத்தியங்களைப் பின்பற்றி நாம் ஏன் பாப்திஸ்துகள் என்ற மெய்யான அறிவோடு வளர்கின்ற சபைகள் தொகையில் குறைவு. இவர்களும் திருச்சபை அமைப்பில் அலட்சியம் காட்டி வருகிறார்கள். “என் சபையைக் கட்டுவேன்” என்று சொல்லி இயேசு தன்னுடைய சபையை நிறுவி அதற்குத் தேவையான அனைத்தையும் கொடுத்துச் சென்றிருக்க இவர்களில் பலர் அவற்றை நிராகரித்து, உதாசீனப்படுத்தி உலகப்பிரகாரமாக, சபை என்ற பெயரில் எதை எதையோ செய்து வருவது எந்தவிதத்தில் கர்த்தருக்குப் பிடித்தமானது என்பது புரியவில்லை. சபை அமைப்பு பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்ற எண்ணம் இவர்கள் மத்தியில் பரவலாக இருக்கிறது. இதற்கு சுயநலம்தான் முக்கிய காரணமே தவிர வேதம் அப்

படிப் போதித்திருப்பதால் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள அதிக நேரமெடுக்காது.

## வேதம் காட்டும் சபை அமைப்பு

முதலில், எந்த ஒரு விசுவாசிகளின் கூட்டமும் விசுவாசிகளான அங்கத் தவர்களைக் கொண்டு சபையாக அமைக்கப்பட வேண்டும். சபை என்று சொன்னால் அந்த சபைக்கு மட்டுமே உரிய அங்கத்தவர்கள் அதில் இருப்பார்கள். இவர்கள் தகுந்த முறையில் வேத அடிப்படையில் திரு முழுக்கு பெற்று அந்த சபையின் போதனைகள், நோக்கங்கள் அனைத் தையும் அறிந்தவர்களாக உரிய முறையில் தெரிவு செய்யப்பட்டு அங்கத் தவர்களாக இருப்பார்கள். அந்த சபையின் சட்ட அமைப்பு, விசுவாச அறிக்கை ஆகியவற்றை முழுமனத்தோடு ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு ஒப்புக் கொடுத்து வாழ்வதாக உறுதி எடுத்தவர்களாகவும் இருப்பார்கள்.

அடுத்ததாக, மூப்பர்களும் (Elders/Pastors), உதவிக்காரர்களும் (Deacons) ஒவ்வொரு சபையாலும் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் சபை அதிகாரிகளாக இருந்து மந்தையை வளர்க்க வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. இதில் மூப்பர்களுடைய (போதகர்கள்) பணி வேத போதனைகளை அளித்து சபையை ஆத்மீக வழியில் வழிநடத்துவது. இவர்கள் சபைத்தலைவர்களாக இருந்து சபையின் அனைத்துக் காரியங் களிலும் சபையை வேத அடிப்படையில் வழிநடத்திச் செல்ல வேண்டும். இவர்களுக்குக் கீழ் இருந்து உதவிக்காரர்கள் சபையின் நடைமுறைக் காரியங்களைச் செய்ய வேண்டும். உதவிக்காரர்கள் உபதேச ஊழியத் துக்காக அழைக்கப்பட்டவர்களல்ல. அவர்கள் போதகர்களுக்கு துணை யாக இருந்து சபைக் காரியங்களை போதகர்கள் காட்டும் வேதவழிகளின் அடிப்படையில் செய்து வர வேண்டும். இந்த இருபதவிகளுக்கும் நியமிக் கப்பட வேண்டியவர்களுக்கான தகுதிகள் வேதத்தில் தெள்ளத் தெளிவாக 1 தீமோத்தேயு 3லும், தீத்துவிலும் தமிழில் அழகாக விளக்கப்பட்டிருக் கின்றன.

இன்று வேதம் தெளிவாக விளக்குகின்ற இந்த சபை அமைப்பு தமிழ் சபைகளில் வெளிப்படையாக நிராகரிக்கப்பட்டு வருகிறது. சபை அமை ப்பு என்பதே இல்லாமல், எந்த சபைத் தொடர்பும் இல்லாமல் ஒரு தனி மனிதன் எங்காவது ஒரு ஊழியத்தை ஆரம்பித்து சுவிசேஷத்தை சொல்லி சில ஆத்துமாக்களைக் கூட்டி ஒரு வீட்டில் அல்லது தானே கட்டிய ஒரு சிறு வீட்டிலோ, கட்டிடத்திலோ 'ஜெப வீடு' என்ற பெயரில் சபை நடத்தி வருவது தமிழ் நாட்டில் நாம் பார்க்கின்ற ஒரு கிறிஸ்தவ கலாச்சாரம். இதை ஆரம்பித்த மனிதர் தன்னைத்தானே போதகனாக அறிவித்துக்கொண்டு சாகும்வரை சபை என்று அழைக்கப்படுகின்ற இந் தக் கூட்டத்திற்கு தலைவனாக இருந்து வருவார். இவரே இதற்கு பிரசி டன்ட். காலம் போகப்போக தன் மனைவியையும், பிள்ளைகளையும் ஊழியத்தில் பிரதிஷ்டை செய்து வைத்து அவர்கள் தனக்குப்பின் இந்தக் கூட்டத்தை நடத்திச் செல்ல வழி வகுத்து வைப்பார். எத்தனை வருடங் களானாலும் இந்த ஜெபவீட்டில் சபை அங்கத்துவத்திற்கோ, அமைப் பிற்கோ அல்லது மூப்பர்கள், உதவியாளர்களுக்கோ இடமிருக்காது. அங்கு

ஆராதனைக்கு வருபவர்களுடைய கடமை காணிக்கைகளை தவறாது அள்ளி அளிப்பது மட்டுமாகவே இருக்கும். தமிழினத்தில் இதற்குப் பெயர் தான் திருச்சபை ஊழியம். இதை சகோதரத்துவ சபைகளில் இருந்து பாப்திஸ்துகள்வரை அனைவரிடத்திலும் பார்க்கலாம். இவற்றில் ஒரு சில வளர்ச்சியடைந்து பிற்காலத்தில் ஒரே ஒரு போதகரையும், சில உதவிக்காரர்களையும் கொண்டிருக்கும். வளர்ச்சி இம்மட்டுந்தான் போகும். இதற்குமேல் எந்த மாற்றத்தையும் பார்க்க முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருக்கும் சபைகளை விரல்விட்டு எண்ணி விடலாம்.

## சபைகளில் கமிட்டி நிர்வாகம்

பெரும்பாலான சபைகளில் அங்கிருக்கும் போதகர் வேதம் போதிக்கும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களை அவர்களுக்குரிய தகுதிகளின் அடிப் படையில் அந்தந்த பதவிகளில் சபையைக்கூட்டி நியமிக்காது ஒரு 'கமிட்டியை' அமைத்து சபையில் நடைமுறை நிர்வாகத்தைக் கவனிக்கும் வேலையை அவர்களுக்கு அளிப்பார். இந்தக் கமிட்டியில் இருப்பவர்கள் சிலவேளைகளில் விசுவாசிகளாகக்கூட இருக்கமாட்டார்கள். இவர்கள் முக்கியமாக சபையில் நெடுங்காலம் இருந்து வந்துள்ள குடும்பங்களின் அங்கத்தவர்களாகவோ, போதகருடைய உறவினர்களாகவோ (மனைவி, பிள்ளைகள்), வயதானவர்களாகவோ, சமுதாயத்தில் முக்கிய இடத்தை வகிப்பவர்களாகவோ இருப்பார்கள். இந்தத் 'தகுதிகளின்' அடிப்படை யிலேயே இவர்கள் 'கமிட்டி' அங்கத்தவர்களாக வருவார்கள். போதகரு டைய வேலை போதிப்பதாகவும், கமிட்டியின் வேலை சபைக் காணிக் கையை கவனமாக எண்ணி சபைக்காரியங்களுக்கு போதகர் காட்டும் வழியில் செலவழிப்பதாகவும் இருக்கும். பல இடங்களில் முக்கியமாக பேங்க் அக்கவுன்ட், போதகர் அல்லது அவருடைய மனைவி பெயரில் இருக்கும். இது வெளிநாட்டுப் பணத்தை முடக்க ஒரு வழி. சில இடங் களில் கமிட்டியின் கை ஓங்கிவிடுவதும் உண்டு. பணமென்றால் பிணமும் வாய்திறக்குமல்லவா! பொதுவாக இத்தகைய கமிட்டி அமைப்பில் சபைப் பணம் போதகருடைய குடும்ப நன்மைக்காக பாதுகாக்கப்பட்டு வரும். சபையைச் சேர்ந்தவர்களுக்கு எந்தக் கணக்கு வழக்கோ, வருமானமோ ஒருநாளும் தெரியவராது. கமிட்டி அங்கத்தவர்கள் போதகருக்கு சாதக மாக இருப்பவர்களாக கவனமாகத் தெரிந்துகொள்ளப்படுவார்கள். 'ஒரு மாதிரியாக' சிந்திக்கிற கமிட்டி அங்கத்தவர்கள் வெகுவிரைவிலேயே கேள்வி முறை இல்லாமல் கமிட்டியில் இருந்து விலக்கப்படுவார்கள். சபையிலும் அவர்கள் ஓரங்கட்டப்படுவார்கள்.

சில சபைகளில் இந்தக் கமிட்டியின் கையோங்கி போதகர் ஓரங்கட்டப் படுவதுண்டு. போதகர் வெறும் பேச்சுக்குத்தான் போதகராக இருப்பார். அவர் கமிட்டியின் மனங்கோணாது நடந்துபோகிற வரையில் சபையில் 'கூலி' வாங்கிக் கொண்டு போதகராக இருக்கலாம். கமிட்டியைப் பகைத் துக் கொண்டால் அவருக்கு ஆபத்துதான். கமிட்டியின் கோபத்துக்கு ஆளாகி சபையில் இருக்கமுடியாமல் வெளியில் தள்ளப்பட்டு வேறு வேலைகளுக்கு போகிற போதகர்களும் உண்டு. எந்தளவுக்கு போதகரின்

*ஆட்கள் கமிட்டியில் இருக்கிறார்களோ அந்தளவுக்கு போதகர் கையோ ங்கி இருக்கும். இந்த கமிட்டி அங்கத்தவர்கள் ஆத்மீக அடிப்படையில், வேதத்தகுதிகளை ஆராய்ந்து நியமிக்கப்படாததால் சபையில் வேத அடிப் படையில் எதுவும் நடப்பதற்கு இடமிருக்காது. வேதம் அதிகம் தெரியாத வர்களாகவும், சத்திய வாஞ்சை எள்ளளவும் இல்லாதவர்களாகவும் இந்தக் கமிட்டியைச் சேர்ந்தவர்கள் இருப்பார்கள். இதுதான் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் பொதுவான சபை அமைப்பு.*

## திருந்தி வளர்வது திருச்சபை

*இன்று சபை ஊழியங்கள் வேத அடிப்படையில் நடக்க வேண்டுமா னால் சபை மக்கள் அறிவீனர்களாகவும், அடிமைகளாகவும் வாழ்வதை முதலில் நிறுத்திக் கொள்ள வேண்டும். வேதத்திற்கு மதிப்புக் கொடுக்கா மல், வேத அடிப்படையில் சபையை அமைக்காமல் கமிட்டி வைத்து சபை என்ற பெயரில் கடை நடத்தி வருவதை அனுமதிக்கக் கூடாது. வேதபோதனைகளுக்கெல்லாம் முரணாக நடப்பவர்களுக்கு நாம் அடங்கி வாழ்வது கர்த்தருக்குப் பிடிக்காதது. அவர்களுக்கு காணிக்கை கொடுப் பதும் தவறு. அத்தோடு, தேவபயத்தோடு வேத போதனைகளுக்கு உட் பட்டு நடக்காதவர்களுக்கு சபையில் எந்தப் பதவியையும் அளிப்பதை அனுமதிக்கக்கூடாது. மாதத்திற்கு இரண்டு முறை மட்டும் சபைக்கு தரிசனம் தந்து 'பந்தா' காட்டிவிட்டு போகிறவர்களையெல்லாம் சபையில் எந்தப் பதவியிலும் வைக்கக்கூடாது. குடும்ப வாழ்க்கை சரியில்லாதவர் களையும், வேதபோதனைகளுக்கு அடிபணியாதவர்களையும், சபைக் காரியங்களை பயத்தோடும், வாஞ்சையோடும் செய்யத் தவறுகிறவர் களையும் எந்தப்பதவிக்கும் சிபாரிசு செய்யக்கூடாது. இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு கலாச்சாரம், முகஸ்துதி என்ற பெயரில் மனித னுக்கு 'துதி'பாடி நமக்கேன் தலைவலி என்று இருந்துவிடுகின்ற ஆத்துமாக் கள் நியாயத்தீர்ப்புக் காலத்தில் கர்த்தருக்கு கணக்குக் கொடுக்க நேரிடும். சபை என்ற பெயரில் இருக்கும் சாத்தானின் குகைகளில் உங்களுடைய மனைவி, பிள்ளைகள் ஆத்தும வளர்ச்சி அடைய முடியுமா? என்பதை ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள்.*

*நல்ல போதகர்களுக்கும், நல்ல சபைகளுக்கும் நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும். வேதபோதனைகளின்படி சபை நடத்தத் தவறும் போதகர்களை நாம் மதிக்க வேண்டிய அவசியமில்லை. கூலிக்கு மாறடிக் கிறவர்கள் கர்த்தரின் மெய்யான சேவகர்களாக இருக்க முடியாது. சபை என்ற பெயரை மட்டும் வைத்துக்கொள்ளுவதால் ஒரு அமைப்பு ஒரு நாளும் சபையாகி விடாது. வேதம் எல்லா இடங்களிலும் அந்த சபையில் ஆட்சி செய்ய வேண்டும். வேதபோதனையின்படி சபை சட்ட விதிகளும், சபை அங்கத்துவமும், சபை அமைப்பும், நிர்வாகமும், சபைக் கட்டுப் பாடும் இருக்க வேண்டும். வேதத்தை அடிக்கடி பயன்படுத்தி அதன்படி சகலமும் நடைபெறுகிறதா என்று ஆராய்ந்து பார்த்துக் கொள்கிற சபை யாக இருக்க வேண்டும். வேதத்தை மூட்டைகட்டி வைத்துவிட்டுப் பலரும் சபை அமைக்கப் புறப்பட்டிருப்பதாலேயே இன்று நம்மால் நல்ல சபை களைப் பார்க்க முடியாமல் இருக்கிறது. இந்த நிலைமாற உங்கள் பங்குக்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?*

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

**கேள்வி**: *88 பாவிகள் தங்களுடைய பாவத்தின் காரணமாக அனுபவிக்க வேண்டிய தேவ கோபத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் தப்ப கர்த்தர் அவர்களுக்கு என்ன வழியை வெளிப்படுத்தியிருக்கிறார்?*

**பதில்**: *பாவிகள் தங்களுடைய பாவத்திலிருந்து விடுதலை அடைந்து இரட்சிப்பைப் பெறும் ஒரே வழியாக கர்த்தர் அவர்களுக்கு தன்னுடைய குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.*

*(ரோமர் 1:16; அப்போஸ்தலர் 4:12)*

**கேள்வி**: *89 பாவிகள் இரட்சிப்பை அடைவதற்கு கர்த்தர் தன்னுடைய சுவிசேஷத்தின் மூலம் எதை எதிர்பார்க்கிறார்?*

**பதில்**: *தங்களுடைய பாவத்தின் காரணமாக அனுபவிக்க வேண்டிய தேவ கோபத்திலிருந்து தப்பி இரட்சிப்பை அடைய பாவிகள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டுமென்றும், ஜீவனுக்குரிய மனந்திரும்புதலை அடைய வேண்டும் என்றும் கர்த்தர் எதிர்பார்க்கிறார்.*

*(அப்போஸ்தலர் 20:21)*

**விளக்கவுரை:** *சகல மனிதர்களும் நியாயமாக தேவ கோபத்தையும், சாபத்தையும் அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வரப்போகும் நித்திய தண்டனையிலிருந்து தப்ப இயேசு கிறிஸ்து மூலமாக வரும் இரட்சிப்பைத் தவிர வேறு வழியில்லை. இதைத் தெளிவாக இந்த வினாவிடை விளக்குகிறது. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை." (அப்போஸ்தலர் 4:12).*

*88-வது வினாவிடை இரட்சிப்புக்கான வழியை கிறிஸ்துவின் சுவிஷேசம் விளக்குவதாகக் கூறுகிறது. அப்போஸ்தலன் பவுல், "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படமாட்டேன்" என்று கூறுகிறார். தொடர்ந்து "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபலனாயிருக்கிறது" என்கிறார் பவுல். கிறிஸ்துவை வெளிப்படுத்துவதற்காக கர்த்தர் நமக்கு சுவிசேஷத்தை மட்டுமே அளித்திருக்கிறார். அந்த சுவிசேஷத்தை வேதத்தில் மட்டுமே பார்க்க முடியும். பாவிகள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும். வேறு எதன் மூலமும் அவர்கள் கிறிஸ்துவை அறிந்துகொள்ள முடியாது. இன்று சுவிசேஷத்தை விலக்கி வைத்துவிட்டு எதை எதையோ செய்து இயேசு கிறிஸ்துவை பாவிகளுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சியில் பலர் இறங்கியிருக்கிறார்கள். ரோமன் கத்தோலிக்க மதத்திலும், இந்து மதத்திலும் சுவிசேஷத்திற்கு இடமில்லை. இந்த வினாவிடை, இரட்சிப்புக்கு நாம் சுவிசேஷத்தில் முழு நம்பிக்கை வைக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.*

*88-ம் வினாவிடை சுவிசேஷத்தின் அவசியத்தை வலியுறுத்த, 89-ம் வினாவிடை அந்த சுவிசேஷத்தின் மூலம் கர்த்தர் பாவிகளிடம் இருந்து எதை எதிர்பார்க்கிறார் என்பதை விளக்குகிறது. இரண்டு காரியங்களைக் கர்த்தர் எதிர்பார்ப்பதாக இந்த வினாவிடை கூறுகிறது. (1) ஜீவனுக்குரிய மனந்திரும்புதல். (2) இயேசு கிறிஸ்துவில் விசுவாசம். இந்த இரண்டு மில்லாமல் எவரும் தேவ இராஜ்யத்துக்குள் நுழைய முடியாது. பரலோகம் போக முடியாது. பாவி தன்னுடைய பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண் டும் என்கிறது கர்த்தரின் சுவிசேஷம். அதாவது, அவன் தன்னுடைய பாவத்தை உணர்ந்து, அந்தப் பாவத்தின் காரணமாக தேவகோபம் தன் மேல் இருப்பதையும், தான் பரத்திற்கு எதிராகப் பாவம் செய்திருப்பதை யும், அந்தப் பாவத்தில் தொடர்ந்திருக்கும்வரை தனக்கு மீட்பு இல்லை என்பதையும் உணர்ந்து கெட்ட குமாரனைப் போல மெய்யான மனந் திரும்புதலை அடைவது அவசியம். இத்தகைய மனந்திரும்புதலைத் தருகிற வர் பரிசுத்த ஆவியானவர் என்பதை நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். பரிசுத்த ஆவியின் கிரியையினால் ஏற்படுவதே மெய்யான மனந்திரும்பு தல். யூதாஸினுடைய வாழ்க்கையில் நாம் பார்ப்பது போலியான மனந் திரும்புதல். அங்கே பரிசுத்த ஆவியானவரின் கிரியை இருக்கவில்லை. மனந்திரும்புதல் அசாதரணமான அனுபவங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை. சிலர் ஜோன் நியூட்டனைப் போல தங்களுடைய வாழ்க்கையில் அசாதாரணமான அனுபவங்களை அடைந்திருக்கலாம். அதாவது, ஒருவர் விசுவாசத்தை அடையுமுன் நீண்ட காலத்துக்கு பாவத் தின் கோரத்தை தன் வாழ்க்கையில் உணர்ந்து அனுபவித்திருக்கலாம். வேறு சிலருக்கு இந்த மனந்திரும்புதல் குறுகியகால அனுபவமாக மட்டும் இருந்திருக்கும். எல்லோரும் ஒரேவிதமான அனுபவத்தைப் பெற்றிருக்க மாட்டார்கள். இருந்தபோதும் கெட்ட குமாரன் தன் வாழ்வில் அனுப வித்த மனந்திரும்புதலுக்கான மெய்யான அடையாளங்கள் மனந்திரும்பு கிற ஒவ்வொருவரிடமும் காணப்படுவது அவசியம்.*

*இரண்டாவதாக, இந்த வினாவிடை இரட்சிப்புக்காக ஒருவர் கிறிஸ் துவை முழுமனத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்கிறது. இரட்சிப்பை நமக்கு அளிக்கிறவர் இயேசு கிறிஸ்துவே. அவரே இரட்சிப்புக்கான அனைத்தையும் கல்வாரியில் நிறைவேற்றியிருக்கிறார். ஆகையால், அவ ரைப் பாவி தன்னுடைய இரட்சிப்பிற்காக விசுவாசிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தைத் தவிர வேறு எதையும் கர்த்தர் நமக்குக் கொடுக்கவில்லை. தன்னுடைய பாவங்களுக்காக மரித்து தனக்கு பூரண விடுதலை வாங்கித் தந்திருக்கிறவர் இயேசு மட்டுமே என்பதை முழுமனத் தோடு பாவி விசுவாசிப்பது அவசியம். ஜீவனுக்குரிய மனந்திரும்புதலும், விசுவாசமும் இணைந்தே காணப்படும். ஒன்றிருக்கும் இடத்தில் மற்றதை நாம் காணமுடியும். இவற்றின் தனித் தன்மைகளை விளங்கிக் கொள்வதற் காக நாம் இவ்வாறு இவற்றைத் தனித்தனியாகப் படித்தாலும் விசுவாசிக் கின்ற மனிதன் இவை இரண்டையும் ஒருசேர அனுபவிக்கிறான். ஆகவே, மெய்யான மனந்திரும்புதலில் விசுவாசம் இருக்கும் என்பதையும், மெய் யான விசுவாசமிருக்குமிடத்தில் ஜீவனுக்குரிய மனந்திரும்புதல் இருக்கும் என்பதையும் புரிந்து கொள்வது அவசியம்.*

# ஆதி சபையின் அற்புத வரங்கள்

எழுதியவர்:

**ஆர். பாலா**

**(ஆசிரியர்: திருமறைத்தீபம்)**

1 கொரிந்தியர் 12-14 அதிகாரங்களுக்கான தெளிவான விளக்கவுரை

## பின் இணைப்பு:

**1. அப்போஸ்தல வரங்கள்**
**2. பழைய, புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள்**
**3. சுவிசேஷ ஊழியத்துக்கு அந்நியபாஷை அவசியமா?**
**4. விசுவாச ஜெபம்**

பதினான்கு அதிகாரங்களையும் இருநூற்றிப் பன்னிரெண்டு பக்கங்களையும் கொண்டது இந்நூல். ஒவ்வொரு விசுவாசியும் திறந்த மனத்தோடு வாசித்துப் பயனடைய வேண்டிய நூல். இதற்கான விலை மற்றும் தபால் செலவு பற்றிய விபரங்களுக்கு கீழ்வரும் முகவரிக்கு எழுதுங்கள்:

**சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்**
**22 டி. பி. கே மெயின் வீதி,**
**பைகாரா, மதுரை 625 004**
**தமிழ்நாடு, தென் இந்தியா**
**தொலைபேசி எண்: 0452 5505810**

# பிரசங்கத்தில் 'உதாரணங்கள்'

பிரசங்கத்தின் அறிமுகம் எப்படி அமைய வேண்டும் என்பதை கடந்த இதழில் ஆராய்ந்தோம். இதுவரை பிரசங்கத்தின் மிக முக்கியமான அம்சங்களை எல்லாம் தெளிவாகவும், விரிவாகவும் பார்த்து வந்திருக்கிறோம். பிரசங்கத்தின் உள்ளமைப்பு சம்பந்தமான இன்னுமொரு அம்சத்தை இந்த இதழில் பார்க்கப் போகிறோம். இது பிரசங்கத்தில் பிரசங்கிகள் பயன்படுத்த வேண்டிய உதாரணங்களைப் பற்றியது.

பிரசங்கி, பிரசங்க வாக்கியத்தை இலக்கண பூர்வமாக ஆராய்ந்து அதன் முக்கிய போதனையை விளங்கிக்கொண்டு அதன் அடிப்படையில் பிரசங்கத்தைத் தயாரித்து ஆத்துமாக்களுக்கு முன் சமர்ப்பிக்கின்றபோது அந்தப் பிரசங்கத்தில் கொடுக்கப்படுகிற போதனைகளுக்கு தகுந்த உதாரணங்களைக் காட்டி விளக்குவது அவசியம். உதாரணங்கள் விளக்கப்படுகின்ற சத்தியத்தை பளிச்சென்று புரியவைக்க உதவுகின்றன. பல வசனங்களின் மூலம் நாம் விளக்குகின்ற செய்தியை அவை சிறுநொடியில் இடிபோல் இதயத்தைத் தாக்கி விளங்க வைக்கின்றன. உதாரணத்திற்கு இயேசு கிறிஸ்து மலைப்பிரசங்கத்தில் பயன்படுத்தியுள்ள சில உதாரணங்களைக் கவனித்துப் பாருங்கள் (மத்தேயு 6:29, 30). நமது இருதயத்தில் கொடிய பாவங்களைத் தலைதூக்கவிட்டால் அவை நமது வாழ்க்கையையே கெடுத்துவிடும் என்பதை விளக்க இயேசு இந்த வசனங்களில் நமது சரீரம் பற்றிய உதாரணங்களைத் தந்து சத்தியத்தை விளக்குகிறார். இப்படி அநேக உதாரணங்களை இயேசு கிறிஸ்து தனது பிரசங்கங்கள் முழுவதும் பயன்படுத்தி இருப்பதைப் பார்க்கிறோம் (மத்தேயு 6:22, 23; 7:3, 4; 7:9, 10; 7:13, 7:16–19). இதைப் பற்றிக் குறிப்பிடும் பிசப் ஜே. சி. ரைல், “அவர் உதாரணத்திற்காகப் பயன்படுத்தாத, அவர் கண்ணில்படாத எந்தப் பொருளும் இருக்கவில்லை. . .அவர் போன பாதையில் நடந்து அவரைப் பின்பற்றப் பாருங்கள்” என்கிறார் (*Upper Room*, 48p, J. C. Ryle).

இதே முறையில் பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் அனேக உதாரணங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். எரேமியாவின் உதாரணங்களைக் கவனித்துப் பாருங்கள் – ஒன்றுக்கும் உதவாமற்போன கச்சை (13); குயவனும், களிமண்ணும் (18); கூடை நிறைந்த அத்திப் பழங்கள் (24). ஓசியாவின் கோமேரை எண்ணிப் பாருங்கள். ஓசியாவின் தீர்க்கதரிசனத்திற்கு ஒளியூட்டுவதே அந்தக் கோமேர்தான். அதேபோல் சங்கீதப் புத்தகத்திலும், நீதிமொழிகளிலும் இப்படி உதாரணங்கள் நிரம்பி வழிவதைப் பார்க்கலாம். புதிய ஏற்பாட்டில் பவுலும், பேதுருவும், யாக்கோபுவும் ஏனைய அப்போஸ்தலர்களும் தங்கள் செய்திகளில் தேவையான இடங்களிலெல்லாம் உதாரணங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

## பொருத்தமான உதாரணங்களின் பல்வேறு பயன்பாடுகள்

*உதாரணங்கள் நாம் கொடுக்கும் செய்தியை விளங்க வைப்பதாக இருக்க வேண்டும். அதுவே அவற்றின் பிரதான நோக்கமாகும். நாம் விளக்குகின்ற சத்தியத்தை தெள்ளத் தெளிவாக புரிய வைப்பதாக உதார ணங்கள் இருக்க வேண்டும். உதாரணங்களைக் கொடுக்க வேண்டுமென்ப தற்காக உதாரணங்களைத் தேடி அலையக்கூடாது. அவசியமில்லாமல் உதாரணங்களைப் பயன்படுத்தக்கூடாது. எப்பொழுதும் பிரசங்கத்தில் நாம் முதலில் சத்தியத்தை விளக்க வேண்டும். அதற்குப்பிறகு அந்த சத்தியத்தை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கக்கூடியதாக இருக்கும் உதாரணங்களைப் பயன்படுத்த வேண்டும். ஆகவே, முதலில் வருவது சத்தியம். அடுத்து வரவேண்டியது அந்த சத்தியத்தை நெஞ்சில் பதிய வைக்கும் உதாரணம். இது எல்லாப் பிரசங்கங்களிலும் கடைப்பிடிக்க வேண்டிய முறையாகும்.*

*இந்த உதாரணங்கள் பழமொழிகளாக இருக்கலாம். உவமைகளாக இருக்கலாம். உருவகங்களாக இருக்கலாம். வாழ்க்கை சம்பவங்களாக இருக்கலாம். வரலாற்று அம்சங்களாக இருக்கலாம். நாமே உருவாக்குகின்ற கதையாகக்கூட இருக்கலாம். ஆனால், இவை பிரசங்கத்தில் சத்தியத்தை விளக்க அவசியமாக இருந்தபோதும் நாம் சொல்லப்போகிற செய்தியை விட இவற்றிலேயே நாம் அளவுக்குமீறிய கவனத்தை செலுத்தக்கூடாது. உதாரணங்களை எப்படி உணர்ச்சி வசப்படும் விதத்தில் சொல்ல வேண் டும் என்பதில் அக்கறை காட்டி மேடை நடிகனைப்போல பிரசங்க மேடையில் நடித்து மக்களைக் கவரப் பார்க்கிறவன் மெய்ப்பிரசங்கியாக இருக்க முடியாது. அவன் மனித உணர்ச்சிகளோடு விளையாடுகிற நயவஞ் சகன். அப்படிப் பிரசங்கிக்கிற போதெல்லாம் நெஞ்சை உலுக்குகிற விதத் தில் கதை சொல்லி கண்ணீர் விடுகிற தமிழ்நாட்டுப் பிரசங்கிகளை நானறிவேன். இந்த மனிதர்கள் பிரசங்க ஊழியத்தையே அசிங்கப்படுத்தும் அயோக்கியர்கள். இத்தகைய மேடை நாடகத்தை மார்டின் லொயிட் ஜோன்ஸ் 'பிரசங்க விபச்சாரம்' என்று அழைக்கிறார்.*

*பிரசங்க செய்தியை விளங்க வைப்பது உதாரணங்களின் பிரதான நோக்கமாக இருந்தபோதும் அவை மேலும் நான்கு விதங்களில் பயன் படுகின்றன என்று அல்பர்ட் என். மார்டின் விளக்குகிறார்.*

> *(1) பிரசங்கத்தைக் கேட்பவர்களுடைய கவனத்தைக் கவருவதற்கு அவை உதவுகின்றன. 'நான் உங்களுக்கு இப்போது ஒரு கதை சொல்லப போகிறேன்' என்று பிரசங்கத்தை ஆரம்பித்தால் தூங் கிக் கொண்டிருப்பவர்களையும் அது தட்டியெழுப்பும். டாக்டர். ஜே. அடம்ஸ் உதாரணங்களின் வல்லமையான பயன்பாட்டைப் பின்வருமாறு விளக்குகிறார்: "ஒரு பிரசங்கி அமலேக்கியர்களைப் பற்றிப் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது சபையில் பலர் கண்ணயரத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுடைய தலைகளும் தூக்கக்கலக்கத்தால் ஆட ஆரம்பித்தன. அதைக் கவனித்த பிரச ங்கி 'நான் இப்போது யுத்தகாலத்தில் என்னுடைய வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உங்களுக்கு சொல்லப் போகிறேன்" என்று*

கூறினார். திடீரென சபையார் நிமிர்ந்து உட்கார்ந்து கவனத்தோடு அவர் சொல்லப் போவதைக் கேட்பதில் குறியாக இருந்தார்கள். உதாரணங்கள் இந்த விதத்தில் பிரசங்கத்தைக் கேட்பவர்களுடைய கவனத்தை நம்பக்கம் இழுக்க உதவுகின்றன.

(2) உதாரணங்கள் சில வேளைகளில் பிரசங்கத்தைக் கேட்பவர்களுடைய இருதயத்தைத் திடீரெனத்தாக்கி அவர்களுடைய கவனத்தைத் திருப்ப உதவுகின்றன. தாவீது செய்த பாவத்தைச் சுட்டிக் காட்ட வந்த நாத்தான் ஒரு உவமையை அவன் முன் விளக்கி அவனுடைய இருதயத்தைத் தாக்கினான் (2 சாமுவேல் 12). ஆரம்பத்தில் தாவீது அதை உணராவிட்டாலும் நேரம் போகப் போக நாத்தான் சொல்லுவதன் பொருள் அவனுக்கு புரிய ஆரம்பித்தது. அவனுடைய இருதயமும் அவனைத் துன்புறுத்த ஆரம்பித்தது. மத்தேயு 28ல் இயேசு கிறிஸ்து தன்னுடைய நிலத்தை வாடகைக்குவிட்ட கேடான ஒரு மனிதனைப் பற்றிய உவமையை விளக்கி இறுதியில் அது யாரைக் குறிக்கிறது என்பதை இடிபோல் விளக்கினார். அத்தோடு, தேவ இராஜ்யத்துக்கான கனிகொடுப்பவர்களுக்கு மட்டுமே அந்த இராஜ்யம் சொந்தமானது என்று கூறி கேட்டுக் கொண்டிருந்தவர்களுடைய இதயத்தையும் தாக்கினார். தங்களைப் பற்றியே இயேசு பேசுகிறார் என்பதை அவர்களும் புரிந்து கொண்டார்கள். இந்த வகையில் உதாரணங்கள் கேட்போரின் கவனத்தை நம்பக்கம் ஈர்ப்பதற்கு உதவுகின்றன.

(3) உதாரணங்கள் பிரசங்கங்களை கேட்பதற்கு சுவையானதாகவும், கேட்பவர்களை ஈர்க்கக்கூடியதாகவும் இருக்கும்படிச் செய்கின்றன. ஸ்பர்ஜன் இதில் கைதேர்ந்தவராக இருந்தார். அவர் பின்வருமாறு கூறுகிறார்: “உதாரணங்கள் பிரசங்கத்தை அழகுபடுத்துவது போல் வீட்டை ஜன்னல்கள் அலங்கரிக்கின்றன. ஜன்னல் இல்லாத வீடு சிறையைப் போல இருக்கும். அந்த வீட்டை எவரும் வாடகைக்கு எடுக்கமாட்டார்கள். அதேபோல் உதாரணங்கள் இல்லாத பிரசங்கங்கள் கேட்பவர்களின் சரீரத்தை அசதியுறச் செய்யும். போதனையாகிய இறைச்சியில் இருக்க வேண்டிய உதாரணங்களாகிய உப்பைப் போட மறக்காதீர்கள்.”

(4) இறுதியாக, “உதாரணங்கள் நாம் கேட்கும் சத்தியங்களை ஆத்துமாக்கள் மறக்காமல் மனதிலிருத்திக் கொள்ளுவதற்கு உதவுகின்றன” என்கிறார் அல்பர்ட் என், மார்டின். 1992ல் நான் தமிழகத்தில் ஒரு கிறிஸ்தவ கன்வென்சனில் பேசினேன். அந்தக் கூட்டத்தில் பிரசங்கித்தபோது சத்தியத்தைக் கேட்பவர்களுடைய மனதில் பதிய வைப்பதற்காக நான் பயன்படுத்திய ஒரு வார்த்தைப் பிரயோகத்தை இன்றும் நினைவுகூறி என்னிடம் ஞாபகப்படுத்துபவர்களை தொடர்ந்து சந்திக்கிறேன். உதாரணங்கள் அந்த வகையில் சத்தியங்களை ஆத்துமாக்களின் இருதயத்தில் ஆழமாகப் பதிய வைக்கின்றன.

## உதாரணங்களைப் பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்கள்

உதாரணங்களை என்னென்ன காரணங்களுக்காக பயன்படுத்த வேண்டும் என்று கூறினோமோ அந்தக் காரணங்களில் இருந்தே அவற்றை பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்களும் உருவாகின்றன. உதாரணங்கள் எல்லோராலும் பாராட்டப்படுபவை. அத்தோடு அவை கேட்பவர்களின் கவனத்தை ஈர்ப்பவை. இந்த வகையில் வலிமையுடையவையாய் உதாரணங்கள் இருப்பதால் பிரசங்கி அவற்றைத் தன்னுடைய பிரசங்கங்களில் அதிகமாகவே பயன்படுத்திவிடக்கூடிய ஆபத்து இருக்கிறது. தேவைக்கு அதிகமாக பயன்படுத்தப்படும் உதாரணங்கள் கொடுக்க வேண்டிய வேத போதனைக்கான நேரத்தையும் மிஞ்சிவிடுகின்றன. வேதபோதனைகளை விளக்க வேண்டிய நேரத்தை ஆக்கிரமிக்கும் எதுவுமே பாவமாகும். உதாரணங்கள் போதனைகளை விளங்கிக் கொள்ளுவதற்கு மட்டுமே துணை செய்ய முடியும். அவற்றால் வேதபோதனைகளை அளிக்க முடியாது. வேத போதனைகளே இரட்சிப்புக்குரிய ஜீவனை அளிக்கின்றன. வெறும் உதாரணங்களால் அதனைச் செய்ய முடியாது. "நன்றாகப் பயிற்றுவிக்கப் பட்ட ஒரு சபை பன்னிரண்டு கரண்டி இனிப்புப் போட்ட காப்பியைக் குடித்து நாம் முகம் சுழிப்பதுபோல் தேவைக்கதிகமான உதாரணங்களைக் கொண்ட பிரசங்கத்தைக் கேட்டு முகம் சுழிக்கும்" என்கிறார் அல்பர்ட் என். மார்டின். ஸ்பர்ஜன் இதைப்பற்றிக் கூறும்போது "உதாரணங்களின் அவசியத்தை நாம் வலியுறுத்தினாலும் ஒரு வீட்டை அதன் ஜன்னல் தாங்காமலிருப்பதுபோல் உதாரணங்களும் பிரசங்கத்தைத் தாங்குவதில்லை" என்கிறார். "அதனால் பிரசங்கத்தில் அதிகமாக உதாரணங்கள் இருப்பதாகாது. தேவைக்கதிகமாக ஜன்னல்கள் இருந்தால் வீட்டுக்கு ஆபத்து அதேபோல், அதிகமான உதாரணங்களால் பிரசங்கத்துக்கு ஆபத்து" என்கிறார் ஸ்பர்ஜன். மார்டின் லாயிட் ஜோன்ஸ், "உதாரணங்கள் நமக்கு ஊழியர்கள். அவற்றை நாம் சிறிதளவாகவும் கவனத்தோடும் பயன்படுத்த வேண்டும். என்னுடைய பல்லாண்டு காலப் பிரசங்க அனுபவத்தின் அடிப்படையில் நான் சொல்ல விரும்புவதென்னவென்றால், தேவைக்கதிகமான உதாரணங்களை உங்களுடைய பிரசங்கத்தில் பயன்படுத்துவீர்களானால் உங்களுடைய பிரசங்கம் பலனில்லாமல் போய்விடும் என்பதுதான்" என்கிறார்.

வெளிப்படையானதும், தெளிவானதும், இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதுமான போதனைகளை விளக்க உதாரணங்களை ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது. விளக்கப்படுத்த அவசியமேயில்லாத போதனைகளை உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்க முயற்சிப்பது அந்த சத்தியங்களை இழிவுபடுத்தும் செயலாகும். சபையார் தகுந்த அறிவில்லாதவர்களாகவும், சிந்திக்கும் பக்குவம் இல்லாதவர்களாகவும் இருந்தாலொழிய இலகுவாக புரியக்கூடிய போதனைகளை விளக்குவதற்கு உதாரணங்களைப் பயன்படுத்தக்கூடாது. தேவையில்லாமல் உதாரணங்களை பிரசங்கத்தில் சேர்ப்போமானால் அது பிரசங்கம் கேட்பவர்களுக்கு சலிப்பூட்டும். அந்தவகையிலான அனாவசியமான உதாரணங்கள் பிரசங்கத்தைப் பாழாக்கி கேட்பவர்களுக்கு எந்தப் பலனையும் கொடுக்காமல் போய்விடும்.

## உதாரணங்களைப் பயன்படுத்தும் முறை

நம்முடைய அன்றாடப் பேச்சுவழக்கில் நாம் பழமொழிகளையும், உவமான, உவமேய, உருவகங்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். தமிழிலக்கியம் படித்த பிரசங்கிகள் தமிழர் மத்தியில் குறைவாக இருப்பது இன்றைக்கு பிரசங்கத்தில் பயன்படுத்தும் மொழிநடை மோசமாக இருப்பதற்கு ஒரு முக்கிய காரணம். "அன்றாடப் பேச்சு வழக்கில் பழமொழிகளையும், உவமான உவமேயங்களையும் பயன்படுத்துங்கள். ஆரம்பத்தில் இது ஒரு மாதிரியாகப்பட்டாலும் போகப் போக அதன் பயன் தெரியும்" என்கிறார் அல்பர்ட் என். மார்டின்.

இதை எழுதிக் கொண்டிருக்கும்போதே என்னுடைய மேசையில் சி. வேலுசாமி எழுதிய பழமொழிகளின் தொகுப்பு பக்கத்திலேயே இருப்பதைப் பார்க்கிறேன். அதை நான் அடிக்கடி வாசித்து பழமொழிகள் மறந்து விடாமல் இருக்கப் பார்த்துக் கொள்வது வழக்கம். ஒவ்வொரு பிரசங்கியும் இத்தகைய நூல்களை வாங்கிப் படிக்க வேண்டும். அது பிரசங்க மொழிநடை தேர்ச்சி அடைய மிகவும் உதவும். தமிழ்மொழி பழமொழிகள், அடைமொழிகள், உவமைகள், உருவகங்கள் நிறைந்த அழகிய தொன்மையான மொழி. நாம் சத்தியத்தை விளக்கும்போது, அச்சத்தியம் ஆழமாகக் கேட்கிறவர்கள் மனதில் பதிய நமது மொழியின் அநேக சிறப்பான அம்சங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நான் ஒருவருக்கும் பயந்தவனல்ல என்பதை விளக்கும்போது "பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது" என்று சொன்னால் அதில் அழுத்தமும், அர்த்தமும் அதிகமாக இருக்கிறது இல்லையா? நான் என்னுடைய இறையியல் மாணவர்களுக்கு போதிக்கும்போது அடிக்கடி பயன்படுத்தியுள்ள ஓர் உதாரணம் 'லட்டு'. முதலில், 'லட்டு' எனக்குப் பிடித்த ஒரு சுவையான இனிப்பு. அதைவிட அதன் பல அம்சங்கள் போதிக்கும் போது சில இடங்களில் சத்தியத்தை விளக்கப் பேருதவி செய்கின்றது.

ஸ்பர்ஜன் பழமொழிகளையும், உருவகங்களையும் பயன்படுத்துவதில் மிகத் திறமைசாலியாக இருந்தார். அவருடைய பிரசங்கங்களை வாசித்துப் பார்ப்பது கதை சொல்லும் முயற்சியில் தேர்ச்சி பெற உதவும். 18-ம் நூற்றாண்டின் பெரும் பிரசங்கியான ஜோர்ஜ் விட்பீல்டும் இதில் கைதேர்ந்தவராக இருந்தார். அவருடைய வாழ்க்கை சரிதத்தில் இது பற்றி எழுதப்பட்டிருக்கிறது. கதை சொல்லியே காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கும் தமிழ்ப்பிரசங்கிகளுக்கும் சத்தியத்தை விளக்குவதற்கு பொருத்தமான கதைகளைத் தகுந்த இடங்களில் பயன்படுத்திய ஸ்பர்ஜனுக்கும், விட்பீல்டுக்கும் வெகுதூரம்.

தகுந்த உதாரணங்களைப் (பழமொழிகள், உருவகங்கள், நடைமுறைச் சம்பவங்கள் ஆகியவை) பெற்றுக்கொள்ளும் நமது முயற்சி முக்கியமாக பிரசங்கத்தைத் தயாரிக்கும்போதே நடைபெறுகின்றது. பிரசங்கத்தை ஓரளவுக்கு நல்லபடியாகத் தயாரித்து எழுத்தில் வடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அதற்குப்பிறகு அந்தப் பிரசங்கத்தை நீங்கள் திரும்பத் திரும்ப வாசித்து எங்கெங்கு பொறுத்தமான உதாரணங்கள் தேவைப்படும் என்பதை ஆராய வேண்டும். சிலவேளைகளில்

உதாரணங்களை இலகுவாகத் தேடிவிடலாம். சிலவேளைகளில் அதற்காக நீங்கள் கடினமாக உழைக்க நேரிடும்.

## உதாரணங்களை எங்கிருந்து பெற்றுக்கொள்வது?

வேதமே இதற்கு நமக்கு உதவும் அருமையான கருவியாக இருக்கிறது. பழைய ஏற்பாடு உதாரணங்களுக்கு அருமையான நூல். அதன் மானுடர்கள், அவர்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள், விசுவாசிகளின் வாழ்க்கை, தீர்க்கதரிசிகள் பயன்படுத்தியுள்ள உதாரணங்கள் என்று பழைய ஏற்பாடு முழுவதும் நாம் பயன்படுத்திக் கொள்ள அவசியமான உதாரணங்களை அள்ளி வீசுகின்றன. பழைய ஏற்பாடு நமக்கு கர்த்தரைப் பற்றிய போதனையை மட்டுமல்லாது இந்த விதத்திலும் பிரசங்கத்திற்குத் தேவையான உதாரணங்களைத் தருகின்றது. அதேவிதமாக புதிய ஏற்பாட்டிலும் இருந்து நாம் உதாரணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்கனவே நான் நமது மொழியிலுள்ள பழமொழிகள், உவமைகள், உவமான உவமேயங்கள், உருவகங்கள், பொருத்தமான கதைகளின் அவசியத்தை விளக்கியிருக்கிறேன். அத்தோடு அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு பிரசங்கி தன்னுடைய கண்களையும் காதுகளையும் எப்போதும் திறந்து வைத்திருக்க வேண்டும். அவன் அன்றாடம் பார்க்கின்ற, கேட்கின்ற காட்சிகள், செய்திகள், விஷயங்கள் தேவ செய்தியை விளக்குவதற்கு அவனுக்குப் பேருதவி செய்யும். நான் எப்போது தமிழ்நாட்டுக்குப் போனாலும் என்னுடைய நண்பர்கள் "ஐயா! நீங்கள் வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டு இந்த அளவுக்கு நம்மூர் (தமிழ் நாட்டு) விஷயங்களை அறிந்து வைத்திருக்கிறீர்களே" என்று ஆச்சரியமாகக் கேட்பார்கள். நாம் பிரசங்கம் செய்கிற, போதிக்கின்ற மக்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள், நாட்டு நடப்புகள் நாம் விளக்குகின்ற சத்தியத்தை ஆழமாக அவர்களுடைய மனதில் பதிய வைக்க உதவும். நமது பிரசங்கம் அவர்களுடைய வாழ்க்கை நடைமுறைக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும். (Preaching must be relevant). மக்களால் கிரகிக்க முடியாதபடி பிரசங்கம் இருந்துவிடக்கூடாது. சிலர் இப்படி அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை பிரசங்கத்தில் உதாரணம் காட்டுவதை பிரசங்கியின் ஆத்மீகக் குறைபாடாகவும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவாததாகவும் கருதுவார்கள். இது ஒரு தவறான கணிப்பு. இப்படி சிந்திக்கிறவர்கள் நல்ல பிரசங்கிகளாக வளரவே முடியாது.

கடைசியாக உதாரணங்கள் பற்றி ஒரு வார்த்தை. உதாரணங்கள் பிரசங்கத்திற்கு சேவகனாக இருக்கும்படி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். பிரசங்கத்தில் கவனம் செலுத்தாமல் உதாரணங்களைத் தேடுவதில் மட்டும் காலத்தை செலுத்தி மேடை நாடகனாவதற்கு வழிதேடிக் கொள்ளக்கூடாது. பிரசங்கிகள் என்ற பெயரில் மேடை நடிகர்களை நாம் அளவுக்கு அதிகமாகவே பெற்று வைத்திருக்கிறோம். அதற்கு மத்தியில் மெய்ப்பிரசங்கியாக ஊழியம் செய்ய வேண்டியது நமது கடமை. "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்" என்பது தமிழ்மொழி. அதை நினைவுகூர்ந்து தகுந்த உதாரணங்களை அளவோடு பிரசங்கத்தில் பயன்படுத்தி சத்தியம் ஒளிவீசும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# எண்ணங்கள்!

இங்கு நான் சபை ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறேன். இங்கு மாற்றலாகி வந்த ஆரம்ப நாட்களிலேயே 'திருமறைத் தீபம்' பத்திரிகை என் கையில் கிடைத்தது. அது எனக்கு மிகவும் பிரயோஜனமாய் இருந்தது. அதைக் கர்த்தர் எனக்கு பரலோகத்தில் இருந்து அனுப்பிய தூதனாகவே கருதி வாசித்துப் பயனடைந்தேன். எத்தனையோ பத்திரிகைகள் இங்கு வெளிவருகின்றன. அவை அனைத்திலும் இத்தனை பிரயோஜனமுள்ள பத்திரிகையொன்றை நான் காணவில்லை. கர்த்தர் உங்களை ஊழியக்காரனுக்கு ஊழியனாய், பிரசங்கிக்கு பிரசங்கியாய் நல்ல கருவியாய் பயன்படுத்தி வருகிறார். இதனால் கர்த்தரைத் துதிக்கிறேன். அநேகரை வேதவெளிச்சத்துக்கு கொண்டுவர ஆவியானவர் உங்கள் மூலமாய் கிரியை செய்வதை என்னால் உணர முடிகின்றது. உங்கள் மூலமாய் கர்த்தர் கொடுக்கும் வார்த்தை மன்னாவை புசிக்கும்போது பிரசங்கம் செய்ய நல்ல தைரியமும் பெலனும் கிடைக்கின்றது. தொடர்ந்து பத்திரிகையை அனுப்பித் தாருங்கள். ஏன் பிரசங்கம்! மற்றும் ஊழியத்துக்குப் பிரயோஜனமான நீங்கள் எழுதியுள்ள நூல்களையும் விலை விபரங்களுடன் அனுப்பி வையுங்கள்.
***– சகோ. டீ. ஜேம்ஸ், வட இந்தியா***

ஐயா, நான் படித்துக் கொண்டிருக்கிறேன். என் சகோதரனிடம் இருந்து திருமறைத்தீபம் காலாண்டு இதழ் கிடைத்தது. மனதில் இருப்பதை உண்மையோடு எழுதுகிறேன். அது என்னை மிகவும் ஊக்குவித்தது. சத்தியத்தை சத்தியமாக எழுதும் உங்களுக்காக ஜெபித்து வருகிறேன். ஆவிக்குரிய வாழ்க்கையில் நான் உண்மையாக வாழ பத்திரிகை எனக்கு வழிகாட்டுகிறது. தயவு செய்து பத்திரிகையை அனுப்பி உதவுங்கள். ***– போல்ராஜ், கேரளா, இந்தியா***

கால்களுக்கு தீபமாய் திகழும் கர்த்தருடைய வசனத்தைக் கண்டு கொள்ள முடியாதபடி, குருட்டாட்டம் பிடித்து அலையும் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் போலித் தீபங்களாய் வலம் வந்து கொண்டிருக்கும் சில்லறைத்தனமான கிறிஸ்தவ இதழ்கள் நடுவில் நிஜ தீபமாய் வலம் வரும் ஓர் கிறிஸ்தவ இதழ் 'திருமறைத்தீபம்'. தேவ பிள்ளைகளின் கால்களுக்குத் தீபமான கர்த்தருடைய வசனத்தை ஒவ்வொருவரும் காத்து நடக்க, திருமறைத்தீபம் தீரநடைபோட, தீர்க்கமாய் சத்தியத்தை உணர்த்த கர்த்தர் அருள் புரிவாராக!
***– தீபநேசன், தமிழ்நாடு, இந்தியா***

உங்களுடைய பரிந்துரையின் பேரில் திருமறைத்தீபம் இதழ்கள் பெற்றுக்கொண்டேன். தொடர்ந்து பத்திரிகையை அனுப்பி உதவுமாறு வேண்டிக் கொள்கிறேன். இன்றைய தமிழ் கிறிஸ்தவ உலகில் சத்தியத்தை மட்டும் மூலாதாரமாகக் கொண்டு வெளிவரும் பத்திரிகைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். அதில் ஒன்று 'திருமறைத்தீபம்' ஆகும். பயனுள்ள செய்திகள், சத்தியங்கள் கிறிஸ்துவுக்குள் ஒவ்வொரு நாளும் வளர உதவும் ஊன்றுகோல்கள் ஆகும். பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு சுயவிளம்பரம் செய்து, சுயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நூற்றுக்கணக்கான புத்தகங்கள், பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருக்கும் இந்நாட்களில் திருமறைத் தீபத்தைப் படிக்கும் ஒவ்வொருவரும் கன்மலையின் மேல் அஸ்திபாரமிட்ட இல்லத்தைப் போல சிறந்த, ஆண்டவருக்குப் பிரியமான பிள்ளைகளாகத் திகழுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ***– பாஸ்டர் பிரெடிரிக், தமிழ்நாடு, இந்தியா***

*வேதரீதியிலான சீர்திருத்த போதனைகளைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமாயிருக்கிறீர்களா? உடனடியாக கீழ்வரும் நூல்களைத் தவறாது வாங்கி வாசியுங்கள். அவை நிச்சயம் உங்கள் கண்களைத் திறக்கும்; இதுவரை அறிந்திராத சத்தியங்களை வெளிப்படுத்தும்; ஆத்மீக உணவளித்து உங்களை உற்சாகப்படுத்தும்.*

## 1689 விசுவாச அறிக்கை

## சிறுவர்களுக்கான வேத உபதேசம்

## சீர்திருத்த விசுவாசம்
## (ஜனவரி 03)

## ஏன் பிரசங்கம்!
## (ஜூலை 03)

## கிறிஸ்தவன் யார்?

*இந்தியாவில் இருப்பவர்கள் இந்நூல்களுக்கான விலை விபரங்களுக்கும், நமது ஏனைய வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளவும் கீழ்வரும் தமிழக முகவரிக்கு எழுதவும்.*

*Reformed Baptist Publications*
*22 T. P. K. Main Road*
*Pykara, Madurai 625004, Tamilnadu, S. India*
*Phone: (0452) 5505810*

*ஸ்ரீ லங்கா வாசகர்கள் இந்நூல்களுக்கான விலை விபரங்களையும் நமது ஏனைய வெளியீடுகளையும் கீழ்வரும் முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

*Diakrisis Book Service*
*19 Rajasinghe Road, Colombo 6, Sri Lanka*

மலர் 10 அக்டோபர் - டிசெம்பர் 2004 இதழ் 4

1. கொள்கைகளற்ற கிறிஸ்துவமா?

2. செழிப்பைக் காட்டி மயக்கும் செழிப்பு உபதேசம்

3. டிஸ்பென்சேஷனலிசம்
   - தோற்றமும் வளர்ச்சியும் (பகுதி 4)

4. உன் வாலிப வயதில் கர்த்தரை நினை!

5. கிறிஸ்துவின் பாடுகள் - ஒரு சில
   கண்டனக்குரல்களுக்கான பதில்

6. போலி ஆவணங்களும், ரோம சபைக் குழப்பமும்

7. சபையா, சாத்தானின் குகையா?

8. கிறிஸ்தவ கோட்பாடுகள்

9. பிரசங்கத்தில் ‘உதாரணங்கள்’

10. எண்ணங்கள்!

Terau Print